தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண்: 233

# திருக்குறள் - பழைய உரை

## அறத்துப்பால்

தஞ்சாவூர் மகாராஜா
சரபோஜியின் சரசுவதி மகால்
நூல் நிலையம், தஞ்சாவூர்.

1990]

[விலை ரூ. 20-00

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண்: 233

# திருக்குறள் - பழைய உரை

## அறத்துப்பால்

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்

டாக்டர் அ. மா. பரிமணம், எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.,

தஞ்சாவூர் மகாராஜா

சரபோஜியின் சரசுவதி மகால்

நூல் நிலையம், தஞ்சாவூர்.

1990]

விலை ரூ. 20-00

முதற்பதிப்பு: 1986

இரண்டாம் பதிப்பு: 1990

© சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

TIRUKKURAL - PALAIYA URAI
(TIRUKKURAL AN OLD COMMENTARY)

அச்சிட்டோர்:
கஜேந்திரா அச்சகம்,
57, தெற்கு ரத வீதி, சிதம்பரம்.
தொலைபேசி எண்: 2910.

# வெளியிடுவோர் முகவுரை.

இந்தியப் பண்பாட்டில் மலர்ந்த நறுமணமிக்க வண்ணப்பூக்களில் நேர்த்தி மிக்கதாக திருக்குறள் போற்றப்படுகிறது. மனித இனத்தின் சிந்தனையில் மலர்ந்த சிறப்பும், தூய்மையும் வாய்ந்த இலக்கியப் பெட்டகமாகத் திருக்குறள் போற்றப்படுகிறது.சிறந்த நீதிநூலாக விளங்கும் இத்திருக்குறள், பல மொழி களில் மொழிபெயர்க்கப்பட்டு உலகம் முழுவதும் மணம் பரப்பி வருகிறது. திருக்குறள் தேசீய நூலாக அறிவிக்கத்தக்க குணநலன்களை உடையது. தலைசிறந்த தமிழ் மறையாகும் உலகப் பொதுமறை, தெய்வத் திருமறை. அறம் பொருள் இன்பம் ஆகியவற்றைத் தருவதில் மன்பதை முழுமைக்கும் பொருந்தும். மனித வாழ்வின் அடிப்படைகளைத் தருவதில் திருமுறையாகத் திகழ்வது திருக்குறள். தான் தோன்றிய நாள் தொட்டு புகழுடன் விளங்கும் இத்திருக்குறளை பயன்படுத்தாத, ஆராயாத தமிழ்ப் புலவரே இல்லை எனலாம். இந்நிலை தமிழினம், மனித இனம் இருக்கும் வரை, ஏன்? இந்த உலகம் உள்ளளவும் தொடரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சரசுவதி மகால் நூலகம், அரிய சுவடிகளிலிருந்து தமிழ், சமஸ்கிருதம், மராத்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் பல புத்தகங்களை வெளியிட்டு வருவது அனைவரும் அறிந்ததொன்று. இத்திருக்குறள் பழைய உரை என்ற நூல் முழுமையாக இல்லை. முப்பாலில் முதற்பாலான அறத்துப்பால் மட்டுமே முழுமையாக

உள்ளது. இதைப் பதிப்பிக்கும் பணியினை முதலில் முது பெரும் புலவர் **க. வெள்ளைவாரணனார்** அவர்களிடம் கொடுத்தோம். பின்னர் அவர்தம் அறிவுரைகளின்படி பேராசிரியர் திரு. **அ. மா. பரிமணம்** அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அவர் எளிய, இனிய முறையில் எல்லோருக்கும் புரியும் வண்ணம் இதனைப் பதிப்பித்துள்ளார்கள். அவர்களுக்கு எமது மனமார்ந்த பாராட்டுக்கள்.

இந்நூலை விரைவில் அச்சிட்டுத் தந்த **கஜேந்திரா அச்சகத்தாருக்கும்** எமது **நன்றி** உரித்தாகிறது. இது போன்ற அரிய நூல்களை வெளியிட உதவி புரியும் மத்திய, மாநில அரசுகளுக்கு எங்களது இதயங்கனிந்த நன்றி. இந்நூல் தமிழக அரசு மான்யத்தின் உதவியால் வெளியிடப்படுகிறது.

இங்ஙனம்,

தஞ்சாவூர்,
17—3—86.

**து. இரா. இராமசாமி, இ. ஆ. ப.**
**மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,**
**சரசுவதி மகால் நூலகம்.**

# பதிப்புரை.

வைய மீன்றதொன் மக்கள் உளத்தினைக்
கையி னாலுரை காலம் இரிந்திடப்
பைய நாவை அசைத்த பழந்தமிழ்
ஐயை தாள்தலை கொண்டு பணிகுவாம்.

பூவார் சோலை மயிலாடப் புரிந்து குயில்கள் இசை பாடக் காமர்மாலை அருகசைய நடக்கும் காவேரியால் விளை சோழ மண்டலத்தினை உள்ளடக்கித் திகழும் தமிழகத்தினை ஞான பூமியாக்கிய பெருமை, அதனை அறந்திகழப் புரந்த பூவேந்தர்களையும், அணி திகழப் பாடிய பாவேந்தர்களையும் சாரும். மாமன்னன் இராசராசன் அமைத்த 'இராசராசேச்சுரம்' எனப்படும் தஞ்சைப் பெருங்கோயிலைப் போலவே, சரபோசி மன்னர் வளர்த்த 'சரசுவதி பண்டாரம்' எனப்படும் சரசுவதிமகால் ஆகிய கலைக் கோயிலும் தஞ்சைப் பெருநகரின் பெருமையைக் காட்டுவதாய் — தமிழ்மக்களின் புற / அகப் பண்பாட்டுப் பெருமையைப் புலப்படுத்துவதாய்த் திகழ்கிறது.

'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்றார் கவியரசர் பாரதியார். இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இந்தக் கவிஞன் கனவினை முன்னரே உணர்ந்து செயற்பட்டாற்போன்று, கி. பி. 18 ஆம் நூற்றாண்டில் தஞ்சையில் அரசோச்சிய சரபோசி மன்னர் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் திகழ்ந்த அரிய பல கலை ஞானச் செல்வங்களை — ஏடுகளைத் தேடித் திரட்டித் தம் 'சரசுவதி மாகலில்' காத்து அதனை ஒரு ஞானப் பண்பலையாக கலைக் கருவூலமாக அடைத்துச் சென்றுள்ளார்.

'சரசுவதி மகால்', தஞ்சைத் தரணியை ஆண்ட மராட்டிய மன்னர் சத்ரபதி சரபோசியின் புகழுடம்பாக இன்றும் திகழ்கிறது.

தஞ்சை மாநகரின் மத்தியிலமைந்த அரண்மனையினுட் சென்று காண்போர், அங்குள்ள கலைக்கூடத்தில் வெண்பளிங்குச் சிலையாய் நின்று அம்மன்னர், தாம் வளர்த்த சரசுவதி மகாலைக் கண்டும் காத்தும் நிற்கும் சிறப்பினைக் காணலாம்.

ஆற்றுப் பெருக்கு அற்று அடிசுடும் அந்நாளும் அந்த ஆறு ஊற்றுப்பெருக்கால் உலகினை உண்பிக்கும் என்பது ஆன்றோர் பொன்மொழியாகும். பொருட் செல்வம் மிகுதியாக இல்லாத போதும், கலைச்செல்வங்களை— அரிய நூல்களை வெளியிட்டு மக்களுக்குப் பயன்படச் செய்யும் சீரிய பணியினைச் சரசுவதி மாகல் தளராது செய்து வருகிறது. இந்நிலையம் தமிழ், வடமொழி, தெலுங்கு போன்ற மொழிகளில் அறிஞர் தேக்கி வைத்துள்ள கலைமாச் செல்வங்களை இந்திய மக்களும், மற்ற மக்களும் பயன்கொள்ளுமாறு, அவற்றைப் பதிப்பித்து வெளியிடும் பணியினைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. ஏட்டில் முடங்கிக் கிடக்கும், கலைச்செல்வங்களை வெளியிட்டு நாட்டில் உலாவரச் செய்யும் மகாலின் பணிமகத்தானது.

இவ்வகையில் திருக்குறள் வெளியீடாக இப்பதிப்பு அமைவது குறிப்பிடத்தக்கது. திறக்குறள் தோன்றிய பின்னர்த் தமிழகத்தில் புலவர் உலகமும் பொதுமக்கள் உலகமும் அதனைக் கற்றுப் போற்றி வருகின்றமை நாடறிந்த உண்மையாகும். அதனால் அதற்குப் பல்வேறு காலத்திலும் பல்வேறு உரைகளும் பதிப்பு களும் வந்துள்ளன. அவ்வாறமைந்த திருக்குறள் உரைகளில் சிலவே அச்சிடப்பட்டுள்ளன. பெயரளவில் அறிந்த உரைகள் சில இன்று கிடைக்கவில்லை. இந்நிலையில் 'சரசுவதி மகால்' கலைக் கருவூலத்தில் இருந்த ஒரு பழைய உரையினைத் தமிழ் மக்கள் பயன்கொள்ளுமாறு பதிப்பித்து வெளியிடச் சரசுவதி மாகல் நூல்கத்தினர் முடிவு செய்து வெளியிடலாயினர். பெயர்

அறியப்படா இவ்வுரையாசிரியர் உரை திருக்குறள் முழுவதற்கும் கிடைக்காமல் பொருட்பாலில் ஒருபகுதி வரையிலான குறள் களுக்கே அமைந்துள்ளது. கிடைத்த அளவில் அதனைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அளிப்பது தக்கதாகும் எனக்கருதி, இவ்வுரை யினை வெளியிடும் சரசுவதிமகால் நூலகத்தார் தமிழ் மக்களின் பாராட்டிற்கு உரியராவர். இந்நூலில் திருக்குறள் அறத்துப் பாலுக் கமைந்த உரைப்பகுதி மட்டும் வெளியிடப்படுகிறது. இந்த வெளியீட்டிற்குப் பின்னர், எஞ்சிய குறள்களுக்கான இப்பழைய உரையின் பகுதி கிடைக்குமானால் அவற்றையும் சரசுவதி மகால் நூலகத்தார் வெளியிட்டுதவுவார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

திருக்குறள் பழைய உரையினைப் பதிப்பிக்கும் பணியினைச் சரசுவதிமகால் நூலகத்தார், முதுபெரும் புலவர், திருமுறைக் காவலர், பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் அவர்களிடம் ஒப்படைத்தனர். அவர்கள் இந்தத் 'திருக்குறள் – பழைய உரையினைக்' கையெழுத்துப் பிரதியோடும், மூலச்சுவடியோடும் ஒப்பிட்டு ஆராய்ந்து, படி எடுத்து முடித்திருந்த நிலையில், தம் பணிகள் மிகுதியால் நூலினை முற்றுவிக்க முடியாமையினைத் தெரிவித்த தோடு, அப்பணியை என்பால் ஒப்படைக்கலாம் என்று பரிந்துரையும் செய்தார்கள். அதனை ஏற்றுச் சரசுவதி மகால் நூலகத்தார் அப்பணியினை எனக்கு அளித்தமையினை, அப்பெருமக்கள் எனக்களித்த பேறாகக் கருதி, நன்றியோடு பதிப்பிக்கும் பணியினை மேற்கொண்டேன். இப்பணியை எனக் களித்த, சரசுவதி மகால் நூலக நிருவாகக் குழுத்தலைவரும் மாவட்ட முன்னாள் ஆட்சியருமாக விளங்கிய பெருமக்களா ருக்கும், இந்நாள் மாவட்ட ஆட்சியரும் சரசுவதிமகால் நூலக இயக்குனருமாக விளங்கும் உயர்திரு. டி. ஆர். இராமசாமி, இ. ஆ. ப. அவர்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்பணியினைச் சிறப்புற நிறை வேற்றுவதில் எனக்குப் பேருதவிபுரிந்த, நூலக நிருவாகப்

பொறுப்பில்விளங்கும் உயர்திரு. அ. பஞ்சநாதன், எம் ஏ. பி லிப் சி, அவர்கட்கும் நூலகத்தில் உள்ள ஏனைய அன்பர்கட்கும் என் உளமார்ந்த நன்றியை உரிமைபாக்குகின்றேன். என்பால் அன்பு கொண்டு என் வளர்ச்சியில் நாட்டம் மிகக்கொண்டு விளங்கும் என் ஆசிரியப் பெருந்தகை முது பெரும்புலவர், பேராசிரியர், க. வெள்ளைவாரணனார் அவர்களுக்கு என்றும் நன்றியனாவேன்.

தஞ்சாவூர்.
10—3—86.

டாக்டர். அ. மா. பரிமணனார்,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,

# திருக்குறள் - பழைய உரை.

## அறத்துப்பால்

## ஆய்வுரை.

---

மானிட உயர்வு.

மனித இனம் பிற உயிரினங்களினும் உயர்ந்து விளங்குவதற் குரிய காரணங்கள் பலவற்றுள் அதன்பால் உயர்ந்து திகழும் கலையுணர்வு ஒன்றாகும் கல் என்னும் சொல்லின் அடியாகத் தோன்றிய கலை என்னும் சொல்லே, அது சிறிது சிறிதாகத் தன் பட்டறிவால் கற்றுணர்ந்து, மேற்கொள்ளப்படுவது என்னும் பொருள் தந்து நிற்கின்றது. சிற் சில அஃறிணை உயிர்களிடத்து, இசையுணர்வு போன்ற கலைக்கூறுகள் உள்ளன போலக் காணப் படினும் அவை நிலைத்து நிற்கவும் தொடர்ந்து வளரவும் வாய்ப்புடையனவாகா. சில யானைகள், கிளிகள், நாய்கள் முதலிய உயிரினங்களை, இசைகேட்டு இயங்குதல் முதலிய நிகழ்ச்சிகளில் பயிற்று வித்தால், அவை பயிற்றுவித்த அவற்றிற் கேற்பச் செயற்படக் காணலாம். அதனால் அவ்வுயிர்களைக் கலையுணர்வு பெற்றனவாகக் கொள்ள இயலாது. அவ்வாறு பயிற்சி பெற்ற உயிர்கள் தாம் பயின்றவற்றை அதே அளவில், இயல்பூக்கச் செயல் போல் திரும்பத் திரும்பச் செய்து வருமே யன்றித் தாமாக அதனைப் பெருக்கிக் கொள்ளவும், தம்மை ஒத்த பிறவுயிர்களுக்குக் கற்றுத் தரவும் இயலாது. அவ்வாறு பழக்கப்பட்ட உயிர்களைச் சேர்ந்த பிறவுயிர்கள், அவற்றைக் கண்டும், கேட்டும், எளிதில் கற்றுக் கொண்டு விடவும் முடியாது. ஒருசில செயல்களைப் பின்பற்றுமாயின் அவை 'போலச் செய் தல்' என்னும் வகையில் அமைந்தவனவாகும்.

மன உணர்வு சான்ற மக்கள் இனம் ஒன்று மட்டுமே, பயிற்சி யாலும் பட்டறிவாலும் தான் பெற்ற கலை உணர்வுகளை வளர்த்துக் கொள்ளவும், தன் பின்தோன்றல்களுக்கு அவற்றை

வழங்கவும், அவ்வாறு வழங்கப் பெறுவனவற்றை ஏற்று வளரவு மான வாய்ப்பினைப் பெற்றுள்ளது. இச்சிறப்பினாலேயே தொல்காப்பியர் உயிர்களை வகைப்படுத்திக் கூறும் போது. 'ஆறறி வதுவே அவற்றொடு மனனே', என்றும், 'மக்கள் தாமே ஆறறி வுயிரே' என்றும் கூறி மானிடத்தின் இயல்பையும் ஏற்றத் தையும் புலப்படுத்தியுள்ளார்.

## கலைப்பயன்.

உணர் திறன், பயன்படும் ஆறு முதலியவற்றைக் கொண்டு, கலைகளை நுண்கலைகள் என்றும், அங்ஙன மல்லாத கலைகள் என்றும் பாகுபாடு செய்துள்ளனர். இக்கலை உணர்ச்சியால், கலைவகை சாராமல் உயிர்களின் அடிப்படை இயல்பூக்கச் செயல்களாக அமையும் உண்ணல், உறங்கல் முதலான செயல் களிலும் கூட மனித இனம் தான் பெற்ற கலையுணர்வின் பயனாகக் காலப் போக்கில் பற்பல மாறுதல்களைப் பெற்று வந்துள்ளன.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த அஃறிணை உயிர் களின் வாழ்க்கைக்கும், அவ்வினங்களின் இன்றைய வாழ்க்கைக் கும் பெரிய வேறுபாடுகளைக் காண இயலாது. தூக்கணாங் குருவிகள் அன்று கட்டிய கூடுகளைப் போலவே தான் இன்றும் கட்டுகின்றன. அன்றைய யானைகளின் வாழ்க்கை முறைகளைப் போலவே தான் இன்றைய யானைகளின் வாழ்க்கையும் அமைந் துள்ளது, பழக்கப்பட்ட யானைகளின் வாழ்க்கை நீங்கலாக. ஆனால், ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்களின் உணவு, உறையுள் முதலியவற்றிற்கும், இக்கால மக்களின் அப்பொருள் களுக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகள் மிகப்பலவாகும். இது மனித இனம் பெற்று வளர்த்துக் கொண்ட கலையுணர்வின் பயனாகும்.

## இலக்கியக் கலை.

விலங்குகளினின்றும் உயர்ந்து, விளங்கும் மனிதனை, மேலும் மேலும் உயரச் செய்து அவனை, நாகரிகனாக – பண்பாட்டா ளனாக உயர்த்துவதற்கு நுண்கலைகள் பெரிதும் பயன்படு கின்றன. இசை, சிற்பம், சித்திரம், இலக்கியம் முதலியன நுண்

கலைகளின் வகைகளாகும். நுண்கலைகளுள் இலக்கியம் தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். இசை, ஓவியம் முதலிய நுண்கலைகள் முறையே கேட்டும் கண்டும் துய்த்தற்குரியன. என்றே ஒருநாத் கேட்டவற்றையும் கண்டவற்றையும் இன்று நினைத்து துன்புவதற்கு இக்கலைகள் ஓரளவு ஏதுவாவன வாயினும் இலக்கியக் கலை போல இடத்தையும், காலத்தையும் கடந்து நின்று, கண்டு பயில்வாரையும் ,கேட்டு உணர் வாரையும் இன்புறுத்தும் இயல்புடையனவாகா.

இலக்கியம் பற்றிக் குறிப்பிடுங்கால் அது வாழ்க்கையில் முகிழ்த்து, வாழ்க்கையில் வளர்ந்து, வாழ்க்கைக்காகவே வாழ் கிறது என்று ஒரு திறனாய்வாளர் குறிப்பிட்டார். இவ்வுண்மை யினையே, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருட் பயன்களையும் நல்குவது நூலாகும் என்று தமிழ்ச் சான்றோர் நூற்பயன் கூறுங்கால் தெளிவு படுத்தியுள்ளனர். இவ்வகையிலமையும் நூல்கள் தோன்றிய காலத்தும், அதற்கு முன்னரும் வாழ்ந்த மக்களின் அனுபவமாய் அமைந்து, அம்மக் களின் பிற்காலச் சந்ததியார்க்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம் மாகத் திகழ்கின்றன.

மனித வாழ்க்கை, ஆங்காங்கே தேங்கி வற்றும் சிறு குட்டை போலல்லாமல், தொடர்ந்து ஓட வேண்டிய தொடர் ஓட்டம் போன்றதாகும். அத்தொடர் ஓட்டத்தில் ஓடுபவர்கள் தொடர்ந்து ஓட வேண்டியவர்களிடம் கொடுத்தனுப்பும் பொருள் போல அமைந்து பயன் நல்குவது இலக்கியமாகும். உயர்ந்த இலக்கியங்கள் காலத்தையும் இடத்தையும் வென்று நின்று மனித குலத்திற்கு நலம் பயப்பனவாகும். அவை, தாம் தோன்றிய சமுதாயத்தின், மொழியின் உயர் தனிச் செவ் விலக்கியச் செல்வங்கள் எனப்படும்.

**சங்க இலக்கியம்.**

நாகரிகத்தில் சிறந்து விளங்கிய சமுதாயங்களில் உயர்ந்த இலக்கியங்கள் தோன்றிச் செழித்துள்ளமையினைச் சமுதாய வரலாறு உணர்த்துகிறது. பண்டைய உயர் நாகரிகங்களாகிய

கிரேக்க, உரோமானிய நாகரிகங்கள் செழித்த நிலையில் அம் மொழிகளில் உயர்ந்த இலக்கியங்கள் தோன்றின. பழங்காலத்திலேயே நாகரிகச் சிறப்பு மிக்க தமிழ்ச் சமுதாயத்திலும் உயர்ந்த பல இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவை, தமிழ் நாகரிகத்தின் தொன்மை, ஏற்றம் போல்வனவற்றைக் காட்டி நிற்பதுடன், அந்த நாகரிகம் காலத்தால் மங்கிவிடாது ஒளிரச் செய்ய வல்ல ஆற்றலளிக்கும் மின்கலங்களாகவும் விளங்குகின்றன.

தமிழில் சங்க இலக்கியங்கள் எனப்படுவன, ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய உயர் தனிச் செவ்விலக்கியங்கள் ஆகும். இவை, தனிப்பாடல்களால் அமைந்த தொகை நூல்களாகும். இவற்றிற்கு அடுத்த நிலையில் உருவாகியது திருக்குறள். தமிழில் தோன்றிய தனி முதல் அற நூலாகத் திகழும் இந்நூல், உலக அறவிலக்கிய நூல் வரிசையின் முன் வரிசையில் இடம் பெறத்தக்க மாட்சியுடையதாகும்.

**திருக்குறள் மாண்பு.**

திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் வரலாறு பற்றியும் காலம் பற்றியும் ஆராய்வாளரிடையே கருத்து வேற்றுமை இருப்பினும், அவர் தமிழகத்தில், தமிழினத்தில் தோன்றிய தமிழ்ப் பேராசான் என்பதில் ஐயமில்லை. இவர்தம் ஒப்பற்ற அற இலக்கியப் படைப்பால் - திருக்குறளால் - தமிழ் மொழியும், தமிழ் இனமும் உலகச் சமுதாய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன.

உலகில் தோன்றிய அற நூல்களில் பெரும்பாலானவை தாம் தோன்றிய இடம், காலம், இனம் ஆகியவற்றிற்குப் பொருந்தும் வகையிலேயே அமைந்துள்ளன. அதனால் அவை, தாம் தோன்றிய இடம், காலம் முதலியவற்றால் வேறுபட்ட மக்களுக்கு இயையாத அறங்களைக் கூறுவனவாகவும் அமைந்து காணப்படுகின்றன. எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும் வாழும் மக்களை மனத்துட் கொண்டு, அவர்கள் அனைவருக்கும் பொருந்துமாறு அறங்கூறும் தனி மாட்சியது திருக்குறள். இவ்வுண்மையினை, மனோன்மணிய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள்,

'வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொரு நீதி' என்று

நுட்பமாகக் கூறியுள்ளார். இதனையே, பரிமேலழகர், "எல்லா நூல்களிலும், நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் (திருவள்ளுவர்க்கு) இயல்பு" என்று குறிப்பிட்டுள்ளார்.

சமயப் பற்று மிக்க காலத்தில், ஓர் அறச் சான்றோர் எத்துணைச் சிறந்த உண்மையினைக் கூறினாலும், அவர் சார்ந்துள்ள சமய வேறுபாட்டால் அதனைப் போற்றாது புறக்கணிக்கும் இயல்பினைக் காண முடிகிறது. ஒரு சமயம் சார்ந்து நின்று கூறப்படும் உண்மைகளைப் பிற சமயம் பற்றாளர் ஏற்கத் தயங்குதல் கூடும் தெய்வத்தினை உடன்பட்ட தமிழகச் சமயங்களுள் ஒன்றினைச் சார்ந்தவராக இருந்த போதிலும் அதனை வெளிப்படப் புலப்படுத்தாது, பொதுமை நிலையில் நின்று அறங்கூறிய திருவள்ளுவரின் படைப்பு, உலகப் பொது அறநூல் எனத்தரும் மாட்சியுடையதாகத் திகழ்கின்றது இதனால் கல்லாடனார்,

'சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் அறிப் பொருள் இது வென்ற
வள்ளுவன்' என்று திருவள்ளுவரைப் பாராட்டி

யுள்ளார்.

இன்று திருக்குறளை ஆராய முற்படும் பல்வேறு சமயப் பெருமக்களும் அது தங்கள் தங்கள் சமயச் சார்புடையது என்று நிறுவ முற்படும் காட்சியினைக் காணக்கூடும். தங்கள் சமயக் கோட்பாட்டிற்கு இந்த இந்தக் கருத்துக்கள் ஏற்றனவல்ல என்று கருதி, அதனால் திருக்குறளைப் புறக்கணித்து விடாமல், இந்த இந்தக் கருத்துக்கள் தங்கள் சமயக் கோட்பாட்டிற்கு இயைந்தன என்று காட்டி இது தங்களுக்கு உகந்த நூல் என்றும், இதனை இயற்றிய ஆசிரியர் தங்கள் சமயத்தவர் தாம் என்றும் போற்றிக் கொள்ளும் நிலை உள்ளது. தெய்வங்கொள்கையை உடன்படாத நெறியினரும், தங்கள் கோட்பாட்டிற்கு மாறுப்பட்டனவாகக் காணப்படும் குறள் தொடர்களுக்குத் தங்கள் கருத்தினுக்கு ஏற்றவாறு, பொருள் கண்டு, திருக்குறளையும் அதன் ஆசிரியரையும்

போற்றிப் பரப்ப முற்பட்ட நிலையினையும் இன்று காண முடிகிறது. அறங் கூறும் பாங்கில் வள்ளுவர் மேற்கொண்ட இந்த உத்தி அவருக்குப் பெரு வெற்றியினை ஈட்டித் தந்தது இது, காலம், இடம், மொழி, இனம் முதலியவற்றால் வேறுபடும் மக்கள் குலம் அனைத்தையும், 'மானுடம்' என்னும் ஒரே நிலையில் வைத்து, அறங்கூற விரும்பிய வள்ளுவரின் தனி வழியாக அமைந்துள்ளது. அவ்வழியிற் சென்று அவர் கண்டு காட்டிய சமுதாய உண்மை ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்பதாகும்.

## திருக்குறளுக்கு முன்னும், பின்னும்.

திருக்குறள் தான் தோன்றிய காலத்திற்கு முன்னர்த் தோன்றிய அறநெறியாளர்களின் செவ்விய சிந்தனைக் கருவூலமாகவும், தனக்குப் பின்னர்த் தோன்றிய புலவர் பெருமக்களின் படைப்புக்களை செழிப்புறுத்தும் வற்றாத வளஞ் சான்ற ஊருணியாகவும் திகழ்கின்றது. பின்னர்த் தோன்றிய இலக்கியங்களின் ஏற்றத்தை உணர்த்தும் காரணங்களில், அவை எந்த அளவிற்குத் திருக்குறளின் கருத்துக்களையும், சொல், சொற்றொடர்களையும் எடுத்தாண்டுள்ளன எனக் காட்டும் இயல்பும் ஒன்று.

தமக்கு முற்பட்ட சிந்தனையாளர்களின் சிந்தனைச் செல்வங்களை நன்குணர்ந்து, தம் கருத்துக்களைத் திருவள்ளுவர் தம் திருக்குறளில் வெளிப்படுத்தியுள்ளார் என்பதற்கு, 'யாமெல்யாக் கண்ட வற்றுள்' என்றும், நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் என்றும், 'இவ்விரண்டும் கண் என்ப வாழு முயிர்க்கு', என்றும் வரும் திருக்குறள் தொடர்களே சான்றாக அமையும். 'ஆன் முலை அறுத்த அறனிலோர்க்கு' எனத் தொடங்கும் புறப்பாடல்

'நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்
செய்தி கொன்றார்க்கு உய்தி யில்லென
அறம் பாடிற்றே ஆயிழை கணவ' என்று

செய்ந்நன்றி கொன்றவர் எய்தும் நிலையினை விளக்கியுள்ளது.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்று அந்நிலையினைத்

திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். கபிலர் தம் நற்றிணைப் பாடல் ஒன்றில்,

'பெரியோர் நாடி நட்பினல்லது
நட்டு நாடார் தம் ஒட்டியோர் திறத்தே' என்று நட்புக் கோடலைப் பற்றிக் கூறியுள்ளார். இதனைத் திருவள்ளுவர்,

'நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு' என்று தெளிவுபடுத்திக் காட்டியுள்ளார், 'ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே' என்னும் புறநானூற்றுத் தொடரும், 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்' என்னும் திருக்குறள் தொடரும் பொருளாலும், சொல்லாலும் ஒன்றுபட்டு நிற்கின்றன. 'காமர் கடும் புனல்' எனத் தொடங் கும் கலித்தொகைச் செய்யுளில் அமைந்த,

'வருமுலை புணர்ந்தன என்பதனால் என்தோழி
அருமழை தரல் வேண்டின் தருகிற்கும் பெருமையளே'

என்னும் பகுதியின் கருத்தும்,

'தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை' என்ற திருக்குறளும் கருத் தால் ஒன்றுபட்டுத் திகழ்கின்றன. இவ்வாறு தொடராலும் கருத்தாலும் இயைந்து காணும் பகுதிகளைக் கொண்டு திருக்குறள் சங்க நூல்களுக்கு முற்பட்டது என்று கொள்வோரும், உள்ளனர்.

திருக்குறளுக்குப் பின்னர்த் தோன்றிய 'மணிமேகலை'; இந் நூலையும் இதன் ஆசிரியரையும் சுட்டி,

'தெய்வந் தொழாஸ்— தொழுநற் றொழுவான்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய் எனப்

போற்றியுள்ளது.

திருக்குறள் தோன்றியதற்குப் பின்னர்த் தமிழ் மொழியில் உருவாகிய காப்பியங்கள், சமய இலக்கியங்கள் அனைத்தும்

திருக்குறளால் வளம் பெற்றுள்ளன. மொழியும் சமயமும் வேறுபட்ட பிறநாடுகளிலிருந்து, தமிழகம் போந்து தமிழ் பயின்று தமிழில் நூல்கள் இயற்ற முற்பட்ட புலவர்களும் தங்கள் தமிழ்ப் படைப்புக்களில் திருக்குறள் சொல்லையும், கருத்தையும் பயன்படுத்தியுள்ளனர். இந் நூலின் பெருமையுணர்ந்த மேனாட்டறிஞர்கள் பலர் இதனைத் தத்தம் மொழிகளில் மொழி பெயர்த்துக் கொண்டுள்ளனர். தமிழில் அமைந்த குறள் மூலத்தைக் கற்றறியாது, மொழி பெயர்ப்பில் மட்டுமே கற்றறிந்த ஆல்பர்ட் சுவைட்சர் போன்ற மேல்நாட்டு அறிஞர் பெருமக்கள் இந் நூற் கருத்துக்களின் மாட்சியை உணர்ந்து போற்றிப் புகழ்ந்துள்ளனர். திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரை உருவாக்கிய தமிழ் இனத்தையும் பாராட்டியுள்ளனர்.

**திருக்குறட் செல்வாக்கு.**

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பகுதிகளையும், 133 அதிகாரங்களையும், அதிகாரத்திற்கும் பத்துக் குறள்களாக 1330 குறள்களையும் கொண்ட திருக்குறள், மிகச் சிறந்த அற நூலாகத் திகழ்வதோடு, நயங்கள் பல வாய்ந்த இலக்கியமாகவும் விளங்குகின்றது. இதன் நடை தெளிவும் எளிமையும் கொண்டதாயினும், சிறிது கற்றோரும் இதன் கருத்தினை நன்குணர்ந்து போற்றுதற்கு வாய்ப்பாக, அறிஞர் பலர், பல்வேறு காலங்களில் இதற்கு உரை வரைந்துள்ளார்கள். தாம் வாழ்ந்த காலச் சூழ்நிலையாலும், தாம் மேற்கொண்ட சமயக் கோட்பாடுகளாலும், உரையாசிரியர்களின் உரைகளில் கருத்து வேறுபாடுகள் அமைந்துள்ளமையினைக் காண முடிகிறது. திருக்குறளுக்கு உரை காணுதல் தம் புலமையை வெளிப்படுத்தற்கு அமைந்த சிறந்த வாயிலாகும் என்ற கருத்தும், புத்துரை காணும் கருத்தினைப் புலவர் பெருமக்கள்பால் தோற்றுவித்திருத்தல் கூடும். ஒருகுறட் கருத்தினை விளக்கும் புராணக் கதை, வெண்பாவின் முன்னிரண்டடிகளாகவும் அத்திருக்குறள் அவ்வெண்பாவின் பின்னிரண்டு அடிகளாகவும் அமையுமாறு வெண்பாக்களை அமைத்து, அவ்வகையில் நூலியற்றிய புலவர்களும் உள்ளனர். இவையனைத்தும் திருக்குறள் பொதுவாகத் தமிழ் மக்களிடம், குறிப்பாகப் புலவர்களிடம் பெற்றிருந்த செல்வாக்கினைப் புலப்படுத்துவதாக உள்ளன.

**திருக்குறள் உரைகள்.**

திருக்குறளுக்கு உரை வரைந்த பெரியோர்களின் பெயர்களைத் தொகுத்துக் கூறும் பழைய வெண்பா வருமாறு.

''தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமேலழகர் பரிதி—திருமலையார்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லை உரைஎழுதி னோர்''

இதன்கண் குறிப்பிடப் பட்டுள்ள 10 உரையாசிரியர்களின் உரைகளில் சிலவே இன்று கிடைக்கப் பெற்று, அச்சு வாகனம் ஏறியுள்ளன. மற்றவுரைகள் பயிற்சிக் குன்றி ஏட்டளவிலேயே நின்று வற்றின போலும்! பழங்காலத்தில் சுட்டப் பெற்ற பதின்மருக்கு வேறானவர்களின் உரைகளும் தோன்றி உதிர்ந்திருத்தல் கூடும் பரிமேலழகர் உரை தோன்றிய பின்னர்ப் பிற வுரைகள் செல்வாக்கற்றுப் போயிருத்தலும் கூடும். பரிமேலழகருக்கு முற்பட்டவரான மணக்குடவர் உரைகளும் சிறப்புடையதாயினும், ஆராய்ச்சி உலகிற்குப் பயன் படுவதோடு நின்று விட்டது. பரிமேலழகர் உரையும், அதனை விளக்கும் உரை விளக்கங்களும், அவற்றைப் பின்பற்றி எழுந்த உரைகளுமே இன்று பொதுவாகப் பயிலப்படுகின்றன.

திருக்குறள் பரிமேலழகர் உரை, இதுகாறும் தமிழ் நூல்களுக் மைந்த உரைகளுள் சிறந்ததாகும். அவ்வுரையே ஒரு சிறந்த இலக்கியம் எனத்தகும் செம்மை சான்றது. பரிமேலழகர் தம் உரையினால் திருக்குறள் மூலத்திற்கு ஒரு சிறந்த காப்பரண் செய்துள்ளார் என்றே கூறவேண்டும். திருவள்ளுவர் தம் கருத்துக்களை வெளிப்படுத்தத் தேர்ந்து கொண்ட யாப்பு வடிவம்—குறள் யாப்பு—பயிற்சி மிகுதியாலோ, பிறவற்றாலோ மிகுதியான பாட பேதங்கள் தோன்றாமைக்கு உதவியாக அமைந்ததாகும். அதற்கு மேலும் திருக்குறளுக்குப் பாட பேதம் தோன்றாதவாறு பாதுகாக்கும் வகையில் பரிமேலழகர் உரை அமைந்துள்ளது.

கல்வி வாய்ப்பும் அச்சு வசதியும் மிக்க இந்த நூற்றாண்டில் திருக்குறளுக்கு மிகப் பல உரைகள் தோன்றலாயின. நூல் முழுமைக்குமாகத் தோன்றியனவே யன்றிச் சில பகுதிகளுக்கும், சில குறள்களுக்கும் தனித்தனி உரைகள் தோன்றின. சென்ற

சில நூற்றாண்டுகளில் மேலை நாடுகளில் தோன்றிய புதிய சிந்தனைகளின் தாக்கம் இந்த நூற்றாண்டில் இந்த நாட்டிலும் கால் கொண்டது. அதன் விளைவாக மேலை நாடுகளில் உருவாகி, வளர்ந்த பொருள் முதல் வாதம் முதலிய கோட்பாடுகளின் முழக்கம் தமிழகத்திலும் எதிரொலிக்கலாயிற்று இந்தப் புதிய கோட்பாடுகளின் கருத்துப் பார்வையில் பழந் தமிழ் இலக்கியங்களையும் திறனாய்ந்து காணும் முயற்சி தோன்றியது திருக்குறட் கருத்துக்கள் இப்புதிய சிந்தனைச் சோதனையால் துவண்டு விடாமல் செழித்து விளங்கும் காட்சியினைத் தமிழ் உலகம் கண்டு களிக்கின்றது. அரசு பற்றிய வள்ளுவர் சிந்தனைகள், பொதுவுடைமைக் கோட்பாடு கொண்டோராலும் பாராட்டப்பெறும் சிறப்புடன் விளங்குகின்றன. கற்பின் சிறப்பினை உணர்த்த வந்த திருவள்ளுவர், அதனைச் சமயச் சிந்தனையோடும், பழைய மரபு நம்பிக்கையோடும் இணைத்து.

'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை' என்று கூறியுள்ளார்.

தெய்வங் கொள்கையினையும், பழ மரபு நம்பிக்கைகளையும் உடன்படாது மறுக்கும் சிந்தனையாளர், இக்குறள் கூறும் கருத்தினை உடன்படாமலும், இக்குறளைப் புறக்கணிக்க விரும்பாமலும் இதற்குப் புதிய விளக்கம் காண முற்பட்டு, 'தொழுது எழுபவள், பெய் என்று வேண்டிக் கொண்ட அளவில் பெய்த மழைவினைப் போன்றவளாவாள்' என்று புதிய விளக்கம் தருவாராயினர். இவ்வாறு புதிய சிந்தனைகளுக்கும் இடம் தந்து விளங்கும் சிறப்புக்கொண்டுள்ளது திருக்குறள்.

இவ்வாறு வேறுபாடும் மாறுபாடும் மிக்க உரைகள் தோன்றுவதற்கு வாய்ப்பாகத் திருக்குறள் இருந்தாலும், திருவள்ளுவர் ஒரு கருத்தினை உணர்த்தவே ஒரு குறளினை யாத்திருப்பார். அனைவர்க்கும் பொதுவான அறம் கூறவந்த பாவலர், சிலேடை முதலிய அணி வகையாலும் பிறவற்றாலும் பல உரை படுமாறு தாமே நினைந்து குறளை இயற்றியிருப்பார் என்று கொள்ளுவது ஏற்புடையதாகாது. பல கோணங்களில் நின்று குறளுக்குக் கூறப்படும் உரைகளில், திருவள்ளுவர் கருதிய கருத்தும் இடம்

பெற்றிருக்கலாம்! திருவள்ளுவரின் உள்ளக்கருத்தினை உணர்ந்து கொள்வதற்கு அவருடைய திருக்குறள் மூலமே நமக்கு உரிய கருவியாகும். காலத்தாலும் இடத்தாலும் சேய்மைப்பட்டு விளங்கும் குறளாசிரியர் கருத்தினை உணர்ந்து கொள்ள இவ்வுரையாசிரியர் ஓரளவு உதவியாகலாம். கால வேறுபாட்டால் அவ்வப்போது சமுதாயத்தில் தோன்றும் சிந்தனைகளின் செல்வாக்குகளைத் திருக்குறளின் பல்வேறு உரைகளால் உணர்ந்து கொள்ள இயலும். இந்த வகையில் திருக்குறளுக்கு எத்தனை உரைகள் தோன்றினாலும் அவை போற்றுதற்குரியனவேயாகும்.

ஆராய்ச்சி வேட்கை மிக்க நிலையில் திருக்குறளின் பல உரைகளை ஒரே நூலில் பதித்துக் காணும் முயற்சியின் பயனாகத் திருக்குறள் உரைவளம், உரைக்கொத்து போன்ற வெளியீடுகள் தோன்றின. மேலும் ஒரு குறளுக்கமைந்த பலர் உரைகளிற் காணும் வேற்றுமைகளை மட்டும் ஒருங்கே தொகுத்துத் திரட்டி, அவற்றுள் தக்கது என்று தாம் கருதும் கருத்தினைச் சான்றொடு விளக்கும் முயற்சியின் பயனாகத் திருக்குறள் உரை வேற்றுமை என்னும் நூல் உருவாகியது. திருக்குறளை ஆய்வு செய்வதற்காகச் சென்னை, மதுரை, அண்ணாமலை ஆகிய பல்கலைக் கழகங்களில் தனி இருக்கைகளை அமைத்து, ஆய்வு மேற்கொள்ளப்படும் நிலைதோன்றியது.

## சரசுவதி மகால் நூலகத் தொண்டு.

தமிழ், வடமொழி முதலிய மொழிகளில் எழுதப் பெற்று, அச்சுருப் பெறாது ஏட்டில் முடங்கிக் கிடக்கும் கலைச் செல்வங்களை வெளியிடும் சீரிய பணியினைத் தன் கடமையாகக் கொண்டு செயற்படும், தஞ்சைச் சரபோசி மன்னர் சரசுவதி மகால் நூலகம் தன் வெளியீடாகத் திருக்குறள் பகுதியினை வெளிக் கொணரமுன் வந்தமை பாராட்டுதற்குரியதாகும் நூல் முழுவதற்குமான உரைப்பகுதி கிடைக்காத நிலையில் குறைப் பிரதியாக இருக்கும் ஒன்றினை வெளியிட முற்பட்ட நூலகத்தின் பணி போற்றத்தக்கதாகும். சென்னை அடையாற்றிலுள்ள டாக்டர். உ. வே. சாமினாதையர் நூல் நிலையம் ஒரு திருக்குறள் பழைய உரையினை வெளியிட்டுள்ளது சரசுவதி மகால் வெளியிடும் இவ்வுரையின் ஆசிரியர் பெயர் அறிய

படாமையினும், காலப் பழமை கருதியும் இவ்வுரை 'திருக்குறள் பழைய உரை' என்ற பெயரோடே வெளி வருகின்றது.

## இந்தப் பழைய உரை.

இந்த உரையின் ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. மேலும் உரையின் போக்கினை நோக்கும் போது, இது, பரிதியார் உரையினை பின்பற்றி அமைந்துள்ளதாகத் தெரிகிறது. சில குறள்களுக்குப் பரிதியார் கூறிய உரையின் விளக்கமாக அமைந்துள்ளது எடுத்துக் காட்டாக 'அகர முதல எழுத்தெல்லாம்' என்னும் முதற் குறளுக்குப் பரிதியார் உரையும், இப்பழைய உரையும் பின் வருமாறு அமைந்துள்ளன.

> 'உயிரெழுத்துப் பன்னிரண்டுக்கும் அகரம் முதலெழுத்தாதல் முறைமை போல: ஆதியான பகவன் முதலாம் உலகத்துக்கு என்றவாறு'. —பரிதியார்

> 'அகர நாதமே உயிரெழுத்துப் பன்னிரண்டு, மற்ற எழுத்துக்கெல்லாம் நிறைந்திருக்கும் முறைமை போல ஆதி பகவானான திருவுளம் சகல உயிர்கள் சராசரங்கள் உலக முதலானவைக் கெல்லாம் ஒருத்தனே நிரம்பிப் பூரணமாயிருப்பான் என்றவாறு. —இப் பழைய உரை.

## உரையாசிரியர் சமயம்.

இவ்வுரையாசிரியர் ஊர் பெயர் முதலியன அறியக்கூடவில்லை ஆயினும், தெய்வம், விதி, சமயம் பற்றிய கருத்துக்களை விளக்கும் போது இவர் மேற்கொண்ட சமயத்தினை ஒரு வகையால் உணர முடிகிறது. குறளில் தெய்வம் முதலியன பற்றி விளக்கம் செய்ய வேண்டிய பகுதிகளுக்கு, இவர் தெளிவாகச் சைவ சமயச் சார் புடையவராகவே விளக்கம் தந்துள்ளார். இறைவன் (4) என்பதற்குச் 'சிவன்' 'என்றும், 'வேண்டுதல் வேண்டாமை இலான்' (5) என்பதற்கு 'விருப்பும் வெறுப்பு மற்ற நிராகாரப் பொருள் என்னும் பரமசிவன்' என்றும் 'அருள் வெஃகி ஆற்றின் கண் நின்றார்' (176) என்பதற்கு 'முத்தியை விரும்பித் தரும நெறியிலே நின்று அருட் செல்வம் என்னும் சிவ சிந்தையராய் நிற்போர் என்றும் 'அருளை விளக்குங்கால் (253)

'அருளாவது ஏதெனில் சிவபூசை சிந்தனை' என்றும் கூறியுள்ளார். மேலும், 'சமயங்களுக்கெல்லாம் தலைமையாகிய சுத்தமென்னும் சைவ சமயத்தின் நெறியறிந்து' (257) என்றும், 'தனக்கு ஆத்தும லாபமான தவம் நிஷ்ட்டை தேவபூசை, தான தர்மம் சிவத்தியானம் முதலான தெய்வ நெறி.' (261) என்றும் குறிப்பிடுவதனால் இவர் சமயம் சைவ சமயம் என்பது தெளிவாகிறது. சுத்த சைவத்தினைக் குறிப்பிட்டாலும், 'தன்னுயிரென்னும் சீவாத்து மாவைப் பந்த பாசமென்னும் இச்சையின் வழியே நடத்தாமல் தான் என்னும் பிரமத்தினிடத்தில் சேரும்படி மோட்ச வழியே நடத்தி' (263) என்று குறிப்பிட்டுள்ளதால், இவர் சைவசித்தாந்த நெறியினராயினும், பிரமத்தைப் போற்றும் அத்துவித நெறி யாகிய வேதாந்தக் கொள்கையும் உடையவர் என்பது தெரிகிறது. அதனால், இவர் சைவ சித்தாந்தத்தையும், வேதாந்தத்தையும் தனித் தனியாக வேறுபடுத்திக் கொள்ளாது, அவற்றைப் போற்றிக் கொள்ளும் நெறியினர் என்று கொள்ளலாம். தாயுமானவருக்குப் பின்னர் இது போன்றதொரு நிலை தமிழகத்தில் பரவலாகக் காணலாயிற்று. இது கொண்டு இவ்வுரையாசிரியர், தாயுமானவர் காலத்தை அடுத்த காலத் தினைச் சார்ந்தவராவார் எனக் கொள்வது தவறாகாது.

### உரையின் நடையியல்பு.

கருத்தால் மட்டுமன்றி, தெளிந்த நடையாலும் பரிமேலழகர் உரை சிறப்புற்றுத் திகழ்கிறது. பரிதி, காளிங்கர் முதலிய பழைய உரைகள் பரிமேலழகருக்கு முற்பட்டன எனக் கூறப்பட்டாலும் அவற்றின் நடை வேற்று மொழிக் கலப்பு மிக்க நடையாகவே உள்ளன. இப்பழைய உரையும் செறிவில்லாத, வேற்றுச் சொற் கலப்பு மிக்க சாதாரண நடையிலேயே அமைந்துள்ளது. எடுத்துக் காட்டாக, "ஆகாசத்திலேயிருந்து உலகத்தை இரட்சிக்கும் பொருட்டாய் மழை வருஷிக்கிறதினாலே, சீவ செந்துக்கள் விருட்ச சாதிகள் சகலத்துக்கும் தேவர் அமிர்தம் வருணசலம்' (11) என்னும் உரையினைக் காட்டலாம். இவ் வுரையாசிரியர் பெண், பெண்கள் என்பதற்கு ஸ்ரீ, ஸ்ரீகள் என்று எழுதியுள்ளார். எளிய மக்கள் தம் வழக்கில் பயன்படுத்தும் ஞானதேகம் ஆகச்சே (77), குண்டணி (91), புறஞ் சாஞ்சு வழக்குப் பேசுவது (92), கெதிமோட்சம் (110), கண்டது சொல்லும் குண்டுமணி (123),

கொஞ்சபோகம் (174), போன்ற வழக்குச் சொற்களையும் பயன் படுத்தியுள்ளார். இயன்ற மரியாதி (36), களவாண்டு (275), ஈங்கிசை (278) போன்ற தொடர்களும் காணப்படுகின்றன. **'ஒருவன் செய்த துன்பப் பகைக்கு வதில் நினைப்பான் கொடிய பாவி'** என்னுமிடத்தில் வதில் என்றொரு சொல் அமைந்துள்ளது. பதில் என்பதன் திரிந்த வடிவமே வதில் என்பது. இது, பதில் என்னும் வேற்று மொழிச் சொல்லாட்சி, தமிழகத்தில் இடம் பெற்ற காலத்திற்குப் பிற்பட்டது இவ்வுரையாசிரியர் காலம் என்பதனை உணர்த்தி நிற்கின்றது. **'விதனம்'** போன்ற சொற்கள் இவர் உரை நடையில் பயின்று வழங்கப்படுகின்றன. சிற்சில விடங்களில் வாக்கிய முடிவு தவறுபட அமைந்து விடுவதனையும் காண முடிகிறது. **'சங்கும் முத்தும் பிறவாது'** (17), **'தானங் களும் நடவாது'** (18) என்பன போன்ற இடங்களில் காணப்படும் எண்வழு போல்வன ஒரு கால் ஏடெழுதுவோரால் நிகழ்ந்திருத் தலும் கூடும். எனினும் இவையும், இவை போன்ற பிறவும், செப்பம் செய்யப் பெறாது பதிப்பறம் கருதி, உள்ளவாறே பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இவரது நடை கலப்பு நடையாயினும், தன் கருத்தை விளக்குவதில் தெளிவாக அமைந்துள்ளது. **'புறங்குன்றி என்னும் குறளில்'** (277) குன்றிமணியினை ஒப்புக் கூறும்போது இவர் **'மேலே காவி வஸ்த்திரச் செவப்பு, மனத்தில் ஆசைக் கருப்பு' ஆதலால் குன்றிமணி'** என்று காட்டியுள்ளார். பலவிடங்களில் குறளுக்கு உரை கூறி இறுதியில் குறட்கருத்தினைச் சுருக்கமாக விளக்குவது இவர் இயல்பு. இதற்குத் **'துப்பார்க்குத் துப்பாய'** என்னும் குறளுரையில் (12), **'ஆகையால் மழைச் சிறப்பு அளவி றந்த சுக சந்தோடம்'** என்பதும், **'ஏரின் உழாஅர்'** என்னும் குறளில் (14) **'ஆகையால் மழையே தெய்வம்'** என்றும், அன்றறி வாம் என்னும் குறளில் (32), **'தர்மம் உயிர்த்துணையாகும் செல்வம் உயிர்த்துணையாக மாட்டாது'** என்றும் வருவன எடுத்துக்காட்டாகும். மகனுக்குத் தகப்பன் செய்யும் நன்றி இது வெனக் காட்டுமிடத்து (70) மிகவும் விளக்கமாக அதனைக் காட்டியிருப்பது சிறப்பாக உள்ளது.

*உரைத் திறன்.*

வலியில் நிலைமையான் வல்லுருவம் காட்டியமைக்குத் திருவள்ளுவர் கூறிய **'பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்தல்'**

என்னும் உவமையைப் பலரும் பலவாறு விளக்கியுள்ளனர். இவ்வுரையாசிரியர் தம்மியல்பிற்கு ஏற்றாற் போல 'தவத்தில் உறுதியில்லாத வஞ்சகன் உலகத்தில் வலுவாகக் கொண்ட ஈசுர வேடம் விஷ்ணு வேடம் ஆழுக்கு மன முடையார்கள் சுமந்து கொண்டு பிழைப்பது எப்படி யென்னில், எருதானது ஒருவர் பயிரிலே களவாண்டு தின்று பிழைக்கிறதற்காகப் புலித் தோலைப் போர்த்துக் கொண்டு மேய்ந்தது போல, இந்த வேடத்துடனே உலகத்திலே மேய்ந்தான்' என்று கூறியிருப்பது நயமுடையதாகும். 'உலகத்திலே மேய்ந்தான்' என்னும் சொல்லாட்சி அத்தகையோனை இவ்வுரையாசிரியர் மிகவும் இகழ்ந்து குறிப்பிடும் பாங்கினைக் காட்டுகிறது. 'யாமெய்யாக் கண்டவற்றுள்' என்னும் குறளுக்கு உரை கூறி, 'அதனை விளக்கும் வகையில்' ஒரு பொய் சொன்ன தருமர் நரகங் கண்டார். என்ன அவதிப்பட்டும் பொய் சொல்லாமல் சத்தியஞ் சொன்ன அரிச்சந்திரன் சொர்க்கமும், கீர்த்தியும் பெற்றான். 'நிச வசனம் சொல்வது அதிக சுக புண்ணியம்' என்று புராணச் செய்தியினை எடுத்துக் காட்டி முடிவு கூறியிருப்பது நயமிக்கதாக உள்ளது.

'அந்தணர் என்போர்' என்னும் குறளை (30) விளக்கும் போது, அந்தணர் என்னும் சொல்லுக்கு வள்ளுவர் கருதிய பொருளையும், அச்சொல் தம் காலத்து ஒரு சாதிப் பெயராக வழங்கப்படுவதையும் மனத்துட் கொண்டு அவற்றைத் தெளிவுபடுத்தியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். அவ்வுரை வருமாறு: "எல்லா உயிரும் தன்னுயிர் போலெண்ணி அன்புந் தயவும் கிருபையும் இரக்கமும் வைத்துப் பார்க்கும் நல்லோர்களே அந்தணர் என்பதாயிற்று. ஆதலால் அந்தணர் என்னும் பேர் பொருந்தினவர் தர்ம கர்த்தரேயல்லாது. மற்றப் பிராமணர் முதலான பேர்களுக்கு அந்தணர் என்னும் பேர் வரமாட்டாது, சாதி அந்தணராகுமாம்".

உயிருக்கும் உடம்பிற்கும் உளதாய நட்பினை (தொடர்பு) விளக்க வந்த வள்ளுவர், 'குடம்பை தனித் தொழியப் புட்பறந் தற்றே' என்னும் ஓர் உவமை காட்டி விளக்கியுள்ளார். மணக்குடவர் குடம்பை என்பதற்குக் கூடு எனப் பொருள் கூறினார். அவருக்குப் பின்னர் வந்த பரிமேலழகர், கூடு என்னும் பொருளின் பொருந்தாமை காட்டி, மறுத்து, முட்டை என்று பொருள் விளக்கம் செய்துள்ளார். இப்பழைய உரையாசிரியர், கூடு, முட்டை

என்னும் இரு பொருளையும் ஏற்று இணைத்து, 'பட்சியானது கூட்டிலேயிருந்து அப்பாற் பறந்தது போலும்; முட்டையிலிருந்து குஞ்சு வெளியேறினது போலும் உடம்போடு சீவனென்னும் உயிரிடை நட்பு' என்று விளக்கியுள்ளார் (338).

'அவா என்பது என்னும் குறளில் வரும் 'பிறப்பீனும் வித்து' என்னும் தொடரை விளக்குகையில் பரிமேலழகர், 'உடம்பு நீங்கிப் போங் காலத்து அடுத்த வினையும், அது காட்டும் கதி நிமித்தங்களும், அக்கதிக்கண் அவாவும் உயிரின்கண் முறையே வந்துதிப்ப, அறிவை மோகம் மறைப்ப, அவ்வுயிரை அவ்வவா அக்கதிக்கண் கொண்டு செல்லுமாகலின் அதனைப் பிறப்பீனும் வித்து என்றார்' எனக் கூறியுள்ளார். இக்கருத்தினை வாங்கி, எளிமைப்படுத்தி 'உடம் நீங்கி உயிர் போங்காலம் தான் செய்த இருவினைப் படியே மெய்ஞ்ஞான மென்னும் அறிவை மோகம் மறைப்ப, அவ்வுயிரை அவா வென்னும் ஆசை பற்ற, இதனால் பிறப்புண்டாயிற்று' என்று (361) விளக்கியுள்ளார். இதில் அறிவை மோகம் மறைப்ப' என்னும் தொடரை அப்படியே ஆண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

புதுமை.

திருக்குறளின் இயல்கள் பற்றிய பிரிவுகளில் உரையாசிரியர்கள் சிலர் மாறுபட்டுள்ளனர். ஒவ்வோரதிகாரத்திலும் அமைந்துள்ள பத்துக் குறள்களும் மாறாமல் அமைந்த போதிலும், முந்தைய உரையாசிரியர்கள் சிலர் ஒவ்வோ ரதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களின் வரிசையினைத் தம் விருப்பம் போல மாற்றியுள்ளனர். பரிமேலழகர் உரைச் செல்வாக்கிற்குப் பின்னர் உரை கண்ட அண்மைக்கால உரையாசிரியர்கள், பலரும், பரிமேலழகர் கொண்ட குறள் நிரலினையே மேற்கொள்வாராயினர். இந்தப் பழைய உரையாசிரியர் அதிகாரத்திலமைந்துள்ள குறள்களைத் தாம் விரும்பியவாறு மாற்றி அமைத்துள்ளார். அதனோடமைய யாது, இதுகாறும், எந்த உரையாசிரியரும் மேற்கொள்ளாத ஒரு மாற்றத்தினையும் இவர் செய்துள்ளார். உரையாளர் எவரும், வழக்கமாக அமையும் 1330 குறள்களில் ஒன்றைமாற்றி வேறொன்றைச் செருகும் முயற்சி மேற்கொள்ளவில்லை. பாட பேதம் காண முடியுமேயன்றி, வேற்றுக் குறளைக்

காண முடியாது. இந்த உரையில், ஒழுக்கமுடைமை அதிகாரத்தைச் சேர்ந்த **'நன்றிக்கு வித்தாகும்'** என்னும் குறளுக்கு வேறாக.

**'தன்மம் பெருக்கும் ஒழுக்கம் அதுவிடில்**
**கன்மம் பெருக்கும் கவர்ந்து'** என்னும் ஒரு குறள் வெண்பாவினை அவ்வதிகாரத்தின் ஈற்றுக் குறளாக அமைத்து உரையும் வரைந்துள்ளார். இந்த வேற்றுக் குறள் இவருடையதோ அன்றிப் பிறர் எழுதியதோ என்பதனை அறியக் கூடவில்லை. அறிய முடியாத நிலையில், அக்குறளை இவரே எழுதி இணைத்துள்ளார் என்று கொள்ளுவதில் தவறில்லை.

தேவாரம், பெரிய புராணம் ஆகிய நூல்களில் வேறு புலவர் செய்த சில பாடல்கள் இடைச் செருகலாக அமைக்கப் பட்டன வென்பதும், அவை வெள்ளிப் பாடல்கள் எனப்பட்டன என்பதும் கூறப்படுகின்றன. அவ்வகையில் இக்குறள் வெண்பாவினை, **'வெள்ளிக் குறள்'** என்று குறிப்பிடலாம். ஆனால், வெள்ளிப் பாடல் எனப்படும் பாடல்கள் இடைமிடைந்த நூல்களில், உள்ள பாடல்களை அகற்றி விட்டுப் புதிதாக வெள்ளிப் பாடல்களைச் சேர்த்ததாகத் தெரியவில்லை. ஏற்கனவே அமைந்துள்ள பாடல்களோடு, வேறு சில பாடல்களை இயற்றி இடைமடுத்தனவாகவே அவை அமைந்தன. இங்கோ, மிகச் சிறந்த குறள் ஒன்றினை அகற்றி விட்டு, வேற்றுக் குறள் வெண்பா ஒன்றினைத் திணித்து அதிகாரத்தை நிறைவு செய்த செயல் காணப்படுகிறது. பரிமேலழகர், உவமானத் தொடரில் சில சொற்கொண்டு உவமேயத்தையும், உவமேயத் தொடரில் சில சொற்கொண்டு உவமானத்தையும் பொருள் நிறைவு செய்து விளக்கம் கூறிய சிறந்த குறளினை நீக்கிவிட்டு இவ்வாறு வேறு செய்யுளை இணைத்த இம்முயற்சிக்குக் காரணம் யாதெனை அறியக் கூடவில்லை. காரணம் எதுவாயினும் குறள் பேணும் நல்லுகம் இதனை ஏற்றுக் கொள்ளாது என்பது உறுதி. இம்முயற்சி உரையாசிரியருடையதாக இருந்தாலும் அல்லது வேறொரு புலவருடையதாக இருந்தாலும் புறக்கணிக்கத் தக்கதேயாகும்.

## பாட பேதம்:

ஒரு நூலிலுள்ள செய்யுளில், பயிற்சி, ஏடெழுதுவோர் கவனக் குறைவு போன்ற பல காரணங்களால் பாடபேதங்கள் உண்டா வது இயல்பே. கடுமையான யாப்பியல் வரையறையுடைய குறள் வெண்பாவில் பாட பேதம் உண்டாகும் வாய்ப்பு மிகவும் குறைவாகும். அவ்வகையில் சில பாடபேதங்கள் இவ்வுரை நூலில் அமைந்துள்ளன. அத்தகு பாடபேதங்களிற் சிலவற்றை ஏற்றும் சிலவற்றை மறுத்தும் கூறிப் பரிமேலழகர் தம் உரையில் குறளைத் தெளிவுபடுத்தியுள்ளார். அதனால் '**அவர் தம் உரை யால் குறளுக்கு வேலியமைத்தார்**' என்பது முன்னரும் விளக்கப் பட்டது. இவ்வுரையாசிரியர் கொண்ட குறட் பாடத்தில் அறத் துப் பாலில் மட்டும் 20-க்கும் மேலான பாடபேதங்கள் அமைந் துள்ளன. பாடபேதங்களுக்கான இயல்பான காரணங்களோடு. அமைத்த வேலியை வலிந்து மீறும் இயல்பும் இம்மிகுதியான பாடபேதங்களுக்குக் காரணமாகலாம். இப்பாடபேதங்களை ஆராய்ந்து நோக்கினால் அவற்றுள் பல தேவையற்றன என்பது புலனாகும். எனினும் அவற்றைச் செம்மை செய்ய முற்படாது, அப்பாட பேதங்களோடே பதிக்கப்பட்டுள்ளது இந்நூல்.

'**இருள்சேர் இருவினையும் சேரா**' என்பது ஏனையோர் கொண்ட பாடம். '**இருள்சேர் இருவினையும் சேராது**' (4) என்பது இவ்வுரை யாசிரியர் கொண்ட பாடம். இங்கு, இருவினை என் னும் பன்மையொடு சேராது என்னும் ஒருமை முடிவு மயக்கமாக உள்ளது. '**பிறவிப் பெருங்கடல் நீந்துவர்**' என்பதனைப், '**பிறவிப் பெருங்கடலை நீந்துவர்**' என்று (8) உருபு விரித்துப் பாடங் கொண்டமையால் சிறப்பேதுமில்லை. '**துப்பாய தூஉம்**' என்ப தனைத் '**துப்பாய தூவும்**' எனக் கொண்டு, (12) துப்பாகிய பொருள்களைக் கொடுக்கும்; என்று பொருள் தந்துள்ளார். **துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும்**' என்பதனைத் **துறந்தார்க்குந் தூவாதவர்க்கும்**' எனக் கொண்டமையால் (42) எவ்விதப் பொருட் சிறப்பும் பெற்று விடவில்லை. '**மறப்பினும் ஒத்துக் கொளலாகும்**' என்பதனை '**மறப்பினும் ஓதிக் கொளலாகும்**' என்று (136) கொண்டமையால் பெயர்ச் சொல் எச்சச் சொல் லான தன்றிப் பொருளில் குறிப்பிடத் தக்க வேறுபாடில்லை. ஒழுக்கம் இலான்கண் உயர்வு' என்பதனை எதுகை நோக்கி,

'ஒழுக்காறில்லான் கண்' என்று (138) கொண்டார் போலும்! 'இறந்தார் வாய்' என்பதனை 'இரந்தார் வாய் எனக் கொண்டு (156) அதற்குத்தக இரப்பாளி என்று வேறு பொருள் கூறியுள்ளார். 'உடுப்பதூஉம் உண்பதூஉம்' என்பதனை 'உடுப்பதுவும் உண்பதுவும்' எனக் கொண்டமை, கம்பராமாயணத்தில் 'உடுப்பதுவும் இன்றிக் கெடுகின்றாய்' என்னும் தொடர்ச் செல்வாக்கினாலாகலாம். 'கெடுப்பதூஉம் எடுப்பதூஉம்' என்னுமிடத்தில் (15) இவ்வுரையாசிரியரே, அளபெடை வடிவத்தினை அவ்வாறே கொண்டுள்ளார். 'செவ்வியான் கேடும் நினைக்கப்படும்' என்பதனைச் 'செவ்வியான் கேடும் இமைப்பிற் கெடும்' எனக் கொண்டு (156) இமைப் பொழுதும் நில்லாது கெடும் என்று வேறு பொருள் கூறியுள்ளார். 'தான் பிறி தூனுண்பான் என்பதனைத் தான் "பிறிதூண் உண்பானேல்' எனப்பாட பேதம் (255) கொண்டதனால் விளமுன் நேர் என்பது காய் முன் நேர் என்று மாறிய மாற்றம் தவிரப் பொருட்சிறப் பொன்றுமில்லை. 'விலைப் பொருட்டால்' என்பதனை, 'வினைப் பொருட்டால்' எனக் கொண்டு (260) கூறும் பொருளில் தனிச் சிறப்பு அமைந்துள்ளதாகக் கூற முடியவில்லை. 'பொச்சாப்புப் பார்ப்பார் கண்' என்பதனைப் 'பொய்ச்சார்ப்புப் பார்ப்பார் கண்' என்று கொண்டு (288) அதற்குத்தகப் பொருள் கூறியுள்ளார். இவ்வாறு, இவ்வுரையாசிரியர் பாடபேதங் கொண்டவிடங்களைக் காணும் போது பொருளால் வேறுபடும் இடங்கள் குறைவாக அமைவதனையும், அப்பொருள் தானும் இன்றியமையாச் சிறப்புடையதன்று என்பதும் புலனாகும். யாப்பியல் பிழையாமை என்னும் ஒன்றினை மட்டும் மேற்கொண்டு இவ்வாறெல்லாம் பாடபேதம் கொள்வது உரையறமாகாதெனலாம். குறளுக்குப் பரிமேலழகர் கூறிய கருத்தினை உடன்படாவிடினும், அவர் வகுத்த 'உரை வேலி'யினை மதித்துப் போற்றுவது பின்னை உரையாசிரியர்கள் பின்பற்றத் தக்க உரையறமுமாகும். இல்லையேல் காலப் போக்கில் குறளின் மூல வடிவம் பலவாறாகத் திரிந்து கெடும் வாய்ப்புப் பெருகி விடும்.

**உரையில் உவமை.**

குறட் கருத்தினையோ தொடரினையோ விளக்குங்கால் இவ்வுரையாசிரியர் சிலவிடத்தே தக்க உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். 'தாளை வணங்காத் தலை' (8) என்பதற்குத் 'தாளை

வணங்காத பேர், அவரது தேகம் சித்திரம் எழுதிய மரப் பாவைக்கு ஒக்கும்' என்று கூறியுள்ளார். அவர் பயன்படுத்திய உவமைகளிற் சிலவற்றை அடியிற் காணலாம்.

அறிவறிந்த மக்கட்பேறு- பொற்பூவும் வாசமும் போல அறிவறிந்த கல்விச் செல்வமான பிள்ளையைப் பெறுதல் (61).

விருந்து புறத்ததாத் தானுண்டல்-சுற்றத்தார் அகதி பரதேசி இரப்போர் முதலான பேர் இளைப்போடும் பசித்துப் புறத்திருக்கத் தான் பார்த்தும் பாராதது போலே தன் வயிறே பெரிதாய் மலந்தின்னும் வராகம் போலே பொசிப்பது (81).

விருந்தோம்பி வேளாண்மை செய்தலின் பயன் - குறுணி விதைத்து ஒரு கோட்டைத் தவசம் அனுபவிப்பது போலே இம்மைக்குச் செல்வமும் ஆயிசு வார்த்தினையும் தீவினை விலக்கமும் உண்டாய்ப் பொன்றும் காலத்துக்குத் துணையாம் (82).

நாவினால் சுட்டவடு-அகங்கார நிமித்தம் தாரதம்மியந் தெரியாமல் கொடூரமான வசனங்களைப் பேசினால் அது கேட்டவுடனே எண்ணெய்ப் பந்தத்தினாற் பொசுக்கினது போலே சூடுண்டாய் மனம் புண்ணாகும் (124).

பிறன் வரையாள் பெண்மை நயத்தல்-பிறன் மனையாளை விரும்பி நாய் போலே திரியும் பாவி (141).

அருளாதான் செய்யும் அறம்-குழந்தை கையில் மாணிக்கம் போல அறிவில்லான் செய்யும் தருமம் (249).

துறந்தார்-பொறி புலாதி யெண்ணும் ஆணவ மாயை சிறந்த தொண்ணூற்றாறு தத்துவமும் உடலோடு இருக்கப் புளியம் பழமும் தோடும் போலே துறந்து தவசு பண்ணும் ரிஷி (301).

**பெண் பற்றிய கருத்து.**

தம் காலத்தில் நிலவும் சில கருத்துக்களின் தாக்கத்திற்கு உட்படாமல் உரைவரை வரைவது அரிதேயாகும். மிகச் சிறந்த உரையாசிரியராகிய பரிமேலழகரும் தம் காலக் கருத்தினின்றும் விடுபட இயலாது. 'சான்றோன் எனக் கேட்டதாய்' என்னும் தொடரை விளக்குங்கால், 'பெண்ணியல்பால் தானாக அறியாமை

யில் கேட்டதாய்' எனக் கூறினார் என்று குறிப்பிட்டுள்ளார். (திருக். பரி. 69). அவ்வாறே, 'பெறுமவற்றுள்' என்னுங் குறளின் விளக்கவுரைப் பகுதியில், 'அறிவறிந்த என்றதனால் மக்கள் என்னும் பெயர், பெண்ணொழித்து நின்றது' என்று எழுதியுள்ளார் (திருக்.பரி. 61). இவை காலச் சூழலால் தோன்றும் கருத்துக்களின் தாக்கத்திற்கு ஆட்பட்டு, அவற்றிலிருந்து மீள இயலாத நிலையில் அவற்றை உடன்பட் டெழுதியதன் பயனாகும். இவ்வாறே இந்தப் பழைய உரையாசிரியரும், 'பெண்ணிற் பெருந்தக்க' என்னும் குறளுரையில், 'பெண் சென்மம் பாவத்தி லெடுத்த ஜன ஸ்ரீ (53) என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வுரையின் இயல்பு எத்தகைய தாயினும், நூல் முழுவதற்கும் உரை கிடைக்காதது ஒரு குறையே யாகும். வணிக நோக்குடைய பதிப்பாளர் எவரும், நூல் முழுவதற்கும் அமையாமல் குறைபட்டுள்ள உரையைப் பதிப்பித்து வெளியிட முன் வரார். ஆய்வாளர்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதில் மிக்க நாட்டமுடைய தஞ்சைச் சாரபோசி மன்னர் சரசுவதி மகால் நூலகத்தார் இவ்வுரைப் பகுதியோடு அறத்துப் பாலினை முதற் கண் வெளியிடுவது பாராட்டுதற்குரிய செயலாகும் அறத்துப்பால் மட்டும் கொண்ட இந்நூல் வெளிவந்த பின்னர், இவ்வுரையின் எஞ்சிய பகுதி கிடைக்குமாயின், இவர்கள் உவந்து வெளியிடுவார்கள் என்பதில் ஐயமில்லை. பொருட்பாலில் அரசியலுக்கும் அங்கவியலில் ஒரு பகுதிக்கும் இந்தவுரை கிடைத்துள்ளது. எஞ்சிய பகுதியும் கிடைத்து உரை முழுதும் வெளிவருமாயின் திருக்குறட் கருவூலத்தை ஆய்ந்து காண முற்படும் அறிஞர்க்கு அஃதோர் அரும்பேறாக அமையும்.

# திருக்குறள் - பழைய உரை

## அறத்துப்பால்

### 1. கடவுள் வாழ்த்து

**1. அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு.**

என்பது அகர நாதமே உயிரெழுத்துப் பன்னிரண்டு, மற்ற எழுத்துக் கெல்லாம் நிறைந்திருக்கு முறைமை போலே, ஆதி பகவானான திருவுளம் சகல வுயிர்கள் சராசரங்கள் உலக முதலான வைக்கெல்லாம் ஒருத்தனே நிரம்பிப் பூரணமாயிருப் பான் என்றவாறு 1

**2 கற்றதினா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழா அர் எனின்.**

எ - து நாலு வேதமும் ஆறு சாத்திரமும் அறுபத்துநாலு கலைஞானம் பதினெண் புராணம் வேதாந்த சித்தாந்த சமர சமுங் கற்றதினாலே என்ன பயனுண்டாயிற்று? அறிவனென்னும் ஆன்ம நாதனாகிய பகவான் திருவடிக்குப் பணிந்து அன்புவைத்து ஆனந்தக் கண்ணீரொழுகும்படி தேடி வணங்கானாயின் எ - று. 2

**3. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்.**

எ - து முப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணா யிரம் கோடி ரிஷிகள் இந்திரன் முதலான தேவதைகளும் பத்தி யாயுள்ள அனைவோரும் அர்ச்சனைபுரியும், நெஞ்ச மலரின்மேல் எழுந்தருளியிருக்கும் பரம புருடன் ஸ்ரீ பாதத்தைச் சர்வ கால மும் மனத்தில் பற்றிவைத்து இருப்போர் இந்தப் பூமியிலே சகல அஷ்ட ஐசுவரிய சம்பத்தும் அனுபவிப்பார்கள் எ - று. 3

4. **இருள்சேர் இருவினையுஞ் சேரா திறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

எ - து ஆணவ காமிய மாயை யென்னும் மும்மல வித்தாகிய இருளைப் பொருந்திய பாவ விலாசமாயிருக்கின்ற தீவினையச்சமானது அணுகாது, சிவனுடைய கீர்த்தியை அன்புவைத்து எப்போதும் பாராட்டுவாரிடத்தில் துன்பமுந் துயரமும் இல்லை எ - று. 4

5. **வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.**

எ - து விருப்பும் வெறுப்பும் அற்ற நிராகாரப் பொருளென்னும் பரமசிவன் பாதார விந்தத்தை அன்புடனே கருதிச் சேர்ந்த பேருக்கு ஆங்கார முதலான துக்கமில்லை எ - று. 5

6. **தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்ற லரிது.**

எ - து தனக்குத் தானே ஒப்பன்றி (ப்பிறர்) ஒருவர் நிகரில்லாத பகவான் திருவடியை நம்பும் உறுதிமான்கள் மனத் துயரத்தை மாற்றி இன்பம் பெறுவார்களல்லாது மற்றவர் மனத் துயர மாற்றமாட்டார் எ - று. 6

7. **பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார்.**

எ - து சத்த பரிச ரூப ரச கெந்தம் என்கிற பொறிவழியிலே மனத்தைச் சிக்கி நினைப்பென்னுந் துயரத்திற் போக்காமல் இக பரம் இரண்டிலுமுள்ள நெறியில் நின்று மனத்தைக் காக்கவல்லார் அநேக காலந் துன்பமின்றி வாழ்ந்திருப்பார் எ - று. 7

**8. கோளில் பொறியில் குணமில்ல எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.**

எ - து கோளாகிய நவக்கிரகங்களும் புலனாகிய கண் வாய் மூக்குச் செவி மெய்யாகிய தேகமும் (இந்த ஐம்புலன்களுண்டாயினும்) கிருபையில்லை; அனந்த ஞானம், அனந்த வீரியம், அனந்த குணம், அனந்த தெரிசனம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியா இயல்பு (என்னும்) இந்த எட்டுக் குணங்களையுடைய பகவான் சிவந்த தாளை வணங்காத பேர், (அவரது தேகம்) சித்திரமெழுதிய மரப்பாவைக்கு ஒக்கும் எ-று. 8

**9. பிறவிப் பெருங்கடலை நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.**

எ - து பிறவியாகிய சமுத்திரத்தை நீந்தி முத்தி பெறுவர் பரமனைச் சிந்திப்போர். அல்லாதார் அந்தக் கடலை நீந்த மாட்டாமல் துக்கத்தில் அமிழ்ந்திடுவார் எ - று. 9

**10. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது.**

எ - து, தர்மமே வளர்ந்திருக்கின்ற பாதாரவிந்தங்களையுடைய பகவன் பத்தரென்னும் அடியார் பிறவிக் கடல் கடப்பார். மற்றவர் கடக்கமாட்டார் எ - று. 10

கடவுள் வாழ்த்து முற்றும்.

## 2. வானச் சிறப்பு

**11 வானின் றுலகம் வழங்கி வருதலால்**
**தானமிழ்தம் என்றுணரற் பாற்று.**

எ - து ஆகாசத்திலேயிருந்து உலகத்தை இரட்சிக்கும் பொருட்டாய் மழை வருஷிக்கிறதினாலே, சீவசெந்துக்கள் விருட்ச சாதிகள் சகலத்துக்கும் தேவர் அமிர்தம் வருணசலம் எ - று. 1

**12. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூவும் மழை.**

எ - து துப்பார் என்னும் உண்பார்க்கு வேண்டின சகல பொசிப்புக்களைக் கொடுப்பதும், உணர்வையுண்டாக்குவதும், வலிமையென்னும் பலமுண்டாக்குவதும் சகல சேஷ்டமும் (சிரேட்டமும்) ஆகாசத்திலேயிருந்து தூவப்பட்டதனாலே யல்லது வேறல்ல. ஆகையால் மழைச்சிறப்பு அளவிறந்த சுக சந்தோடம் எ - று. 2

**13. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்**
**துண்ணின் றுடற்றும் பசி.**

எ - து, தாகக்காலங்களுக்கும் மழை வருஷியாத போது கடல்சூழ்ந்த வையகமெல்லாம் தட்டுண்டு உலகத்தில் (மக்கள்) பசிப்பிணியால் வருந்தித் துயரப்படுவார். எ - று. 3

**14. ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்**
**வாரி வளங்குன்றிக் கால்.**

எ-து ஏர் நடத்துங் குடிகளுக்கு நல்ல சேத்திரம் (நிலம்) இருந்தாலும் உழமாட்டார்கள்; மேகம் கெர்ச்சிக்கும் மழை பொழியாக் காலத்தில் ஆகையால் மழையே தெய்வம் எ-று. 4

**15. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை**

எ - து வாழ்வாரைக் கெடப்பண்ணுவதும் கெட்டபேரை இரட்சிப்பதும் சகல சுக துக்கங் கொண்டாடுவதும் மழை. ஆகையால் புவனத்துக்கு மாதாவே ஆகாச மேகம் எ - று. 5

**15. விசும்பிற் றுளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புற் றலைகாண் பரிது.**

எ - து மழை பெய்யாத காலத்தில் பசும்புல்லின் தலை(யும்) காண அரிதே. ஆகையால் சுற்றும் கொடி தழைகளும் காண அரிது. எ - று. 6

**17. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி**
**தானல்கா தாகி விடின்.**

எ - து பெருமையான கடலில் சங்கும் முத்தும் பிறவாது, மழை பெய்யாவிடில் ஆனதால் சிசு உற்பத்திகளும் வரண்டு காணும் எ - று. 7

**18. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.**

எ - து சுப சோபனம் நடக்காது, தெய்வங்களுக்குத் தின பூசை திருவிழா ஒன்றும் நடவாது, மழை வரண்டுபோன காலத்தில். விருந்து உபசரிப்பதும் சிநேகித உறவும் மத்திமப்படும். எ - று. 8

19. தானந் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

ஏ-து அன்னதானம் சொர்ணதானம் வத்திரதானம் மற்றும் உள்ள தானங்களும் நடவாது, நித்திய கர்ம தவசு வல்லபமும் வளர்ந்தேறி வரமாட்டாது; பூலோகத்தில் மழை மறுத்த காலத்தில் எ-று. 9

20. நீர்நின் றமையா துலகை னெறியார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

ஏ-து நீரினாலே சீவ சந்து சர்வாத்துமாக்களும் பிழைக்கிறதினாலே சமைன்றியே ஒரு காரியமும் நடவாது. ஆதலால் மழையன்றியே ஒரு காரியமும் இல்லையாம். மழை சில காலம் நின்றிடில் நடுவுநிலைமை தங்காது எ-று. 10

வானம் முற்றும்.

## 3. நீத்தார் பெருமை.

21. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

ஏ-து பஞ்ச புலன்களை யடக்கின ஒழுக்கத்தினோர்க்குப் பெருமை ஏதெனில் காமக் குரோத லோபம் ஒடுங்கும்படி நாள் தோறும் வழுத்து தவசின் துணிவே பெருமையாம் எ-று. 1

22. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

ஏ-து ஐம்புலன்களை யடக்கின ஒழுக்கத்தின் மேலான வரை நல்லவரென்று மறைகளும் உலகத்தார்களும் விளக்கப் படுத்துவார், அல்லாதாரை நரகலோகம் விளக்கப்படுத்தும். எ-று. 2

**23. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்**
**பெருமை பிறங்கிற் றுலகு.**

எ-து புண்ணிய பாவத்தின் வழிதெரிந்து பாவத்தைத் தள்ளித் தர்ம வழிநின்று அறத்துச் செல்வமே பெரிதென்று தேடும் பெருமையோர் புகழை எப்போதும் உலகம் விளங்க வைத்துக் கொண்டிருக்கும் எ-று. 3

**24. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்**
**திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.**

எ-து மண் பெண் பொன் ஆசை துறந்து காமக் குரோத லோபமாச்சரியங்களை விலக்கி மகிழ்ச்சியடையும் பெரியோருக்கு உவமையாகச் சரிசொல்ல வேணுமாகில் பூமியின்கண்ணே இறந்த சனனம் எத்தனைக்கு உண்டோ அத்தனையும் அறிந்தால் அவர்கள் பெருமையையும் அறியலாம் எ-று. 4

**25. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே யுலகு.**

எ-து அறுசுவைப் பதார்த்தத்தின் ருசியும், ரூ(ப)பால சவுந்தரியப் பார்வையும், தேகத்தில் ஊர்வன தைப்பன முதலான அவத்தையும், செவியில் கேட்பன நல்லது தீது சொல் ஓசையும், நற்கெந்தம் துர்க்கெந்த வாசனைகளும் என்னும் ஐம்புலன் வழியே மனம் போகாமல் காக்குமவர்களிடத்தில் அறிவு விளங்கும். இளைஞர் என்றும் சிறிய மனத்தைப் புலன் வழி விட்டுச் சிறுமைப்படுவரல்லது அடக்க மாட்டார் எ-று.
5

**26. உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்**
**வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.**

எ-து அறிவென்னுந் துரட்டியினாலே (ஐம்) புலனென்னும் யானையைக் காப்பவன் மோட்ச மென்னும் பூமிக்கு ஒரு வித்தாம் எ-று. 6

**27. ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பி லார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.**

எ-து பொறியின் வழியில் புலனைச் செலுத்தித் துயரப் படாமல் தன்ம வழியனாகியிருக்குந் தேவன் பெருமைக்குத் தேவலோகத்து இந்திரன் சாட்சி பெறுவான் எ-று. 7

**28. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.**

எ-து சாந்தப் பொறுமை யென்னுஞ் சற்குண வரையின் உச்சியிலே நின்ற புகழோர் (ஒரு வேளை சீறின்) கோபத்தை எவ்வகைத் தீரத்தோரான பிறரும் கணப்போதாகிலுங் காக்க மாட்டார்கள் எ-று. 8

**29. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.**

எ-து ஒருவராலுஞ் செய்வதற்கு அரிதாகிய தர்ம நெறியுந் தவநெறியும் உள்ள துறவறமானதைச் செய்வர் பெரியோர். சிறியோர், செய்யுந் தொழிலாகிய இல்லறமுங் குறைவு பாடின்றிச் செய்யவறியாமல் சோம்பல் பிடித்து ஆரும் இகழ்ந்து பேசும்படியுள்ள கொலை களவு கட்காமம் பொய் இந்த ஒழுங் கீனத்தைச் செலுத்துவர் எ-று. 9

**30. அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.**

எ-து எல்லாவுயிரும் தன்னுயிர்போல் எண்ணி அன்புந் தயவுங் கிருபையும் இரக்கமும் வைத்துப் பார்க்கும் நல்லோர் களே அந்தணர் என்பதாயிற்று. ஆதலால் அந்தணர் என்னும் பேர் பொருந்தினவர் தர்மகர்த்தரே யல்லது மற்றப் பிராமணர் முதலான பேர்களுக்கு அந்தணரென்னும் பேர் வரமாட்டாது. சாதி அந்தணராகுமாம் எ-று. 10

நீத்தார் பெருமை முற்றும்.

## 1. அறன் வலியுறுத்தல்

**31. சிறப்பீனுஞ் செல்வமு மீனும் அறத்தினூஉங்
காக்கம் எவனோ வுயிர்க்கு.**

எ-து மறுபிறவிக்குச் செல்வமாகிய முத்தி யென்னுஞ் சிறப்பும் இம்மைக்குச் செல்வந்தரும் என்னும் நன்மையும் கொடுக்கும் தெய்வம், தருமதேவதை யென்னும் அதுவன்றி வேறல்லவாதலால் உயிருக்குத் தருமமல்லாமல் வேறே துணையுண்டோ எ-று. 1

**32. அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.**

எ-து நாம் வறுமைக்காரனாகச்சே செல்வம் வந்தபோது தருமம் பின்னாலே செய்வம் என்று எண்ணி அறத்தை மறுப்பார், செல்வம் வருமட்டும் தேகம் நிலையாது இது என்று எண்ணி இருந்த மரியாதி முன்பின் எண்ணாமல் நினைத்தபோதே தர்மஞ் செய்ய வேணும் இது இம்மைக்குச் செல்வந்தரும். மரணாந்த காலத்துக்கு அழியாத பெருந்துணையாம்.

தர்மம் உயிர்த்துணையாகும், செல்வம் உயிர்த்துணை ஆக மாட்டாது எ-று. 2

**33. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலினூஉங் இல்லையாங் கேடு**

எ-து தர்மத்தைப்போலே செல்வமும் இல்லை. எவ்விதமும் வரும் எத்தனை திரவிய மிருந்தாலும் தருமமில்லா விட்டால் அதைப்போல கேடும் இல்ல எ-று. 3

**34. செயற்பால தோறும் அறனே யொருவற்
குயற் பால தோரும் பழி.**

எ-து மனம் வாக்குக் காயங்களினாலே செய்வதெல்லாம் தர்மமானவழி செய்துவர, அது ஒருவருக்குயர்ந்துபோம் வழியாம். தர்மத்தை இகழ்ந்து விடுவதாகில் பாவத்தைத் தேடும் பழி உயிருக்கு ஆயிற்று எ-து. 4

**35. வீணாட் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்**
**வாணாள் வழியடைக்குங் கல்.**

எ-நு அவமான பொழுதாய்ப் போகாமல் தன்மமே (செய்) கின்ற மரியாதி செய்துவரும் லாபம் இனிமேற் பிறவித் துன் பத்துக்குட்படாமல் சென்ம வழியடைக்குங் கல் அறம் எ-து 5

**36. ஒல்லும் வகையா லறவினை ஓவாதே**
**செல்லும்வா யெல்லாஞ் செயல்.**

எ-து தன்னான் இயன்ற மரியாதி தன்மம் செய்க. அது சருவலோகமுந் தானாக முன்னின்று நினைத்தபடி முடித்து முத்தி கொடுக்கும் எ-று. 6

**37. அறத்தால் வருவதே யின்பமற் றெல்லாம்**
**புறத்த புகழு மில.**

எ-து தன்மத்தினாலே வந்த இன்பமே சுகம். அதுவன்றி இவனுக்குப் பொறையுங் கீர்த்தியும் இல்லையாம்.

புகழ்பட வாழினும் தவமில்லான் சண்டாள இல்லன் எ-று. 7

**38. மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற.**

எ-து மனத்தினும் பாவத்தை நினையாதொழிக. அது போதும். தன்மமுஞ் செய்ய வேண்டாம். ஆருக்குங் கேடு இல்லாமல் எவ்வுயிர்க்கிரங்கும் தயவும் கொலை பொய் வஞ்சகம் விடுவதும் (அறம்) ஆம் எ-று. 8

**39. அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா வியன்ற தறம்.**

எ-து பிறர் செல்வங் கண்டு இவன் இத்தனை செல்வம் பெற்றானே யென்று மனது நோகாமையும், தனக்கு உள்ளது இருக்க அதிக் ஆசைப்படாமையும், கோபமில்லாமையும், ஒருவர் செய்யுங் குற்றத்தைப் புறங்கூறாமையும் போலத் தருமம் வேறு முண்டோ.

இந்தக் குணத்தை விட்டவன் தரும வழிக்குட்படான் எ-று. 9

**40. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை**
**பொறுத்தானோ டூர்ந்தா னிடை.**

எ-து தன்மஞ் செய்வாரையும் பாவஞ் செய்வாரையும் விசாரிக்குமளவில் பல்லக்குள் இருப்பவரையும் அதனைச் சுமப்ப வரையுங் கண்டு கொள்க எ-று. 10

அறன்வலி முற்றும்.

---

## 5. இல்வாழ்க்கை

---

**41. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றி னின்ற துணை.**

எ-து இல்லற முறைமை யென்னும் சமுசார கிரகத்தோடே மனையின்கண்ணே இருந்து வாழுகிற இயல்பு என்னுங் குடித்தன முடையான், இளமையில் துறந்து காம வலையி(ல்)வெம்பிடாத நிருமானமென்னும் விருமச்சாரிக்கும் வானப்பிரத்தனென்னும் யோகிக்கும் தேசாந்திர தீர்த்தவாசி யென்னும் சன்னாசிக்கும் இந்த மூவருக்கும் அன்னம் ஏற்று உண்ண, மனையின் வாழ்க்கை யில் இளைப்பாற வருவதால் அவருக்கு உபசார அர்க்கியம் ஈயத் துணையாவானாம். அந்தத் தர்மம் அநேக தவசு புண்ணிய முண்டாம். ஆகையாலே குடித்தனமே அதிகவாழ்க்கை எ-று. 1

**42. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.**

எ-து மண் பெண் பொன் இந்த மூன்றுவகை ஆசை துறந்த நல்லோர்க்கும், போனசென்மத்தில் ஒருத்தருக்கும் இட்டு ஈயாமற் பொருளைத்தேடிப் பின்சன்மத்துக்க(ண்) வறிஞனாய் முற் சென்மத்தில் கொடுத்துவையாத பாவி இச்சென்மத்தில் இரப்பக் கடவமென்று பேர்கொண்ட பிச்சையெடுக்கும் தேசிக்கும், இறந்துபோன பிதிர்கள் மோட்சமாகும்படிக்குத் திதிகருமபலன் கொடுப்பதற்கும் இந்த மூன்றுபேருக்கும் சமுசாரகிரகத்தன் துணையாவான் எ-று. 2

**43. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் ஞானியென்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை**

எ-து அதர்மஞ்செய்து தென்புலமென்னும் எமதிசைக்குப் போன பிதிர் கருமஞ்செய்ய வேண்டிய உடந்தைக்கும், வழிபடு குருவுக்குச் செய்யும் முறைமைக்கும் தனக்கு இஷ்டதெய்வமென் னுங்கொண்டாட்டம் பண்ணும் பூசை பொங்கலுக்கும், விருந் தென்று வரும் உறவின் முறையை விசாரிக்க வேண்டியதற்கும், துறவியென்னும் பெரியோர் சொகு சொங்கமன் அரதேசி முதலான இரப்போர்க்கும் இந்த ஐவகைப்பேருக்கும் இல்வாழ்க் கையோடுங் கூடவிருக்கிற கிரகத்தன் முறைப்படி விசாரித்து ரட்சிப்பதுவே தலைமையாம். இந்த ஒழுங்கு தவறாத மனை யுடையவன் தேவதேவனாகப் பேர்பெற்றுச் சுகமடைவான் எ-று. 3

**44. ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து.**

எ-து தருமத்தைத் தேடும் குடித்தனவொழுங்கு என்னும் இல்லறத்தினின்று தருமங் கைவிடாத சமுசாரிக்குத் தவசுடை யோரும் சரியாகமாட்டார்கள். இவன் சகல இரப்போரையும் ரட்சித்துக்கொள்வதினாலே இவனே மேலோன் எ-று. 4

**45. அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.**

எ – து தருமம் என்பதே இல்லறம். உலகப் பழிப்பென்னும் அதர்மத்துக்கும் கெடுதிக்கும் தீவினைக்கும் இடப்படாமல் நீதியாய்த் தர்மவழி பெறவே நடந்து வருகிறதே நன்று எ – று. 5

**46. அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்**
**போஒய்ப் பெறுவ தெவன்.**

எ – து தர்மத்தை வளர்த்துப் பலன் கையாகும் இல்லத்தை விட்டுத் துறந்து போவோமென்று பாவ வழியில் வெளியேறிப் பெற்றது என்ன பலனோ? பிரயோசனமின்றி யேங்கி வாடி உழன்று தவிப்பவனாம். வாழ்க்கை நலத்திலிருந்து தர்மஞ் செய்வதே மேன்மை எ – று. 6

**47. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.**

எ - து எவ்வுயிர்க்கும் அன்பாம் நேசமும் தர்மச்செயலின் வழிப்பாடும் செய்யும் தலைவனுக்கு இம்மைக்குச் செல்வமும் மறுமைக்கு மோட்சமும் கொடுக்கும் ஆகையால் இல்லறமே பண்பும் பயனும் உடையது எ – று. 7

**48. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை**
**வழியெஞ்சல் எஞ்ஞான்று மில்.**

எ - து இரப்போர் முகங்கோணாமல் ஈகைத்தவஞ்செய்து பேர்பெறவேணுமென்றும், இல்லையென்னும் விரதங்கொண்டு ஆவ தேகி என்றவன் நினைப்பது 'இவன் சம்பத்துடையனாயிருந்தும் கொடுக்காமல் நம்மைப்போலே விருதாப்பாவியென்னும் பேரைக் கொண்டான்' என்று சொல்லும். பழிக்கு அஞ்சி இந்த அபகீர்த்தி விகற்பம் வராமல் விருந்தோம்பலுண்டாகிய இல்வாழ்க்கைத் தருமம் நடக்கும் புருடனுக்கு வறுமைப்பிணி தீண்டாமல் எக்காலமும் செல்வமும் புகழுங் குறைவின்றி நீடிக்கும் எ – று. 8

**49 இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாரு ளெல்லாந் தலை.**

எ — து இல்லறத்திலிருந்து தருமச் செயலுடனுங்கூடி ஆருக்கும் ஆசார உபசாரமும் பசிப்பிணி தவிர்த்தலும், அடைந் தோரைக்காப்பதும், கெடுதலின்றி இடுக்கண் தவிர்ப்பதும், பிறர் துயர் தன் துயர்போலெண்ணி நன்மைசெய்யும் முறைமையும் உடையோனாகில் அவனுக்குச் சரியான பேர் இல்லை. முயல் வார் என்னும் நல்லோரினும் பெரியவன். அது ஏதெனின் தவஞ் செய்வோர் ஆகாரம் நித்திரையை விட்டுச் சரீரத்தை ஒறுப்பார். இவன் சரீரத்தை வருத்தாமல் இல்லறம் நடத்தி முத்தி பெற் றான். எ — று. 6

**50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.**

எ — து பூமியிலே இல்லறமுறைமையாலே தர்மச்செல்வத்தை நாள்தோறும் தேடி வாழும் மனைவாழ்க்கையுடன் தேவலோ கத்துத் தேவர்களுக்குச் சமானமாவதுமல்லாமல் பூலோகநாயக மூர்த்தியாவான் எ - று. 7

இல்லறம் முற்றும்.

---

## 6. வாழ்க்கைத் துணைநலம் வரய்ப்பது.

**51. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.**

எ — து இல்லறம் நடத்துமிடத்தில் ஸ்ரீயானவள் வெறுமை வந்த இடத்திலும் கனம் விடாமல் இல்லாமையை உள்ளதாய்ப் படுத்திவரும் இலாபத்துக்குத் தக்க சீர்த்துவமுண்டாய் நடத்தியும் பத்தாவுக்குப் பெருமையுண்டாகும்படி யாவும் நடத்தும் வாழ்க்கையுடையவள் இவன் செய்த புண்ணியத்தால் வாய்த்துத் தருமப் பெருமையும் நிலைநிறுத்தி நடத்துவாள் எ - று. 1

**52. தற்காத்துத் தற்கொண்டாற் பேணிக் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்.**

எ - து தன்கற்பையும் நிலைநிறுத்திக் காத்துப் பத்தாவினுடைய குணம் போலே நடந்து அவன்மனம் இஷ்டமாகும்படி பாதுகாத்து இன்னாள் பதிவிரதையென்னுந் தருமஇலக்குமி என்ற சொல்லைப் பெறும்படி உலகத்தார் வாழ்த்தும்படியுங் காத்து இன்ப துன்பத்துக்கு அசைவில்லாத மனத்திடக்கற்பினாள் வாழ்க்கைத் துணையாம் எ - று. 2

**53. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந் திண்மையுண் டாகப் பெறின்.**

எ - து பெண் சென்மம் பெரும் பாவத்திலெடுத்த ஈன ஸ்ரீயாயினும் தருமப் பெருமையும் முகவாட்டங்கண்டு தானே அறிந்து பசிப்பிணி தவிர்த்தும் ஆரையும் உபசரிக்கும் சாந்தமும் தன்பத்தாவே தெய்வம் என்கிற பதிவிரதநிலைமையும் உண்டாகிய பெண்சென்மத்துக்குத் தெய்வப்பிறப்பும் ஒப்பல்ல. அவளே அட்ட இலக்குமியாம் எ - று. 3

**54. பெற்றார் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப் புத்தேளிர் வாழு முலகு.**

எ - து நல்ல பதிவிரதையாயிருக்கிற தருமலட்சணம் பொருந்திய பெண்டிரை விவாகமாகும்படி பெற்றவன் மூன்று லோகமும் நல்லபதிவிரதையைக் கண்டபுருடனென்று கொண்டாடப் பெறுவன். பூலோகமும் பத்தாவும் மனம்கிளர்ந்த கற்பினாள் தேவர்கள் செய்யுஞ் சிறப்பைப்பெறுவள். தேவாதிகளும் இவனை நல்ல புண்ணிய ஸ்ரீ உறவுகொண்டவனென்று தேவலோகமும் அளிப்பார் எ - று. 4

**55. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.**

எ - து தெய்வங்களையுங் கும்பிடாள் பத்தாவே தனக்கு இஷ்டமான குலதெய்வ மென்று பூசித்து அதிக பயபத்தியுடனே சொல் தவறாப் பூசனை செய்து கொண்டிருக்கிற பதிவிரதை அவாந்திரகாலங்களியே யாவது மேகங்களைப் பார்த்து மழை வருஷிக்க வேணுமென்று சொன்ன அளவிலே இவள் சொல்லுக் குப் பயந்து வேண்டியமழை வருஷிக்கும் எ - று. 5

**56. இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை.**

எ – து இல்லறத்தின் வரலா றறிந்து, வரும் ஊதியத்துக்குத் தக நடக்கும் முறைமை நடத்தும் பதிவிரதை இருக்கிற இல்லத் திலே இல்லாத பதார்த்தங்களும் உண்டாயிருந்து வளர்ந் திருக்கும். இல்லற முறைமை அறியாதாள், சொல்லுக்கு எதிரி பேசிச் சுணங்கச்சாடை செய்யும் இல்லத்தில் என்ன பதார்த்தம் இருந்தாலும் தருமந் தவறித் தேடவே அழிவாய் இல்லாதே போமேயல்லாமல் வளரமாட்டாது. தற்காலத்துக்கு நிற்கும் செல்வம் பாறையில் மாந்தளிர் தளிர்த்ததற்கு ஒக்கும் விருதா வளி வாழ்வாம் எ - று. 6

**57. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.**

எ - து இல்லறத்தில் பத்தாவின் சொல்வழி தப்பாதமுறை மையென்னும் மனையாட்சியாய்த் தரும நெறியோடும் கூடி நடந்து வருகிறவள் இல்லத்தில் வெறுமையுற்றுத் துயர்வந்து மெலியினும் பீடியாமல் இல்லாத சம்பத்தும் அவள் நினைத்தபடி யுண்டாம். இல்லறவழியும் தருமநெறியும் அறியாமல் பத்தா நடுங்கும்படி வசனமுங் கடுங்கோபியும் துப்புரவன்றியும் ஒப்புரவு தெரியாமலும் எவர்கள் பேரிலும் வியாக்கிரமச் சீறலாய்த் தயவின்றியும் இருக்கிறவள் இல்லத்திலே என்ன பதார்த்தம் இருந்தும் நீர்நின்ற காடு போலே இருக்கவே கெட்டு ஒன்று மில்லாதே போமேயன்றித் தருமழி நேரிடாத வாழ்க்கையாம் எ-று. 7

**58. சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்**
**நிறைகாக்குங் காப்பே தலை.**

எ – து ஊர்க்காவல் புறக்காவல் வைத்துக் காக்கிறது பதி விரதா பாகத்துக்குக் காவலன்று. பெண்களுடைய கற்புக் காவலே நிலையாம் எ – று. 8

**59. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்**
**ஏறுபோற் பீடு நடை**

எ – து இன்னாள் பதிவிரதை யென்னுஞ் சொற்பெறாத ஸ்ரீ யை மனையாக வைத்திருக்கிற ஆடவனுக்கு இகழ்ச்சியும் அவகீர்த்தியுமல்லாமல் நலமில்லை. பலருங் கூடி உலகத்திலே பழிப்புரையைப் பேசிக்கொண்டு இவனை ரிஷபம் போலே பாவிப்பா ரல்லாது புருட ரூபனென்று எண்ணமாட்டார். எ - று 9

**60. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு**

எ - து இல்லறத்துக்கு அழகாகியது நல்ல பதிவிரதாபாகத் தோடும் குடும்ப பாரந் தாங்கும் புருடனுக்கும் பெருமை கொடுத்துக் தருமச்செயலும் உள்ளவளாகும் பதிவிரதைக்கு அழகும் ஆணரபமும் எதுவென்னில் நல்ல சற்புத்திரனைப் பெறுதல். அழகு முதுமையில் குன்றும். ஆபரணம் வறுமையில் தங்காது விலைப்படும். சற்புத்திரன் எதுக்குந் துணையாவதால் நல்ல புதல்வரைப் பெறும்படி ஸ்ரீயும் புருஷனும் தவஞ்செய்து பெறுவதே ஆபரண அழகு எ – று. 10

வாழ்க்கைத் துணைநலம் ஸ்ரீ வாய்ப்பது முற்றும்.

---

## 7. புதல்வரைப் பெறுதல்

**61. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.**

எ - து உலகத்தில் பெறும் பேறுக்குள் புதல்வரைப் பெறுதல் போற்பேறில்லை. அதிலும் பொற்பூவும் வாசமும் போல அறிவறிந்த கல்விச் செல்வமான பிள்ளையைப் பெறுதல் நன்று எ - று. 1

**62. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.**

எ - து தம்மிலும் தாம் பெற்ற பிள்ளை கல்வி அறிவு உத்தி புத்தி இல்லறமுறைமை வணக்கம் ஆசாரம் தருமசிந்தை சத்திய வாய்மை இந்த ஒப்புரவுகளான குணவுடைமையில் அதிகமாயிருப்பானாகில் உலகத்தா ரெல்லாம் புகழும்படி இனிமையாவன். தகப்பனும் கீர்த்திமானாவன் எ-று. 2

**63. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்.**

எ-து ஈன்ற காலத்தில்ஆண் பிள்ளையென்று கேட்ட மகிழ்ச்சியினுந் தன்பிள்ளை அறிவினாலுங் கல்வியினாலும் பெரியவனென்று கேட்ட மகிழ்ச்சி அகத்தில் அதிக ஆனந்தந் தரும் எ-று. 3

**64. குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.**

எ-து நாகசின்னம் சீங்குழல் புல்லாங்குழல் ராகப் பரிட்சையுடன் சந்தத்தோசையும், யாளமென்னும் வீணை ருத்திர மண்டலஞ் சாரங்கி வீணை குளிர்ந்த சந்தத்தோசையும் நல்லதென்று பிரியப்படுவர் தன்மக்கள் வசனம் அஞ்சு வயசுக்குட்பட்ட மழலைச் சொல் நன்றாய்த் திருந்தும்படி பேச்சல்லாத சொல்லைக் கேளாத பேர் எ-று. 4

**65. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்**
**சிறுகை யளாவிய கூழ்.**

எ-து முப்பழ முதலாகிய தேன் கற்கண்டு சேர்ந்த ரசனை யுள்ளதோர் அமிர்தத்திலும் அதிகமாம் தம்மக்கள் மெல்லிதான சிறுகையினாலே அளைந்து குழப்பிய துப்பித் துப்பின கூழ் என்னும் அமிர்தம் ஒப்பற்ற ரசக்கியம் எ-று. 5

**66. மக்கண்மெய் தீண்டலுடற் கின்ப மற்றவர்**
**சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.**

எ-து தன் புதல்வர் மடியிலிருந்து கொஞ்சக் கழுத்தைக் கட்டித் தோளிலேறித் தேகத்தைத் தழுவுவது உடலுக்குள்ள இன்பம். பஞ்சுமெத்தைச் சயனம் வாகன முதலான இன்பம் இதற்கு ஒவ்வாது. இன்பம் அவர்கள் வார்த்தை கேட்பது செவிக்கு அநேக மகிழ்ச்சி இன்பம் எ-று. 6

**67. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்**
**பண்புடைய மக்கட் பெறின்.**

எ-து தேவர் நரர் மிருகம் பட்சி ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்னும் எழுவகைத் தோற்றத்திற் சென்றாலும் அதிற் பிறந்து கர்ம வசத்தினாலே எழு நரகமென்னுந் தீவாயிற் சென்றாலும் துன்பம் வராது மாதா பிதாவுக்கு, தீவினையென்னும் பழிக்குப் பயந்து சத்திய வாசகனாய தருமநெறி யென்னும் யோகியான புத்திரனைப் பெறுவா (ராயி)ன் எ-று. 7

**68. தம்பொரு ளென்பதம் மக்கள் அவர்பொருள்**
**தந்தம் வினையான் வரும்.**

எ-து தம் மக்கள் செல்வம் பின்னுதவியாகிய சொந்தத் திரவியமென்றும் ஒருவருக்குங் கடனாக (ஆவது) ஈயாத உடைமையாவது புத்திரபாக்கியம். அப்படிக்கொத்த மக்களும் தாம் முற்செய்த விதிவசங்களினாலே கமுகு தெங்கு போல் உதவுவார்கள் எ-று. 8

**69. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்.**

எ-து புதல்வர் தந்தைக்குச் செய்யும் உதவி, இவரைப் பிள்ளையாகப் பெறும்படிக்கு இவன் தகப்பன் இவ்வுலகத்தில் என்ன தவ தர்மம் புண்ணியம் செய்த பலத்தினாலே உற்பத்தியானான் என்று லோகத்தார் சொல்லும்படியாக அறிவினாலுங் கல்வியினாலேயும் தருமசிந்தை தேவ நேசத்துப் பெருமையாலும் உபகார சற்குண சாந்தத்தினாலும் அதிக அறிவுடைமையைக் கொண்டவனாக எ-று. 9

**70. தந்தை மகற்காற்று நன்றி யவைத்து முந்தி யிருப்பச் செயல்.**

எ-து மகனுக்குத் தகப்பன் செய்யும் நன்றி யென்னுஞ் சுகிர்த புண்ணிய உதவி என்னென்றால். குழந்தைப் பிராயத்தில் வித்தை வருத்தும் போது விளையாட்டைத் திருத்த மனசு வேறாய்க் கல்வியிற் பதிகிறதினாலே உபாத்தியாருக்குச் செய்யுங்கொடையாலும் புதல்வருக்குச் சதுர்விதத் தீனிமார்க்கத் தந்திரத்தினாலேயும் அஞ்சு வயது முதல் வாசிப்பித்து, இலக்கண இலக்கிய ஆசு மதுர சித்திர வித்தாரப் பொருளறிவு உரிச்சொல் இடைச்சொல் தனிச்சொல் செய்யுள் அதிகார நன்னூல் சூத்திரத் தெளிவிலும் ஞான வேதாந்தத்திலும் படிப்பு வாசிப்பிலு(ந்) திறமாய்ச் சமர்த்தனான பின்பு, தகப்பன் பிரயாசப்பட்டு வருத்துங் கல்வியால் இப்பிள்ளையை ராச சமத்தான முதலான கூட்டங்களில் வலிய அழைத்து இருத்திக் கொள்ளும்படியாக அறிவுண்டாக்குதல் தகப்பனுக்குக் கடன் கல்வியானதை வருத்தாத தகப்பன் எத்தனை திரவியம் வைத்திருந்து இருந்தாலும் சண்டாளக் கடை கெட்ட பாதகன் நீசன் எ-று. 10

புதல்வரைப் பெறுதல் முற்றும்.

## 8. அன்புடைமை

**71. என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**அன்பி லதனை யறம்**

எ-து என்பில்லாத ஆத்துமா வென்னுஞ் சதையுள்ளதைச் சூரியகிரணம் பட்டுக் காய்ந்தாற் போலே, அன்பில்லாத கொடுமைச் சண்டாள ரூகளைத் தர்மம் காயும் எ-று 1

**72. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பார்க்கண்**
**வற்றன் மரந்தளிர்த் தற்று.**

எ-து தவ அன்பு, தரும அன்பு, சிவ நேச அன்பு, கல்வி அன்பு, விவேக அன்பு, தயவன்பு, ரட்சிப்பு இரக்கமெனும் அன்பு மற்றிவைகளில் ஓரன்பேனும் மனத்தினிடத் தில்லாத உயிர், வாழ்க்கை நிலையில்லாக் கூட்டிலிருந்து குலாவித் திரிந்து விளையாடுவது எத்தன்மை யென்னில், பட்டமரம் பாறையின் மேல் தழைத்ததற்கு ஒக்கும் எ-று. 2

**73. புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை**
**அகத்துறுப் பன்பி லவர்க்கு.**

எ-து புறத்துறுப்பாகிய மெய் வாய் மூக்கு கண் செவி நாலு பேர்களுக்கும் அலங்காரந் தோன்றும்படி யிருந்தும் பிரயோசனமில்லை, ஞானம் என்னும் அன்பில்லாதவன் மரப் பாவைக்கு நிகர் எ-று. 3

**74. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்**
**கென்புதோல் போர்த்த வுடம்பு.**

எ-து ஞான அன்புவழியே நடப்பான் உயிர் நிலை நிற்கும். அஃதில்லாதானுயிர் என்புந் தோலும் போர்த்த உடம்பு என்று அறிவா னல்லது உயிரென்று அறியான். பேசும் பிணம் எ-று. 4

**75. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்**
**கென்போ டியைந்த தொடர்பு**

எ-து உடலாவது நவதாது என்னும் துவாரத்தில் ஆகாரம் பெற்று நிலைமையாயிருப்பது போல, உயிர்க்கும் அன்புடைமை என்னும் ஞான ஆதரவு பெறில் நிலைபெறும் எ-று. 5

**76. அன்பிற்கு மார்வ முடைமை யதுவினும்**
**நன்பென்னும் நாடாச் சிறப்பு.**

எ-து சாந்தப் பொறுமையோடுங் கூடி ரட்சிக்கும் தேவ விசுவாச அன்பு ஆர்வமென்று சொல்லப்பட்ட ஞான தேகத்தைக் கொடுக்கும். அந்த ஞானம் பிறவா நெறியாகிய முத்தி கொடுக்கும் எ-று. 6

**77. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்**
**தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு.**

எ-து எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதத்திற் பிறப்பிலும் மானிட யாக்கையிற் பிறப்பது சென்மாந்தரங்களிலே ஒரு தினையத்தனை அன்புடைமை உண்டான பலன் ஆகையால், மானிடப் பிறப்பு ஞான தேகமாகச்சே அன்பென்னும் இரக்கம் அதிகம் வேணும் எ-று. 7

**78. அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்.**

எ-து அன்பு மனத்திலே இருந்தாற்போதும். அன்பு புறத்திலே புறப்படாமல் அடைக்குந்தாழ் திறத்தவர்க்கில்லை. அன்பு இருந்த இடம் கண்ணீர் காட்டிக் கொடுக்கும் எ-று 8

**79. அன்பில்லா ரெல்லாந் தமக்குரியா அன்புடையார்**
**என்பு முரிய பிறர்க்கு.**

எ-து மனத்திலே தவ அன்பு ரட்சிக்கின்ற அன்பு இல்லா பேர் உடலுக்குத் தீனி கொடுத்த துணையனாய் உயிருக்கு யாதொரு துணையுங் கொடுக்காத பாவியாய் வாழ்ந்து மறு பிறவியும் அன்பற்ற துட்ட மிருகமானான். இரக்கம் என்னும் அன்புடையவர்கள் எலும்பு பிறர்க்குத் துணையாகும். தவஞ் செய்யும் முனிவோர் எலும்பு வச்சிராயுதமாய்க் கிரிகளைச் சிற கரிந்து அநேக உயிரையும் ரட்சிக்கும்படி தெய்வேந்திரனால் நிலைபெற்றது என்றவாறு. அதுபோலே யாவருக்கும் உபகாரம் என்னும் அன்பே பெரிது எ-று. 9

**80. அறத்திற்கே யன்புசர் பென்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை.**

எ-து தன்மத்தினாற் பெரியது அன்புடைமை. தர்மத்தை ரட்சிக்கும், தவம் வளரும், பரகெதி கொடுக்கும். அறிவிலாதான் செய்யும் மறத்தையும் ஞான அன்பு வெல்லும். தன் புதல்வருடைய அன்பு போல இருந்து உபசரிப்பது எ-று. 10

அன்புடைமை முற்றும்.

---

## 9. விருந்தோம்பல்

---

**81. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.**

எ-து விருந்துக்காரன் என்னும் அதனளவிற் பொசிக்கப்பட்ட சுற்றத்தார் அகதி பரதேசி இரப்போர் முதலான பேர் இளைப் போடும் பசித்துப் புறத்திருக்கத் தான் பார்த்தும் பாராதது போலே தன் வயிறே பெரிதாய் மலந்தின்னும் வராகம் போலே பொசிப்பது நன்றல்ல. அப்படிச் சாப்பிடுவது விஷமாகிலுங் கூட விருந்து பொசிப்பதே நன்று எ-று. 1

**82. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.**

எ-து இராத சரீரத்தை இருக்குமென்றும் நில்லாத செல்வத்தை நிற்குமென்றும் நம்பி வாழ்வார் தர்ம மென்னும் சிலாக்கியம் அறியாதார். வந்த பேருக்கு உபசரித்து விருந்து செய்யும் பலன் வெள்ளாண்மை செய்தவர்க்கு ஒக்கும். குறுணி விதைத்து ஒரு கோட்டைத் தவசம் அனுபவிப்பது போலே இம்மைக்குச் செல்வமும் ஆயிசு வார்த்தினையும் தீவினை விலக்கமு முண்டாய்ப் பொன்றுங் காலத்துக்குத் துணையாம் எ-று. 2

**83. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.**

எ-து தனத்தையும் பவிசையும் நிசமென்று தேடி வைத்திருந்து, தேகி என்பவனுக்கு நாணிப் பொருளிருந்தும் இப்பொழுதே பிச்சைக்காரன் போலே விதியற்றுத் திரியும் லோபி தர்மஞ் செய்யாதவர் தனமிழந்து தரித்திரனானால், முன்னமே பர உபகாரஞ் செய்யாமல் இந்தச் சென்னத்தில், தரித்திரத்திலே நமக்கொரு துணையற்றோம், என்று வியாகுலப்படுவர். அதனாலே இருந்த மட்டுக்குந் தான தர்மஞ் செய்வதும் விருந்து உபசரிப்பதும் நன்று. மறு சென்னம் தொலையாத பாக்கியத்தை அனுபவிப்பான் எ-று. 3

**85. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.**

எ-து அனிச்ச மலர் நாசியிலே முகர்ந்து பார்க்க வாடும். அதனிலு மிருது விருந்துக்கார ஏழைகள். அன்புடனே உபசாரம் சொல்லாமல் பிரியமில்லாத பார்வை பார்க்க இப் பேரான விருந்தர் முகம் வாடும் எ-று. 4

**85. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா**
**மடமை மடவார்கண் உண்டு.**

எ – து செல்வத்துள் இன்மை (இல்லின் தன்மை) யாவது விருந்து. ஸ்ரீயும் புருஷனும் ஒருமனதாகச் .செய்வதே விருந்து நன்மை. அல்லது பிரயோசனமில்லை. செய்தோற்குப் புண்ணியமாம். எ – று. 5

**86. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுத லின்று.**

எ – து வருகிற விருந்து பார்த்து உபசரிப்பதே நன்று. அது ஏதென்னில் தன் சரீரத்தில் ஒரு பருவந்து விதனமான காலத்தில் சீய்ப்பறிய விதனமாறுவது போல, விருந்து உபசரிப்பது மரணாந்த துக்க விசனத்தைத் தீர்க்கும். எ – று. 6

**87. வித்துவிட வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி**
**மிச்சில் மிசைவான் புலம்.**

எ – து வித்து விட வேண்டுங்கொல்? வந்த விருந்தை உபசரிப்பதுமாய் அன்புடனே அவர்களுக்கு இடுவித்து மிஞ்சினதைத் தான் பொசிப்பது, வயலுக்கு எருவுங் குழையும் போட்டுத் தண்ணீர் தாழ்ச்சியில்லாமல் தேக்கில், ஒன்று நூறாய் விளையுமாம். அப்படிப் போல் விருந்தை உபசரிக்கும் தர்மம் ஒன்று நூறாய் விளையும். எ – து. 7

**88. அகமலர்ந்து செய்யா ளுறையு முகமலர்ந்து**
**நல்விருந் தோம்பு வானில்.**

எ – து வந்த விருந்தைக் கண்ட வுடனே அளவில்லாத திரவியம் பெற்ற சந்தோசம் போலே, முகமலர்ந்து தயவுடனே விருந்து செய்வானிடத்தில் இலக்குமிதேவி இருந்து வேண்டுங் குறை முடிப்பாள் எ – று. 8

**89 செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு.**

எ - து வந்த விருந்தின் மனமகிழும்படி உபசாரமாய் அன்னம் விடுவித்து இன்னம் வருகிற விருந்துண்டோ என்று வழி பார்த்துக் கொண்டு திரியும் புண்ணிய புருடனுக்குத் தேவ லோகத்தில் தேவர்கள் அருமையுடனே நல்ல விருந்தனாய்க் கொண்டாடுவார் எ - று. 9

**90. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்**
**துணைத்துணை வேள்விப் பயன்.**

எ - து தருமங்களிலே மேலானது வந்தோரை விருந்து உபசரிப்பது மரணாந்த காலத்துக்குத் துணை வரும். தன் உறவுக்காரப் பெண் பிள்ளை புத்திரர் சுற்றத்தார் உடலுக்குந் துணியில்லை உயிருக்குந் துணையில்லை. செல்வமும் இருந்தாற் போலே நசித்து மற்றோர் கைச் சிக்கும். நாம் இட்டு ஈயாமற் சம்பாதித்தது பல விதத் துன்பத்துக்கு இலக்காம். விருந்தை உபசரிக்குந் தர்மம் எப்போதும் துணையாய்ச் செல்வங் கொடுக்கும் எ - று. 10

விருந்தோம்பல் முற்றும்.

## 10. இனியவை கூறல்.

**91. இனிய வுளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.**

எ - து புண்ணிய வழிபாடும் சிவகீர்த்தியும் நல்லோர் பெருமையும் ஆருக்கும் அன்பு கூறும்படி சொல்லப்பட்ட நல்ல வார்த்தை தேமாங்கனி போலிருக்க, அதை விட்டுத் தீய வான கெடுதியுங் கோளும் குண்டணிப் பொல்லாங்கும் பொறாமையும் காமாதி செருக்கும் பேசுவது வேப்பங்காயைத் தின்றதற்கு ஒக்கும் எ - று. 1

**92. இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது.**

எ-து நன்மையைத் தருவதாயுள்ள நல்ல வசனம் நன்மையே தரும். அதுவறிந்தும் நிச அன்பு விட்டுப் பொல்லா வசனமான குடிப் பழியும் கெடுக்கும் புத்தியும் புறஞ்சாய்ஞ்சு வழக்கும் பேசுவது தீமையான பாவத்தின் வழிச் செல்லல் எ-று. 2

**93. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்**
**கணியல்ல மற்றுப் பிற.**

எ-து தன்மை யென்னும் வசனம் பொருந்திய வணக்க முடையவனாய் ஆரும் பிரியப்படும்படி இனிய வசனஞ் சொல்வானுமாய்ப் பகைவனுக்கும் பழுது வராத நல்ல வசன முறைக் குமவனுக்கு அமர்ந்த வசனமே ஆபரணம் எ-று. 3

**94. அகமலர்ந் தீதலின் நன்றே முகமலர்ந்**
**தின்சொல னாகப் பெறின்.**

எ-து மனமகிழ்ந்து இரப்போர் விடாய் தீரும்படி சொர்ண தானம் கொடுப்பதிலும் இன்சொல்லதாகிய ஆதரவு பெற்ற வசனம் அதிகம் எ-று.

**95. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானாம்**
**இன்சொலி னஃதே யறம்.**

எ-து ஆரையுங் கிருபையோடே பார்த்து இரக்கம் வைத்துக் கேட்க வந்தவனு மனமகிழ்ந்து சொல்வினவ, இன்சொல் வசனத்துக்கு மேலான தர்மமில்லை. எ-று. 5

**96. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டும்**
**இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.**

எ-து தரித்திரிய (மேற்கொண்டு துயருறுந் துன்பமில்லை இனி)மையான வசனங் கூறுவானாகில் எ-று. 6

**97. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.**

எ-து கனாவிலுந் துடிப்பான கொடூரப் பேச்சு வராமல் இனிய வசனமான தண்மைச் சொல் இம்மைக்கு நல்லோர் என்கிற பெருந் தரும சிந்தையும் மறுமைக்கு முத்தியுங் கொடுக்கும் எ-று.

**98. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி யினிய சொலின்.**

எ-து பாவம் குறையும் புண்ணியம் பெருகும். ஆரையும் ரட்சிக்கும் இனிமையாகிய நன்சொல் கூறுவானாகில் எ-று 8

**99. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும்,**

எ-து பாவ மென்னுங் கொடுமைக்குப் பயந்து புண்ணிய மேற்கொண்ட வசனஞ் சொல்வானாகில் அவனுக்கு இம்மைக் குச் செல்வமும் மறுமைக்கு முத்தியுங் கொடுக்கும் எ-று. 9

**100. இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்**

எ-து நல்ல உபதேச மென்னும் விவேகத்தோடும் கூடிய நல்லோர் வாய்ச் சொல் ஆபத்துக் காலத்துக்கு வைத்த உடைமை போலுதவும். அவர்கள் உறவென்னும் பழக்கத்தி னாலே நன்மையான சொல்லைக் கொண்டேத்துவது இனிமை யாம் எ-று. 10

இனியவை கூறல் முற்றும்.

---

## 11. செய்ந்நன்றியறிதல்

**101. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்**
**வானகமு மாற்ற லரிது.**

எ-து தனக்கு ஆபத்துக் காலத்திலே ஆவது முன்னே ஒருவர் உதவி செய்ய அந்த உதவிக்கு மறுத்து (மாற்று) உதவி செய்வது நிகரல்ல. மூன்று லோகத்தை ஈடு பண்ணிலும் சமானமல்ல. ஆகையால் கவடற்று முன் செய்த உதவி, பிரதி உதவிக்கும் நிகரல்லாத அதிக உதவியான தருமம் எ-று. 1

**102. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்**
**நன்மை கடலிற் பெரிது**

எ-து ஒருவன் ஒருவனுக்கு நன்றி செய்யும் போது இவன் பின்னாலே நமக்கு உபகாரம் பண்ணுவானோ பண்ணானோ என்று எண்ணும் பயன் தூக்கிப் பாராமல் முன்னுபகாரமு மன்றிப் பின்வரு முபகாரமு மன்றிச் செய்த இடுக்கண் தீர்த்த ஏழைகள் முதலான பேருக்கும் உதவும் உதவிக்குச் சத்த சாகர மென்னும் ஏழு கடலும் நிகரல்ல எ-று. 2

**103. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது.**

எ-து ஒருவருக்கு நிரம்பவும் துயரப்படுவதாயுள்ள மிடியான காலத்திற் செய்த உதவிக்கு மகாமேரு கிரியும் சகல அண்டங் களும் நிகரல்ல எ-று. 3

**104. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பயன் தெரிவார்.**

எ-து ஆபத்துக் காலத்திலே வாக்குச் சகாயம் தன சகாயம் சரீர சகாயமாய தினையத்தனையாவது நன்றி செய்து உதவி யாயிருப்பினும், அதனைப் பனைப் பிரமாணமாகக் கொண்டு இந்த வேளைக்கு இப்படிச் செய்யவும் பேருண்டா என்று அதிகப் பிரியமாவார் மெய்ஞ்ஞானப் பயனை அறியும் பெரியோர்கள் எ-று. 4

**105. உதவி வரைத்தன் றுதவி யுதவி**
**செயப்பட்டார் சால்பின் வரைத்து.**

எ-து உதவி செய்யப்பட்டவனுக்கு உதவி செய்யப் போகிறவன் யாதொரு உதவியும் பெறாமலிருந்தும் வெறுமை யான வேளை ஒரு உதவி செய்யும் நன்றியைப் பார்த்து மகிழ வேணுமே யல்லாது செய்த நன்றிக்கு நாமும் ஒரு நன்றி செய்து போட வேணுமென்று நினைப்பது அவனைக் கெடுக்க நினைப்ப தாம் அது பாவம். நினையாமற் செய்த நன்றியை நினைந் திருப்பது நன்று. எ-று. 5

**106. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல**
**தன்றே மறப்பது நன்று.**

எ-து ஒருவர் வேளா வேளை உதவி செய்யும் நன்றியை மறப்பது நன்றல்ல. அப்படி நன்றியைப் பெற்றும் ஒருவர் செய்யுங் குற்றத்தை மனத்திற் போடாமல் அன்றே மறப்பது மிகவும் நன்று எ-று. 6

**107. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த**
**ஒன்றுநன் றுள்ளக் கெடும்.**

எ-து தன்னைக் கொன்றாற் போலொத்த பொல்லாங்கு செய்தாலும் அவன் தினையத்தனை நன்றி எப்போதாவது செய்ததை நினைந்து விட வேண்டும். அப்படிக்குமில்லா விட்டால் அந்தப் பொல்லாங்கைத் தன் பொறுமை யென்னும் நன்றியால் வென்று பின்னும் நன்றி செய்வர் எ-று. 7

**108.** மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

எ-து நன்றி என்றும் விடக் கடவனல்லன். துறவிலே துணிந்து துன்பத்தை நீக்கும் நல்லோர் சிநேகமும் விடக் கடவனல்லன் எ-று. 8

**109.** எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

எ-து எழுவகைத் தோற்றங்களிலும் உற்பவிக்கும் செனனங்கள் தோறும் நினைக்கப்படும், தம்முடைய மனக் கிலேசத்தைத் துடைத்தவர் நட்பை எ-று. 9

**110.** எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

எ-து எண்ணப்படாத உயிர்களை வதை செய்த பேர்களுக் குந் தரும தானங்களினாலே கெதி மோட்ச முண்டாகும். செய்த நன்றியை மறந்து அபகாரம் பண்ணுஞ் சண்டாளத் துரோகிக்கு எக்காலத்திலும் பிழைப்பில்லை. எ-று. 10

செய்ந்நன்றியறிதல் முற்றும்.

---

## 12. நடுவு நிலைமை

---

**111.** செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து.

எ-து பாவத்தின் வழிச் செல்லாமல் தரும மென்னும் நடு நிலையாகிய செப்பத்திலே நிலையாய் நிற்பவன் வங்கிஷமுந் தழைத்து ஆக்கமென்னும் செல்வமும் பெருகும் எ-று. 1

**112. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப**
**பிறவுந் தமபோற் செயின்.**

எ-து ஊதியம் என்னும் இலாபம் செய்வார்க்கு இலாபம் ஏதேதெனில் தன் காரியம் போலும் தன்பொருள் போலும் தன் சேதம் போலும் வருமென்று எண்ணிப் பிறர் காரியமும்பழு தின்றிப் பார்ப்போன் யாவரும் ஒப்புக் கொண்ட நடுவன் எ-று. 2

**113. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க் கணி.**

எ-து கயிற்றுக் கோலென்னும் சமன்வாயிலே நின்று சீர் தூக்கும் நிறையறியுங் கோல் துராசு போல ஒரு பலம் இரு பலமாகில் தன்னளவிலே நிற்குந் தன்மை போலத் தானும் சமானமாகி விவரங்களைத் தனக்கென்றும் பிறர்க்கென்றும் பாரபட்சம் வையாமற் பிரித்துப் பகுத்துப் பார்த்து அளவுக் களவாகத் தொடரும் பிரிதியும் சகலரும் ஒப்புக் கொள்ளும்படி. கண்டினைச் சொல்க. நடுவு நிலையாம் எ-று. 3

**114. கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்**
**கோடாமை சான்றோர்க் கணி.**

எ-து ஒருவேளை பலவிதத் துன்ப மென்னுங் கேடு உண்டாம். அதுவும் நிலையாதாம். ஒரு காலத்திலே நன்மை யான சுகம் உண்டாம். அதுவும் அப்படி யல்லவாம். அப்போது துன்பத்துக்கு விதனமும் இன்பத்துக்குப் பிரியமும் வர வொண்ணாது. எக்காலமும் இன்ப துன்பம் சமனாக ஒரு நன்மையாக இருப்பது அறிவென்னும் நடுவு எ-று. 4

**115. கெடுவாக வையா துலகம் நடுவாக**
**நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.**

எ-து கேடு வருங் காலத்தும் நல்லோரென்னும் நடுவான சத்தியத்திலே நிற்கும்போது அதனாலே விதனம் வரினும் அந்த விதனத்தைத் துயரமென்று சொல்லக் கடவனல்ல. எப்போதும் தருமநிலை நடுநிலை நிற்பான் எ-று. 5

**116. கெடுவல்யான் என்ப தறிகதன் னெஞ்சம்**
**நடுவொரீஇ யல்ல செயின்.**

எ-து தன்னுடைய நெஞ்சம் தான் பிடித்த நடுவுநிலை யென்னும் சத்தியந் தவறில் அப்போது துயரம் வரும் என்று அறிந்து நிலை நிற்க வேணும். அது ஏதென்னில் தனக்கு இறுதி யென்னும் முடிவு காலம் வரும் போது சத்தியந் தவறி நடுநிலைமை குன்றி ஒப்புரவும் கை விடும் எ-று. 6

**117. தக்கார் தகவிலர் என்ப தவரவர்**
**எச்சத்தாற் காணப் படும்.**

எ-து சத்தியமான நடு நிலைமையை இனிமேலுஞ் செலுத்த இவர் புதல்வர் நற்குணத்தால் வருவாராகில் போன சென்மத்திலும் இவன் நடுவு நிலைமை பெற்றவனா மென்று அறிக எ-று. 7

**118. தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்**
**பாற்பட் டொழுகப் பெறின்.**

எ-து தகுதிப் பாடாகிய நடு நிலைமை யுண்டாகில் அந்த நிலைமைக்குச் சரியாக ஒன்றுமில்லை எ-று. 8

**119. சொற்கோட்ட மில்லது செப்பம் ஒருதலையா**
**உட்கோட்டம் இன்மை பெறின்.**

எ-து வாக்கினாலே வருங் குற்றம் நாலு: பொய், கோள், பயனில்லாச் சொல், குறளை. இது இல்லாமல் நல்ல நெறி பெற்றாலும் எத்துன்பம் வந்தாலும் தான் கொண்டு செலுத்தி வரும் (நடு) நிலையை விடாத பத்தியே பெரிது எ-று. 9

**120. நன்றே தரினும் நடுவிகழ்ந்தா னாக்கத்தை**
**அன்றே யொழிய விடல்.**

எ-து சகல ஆக்கம் பெற்றாலும் நடுநிலைமை விட்டவன் காரியம் நிலைநில்லாது. சத்தியந் தவறி நடு வென்னும் சரியில்லாத கெடுதிக்காரனாலே சகல ஆக்கமும் வந்தாலும் நடு நிலைமை கெட்டவன் உறவை உடனே விட்டு விட வேணும் எ-று. 10

நடுவு நிலைமை முற்றும்.

---

## 15. அடக்கமுடைமை

---

மனவாக்குக் காயங்களினாலே பற்றின் வழிச் செல்லாமல் அடக்குதல் என்று அறிவிப்பது.

**121. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்.**

எ-து கண், காது, வாசனை, வாய், மனம் இதனாலே எழும்பப்பட்ட கருவி கரணங்களையு மடக்கிப் பொறுத்த பேர்களைத் தேவர்கள் கூட இருத்துவார்கள். அடக்கமில்லாமல் உளறுவதும் பொறுமை யில்லாததும் நரகத்தைக் கொடுக்கும் எ-று. 1

**122. ஒன்றானுந் தீயவை சொற்பய னுண்டாயின்**
**நன்றாகா தாகி விடும்.**

எ-து இல்லறத்தாலுள்ள மான மரியாதை ஒழுக்கம் வணக்கந் தப்பி அடங்காமல் ஒரு காரியமாகிலுங் குற்றம் வரில் நன்றாகாதாம். ஆதலால் திரிவித கரணங்களைப் பாவத்திற் செல்லாமற் காப்பது எ-று. 2

**123. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.**

எ-து வாக்கு மனங் காயம் அடங்காத படியாயிருந்தாலும் வாக்கையாவது பாதுகாக்க பின்வரும் காரியம் அறியாமல் நாக்குத் துடிக்கும். இல்லாத பேச்சுச் சொல்லாத வசனம் சொல்வதற்காக. அதை எவ்விதமுங் காக்க வேணும். அப்படிக் காவதபோது துன்பம் வந்து தட்டுப்படும். அடக்கமில்லாத சிறியவனென்றுங் கண்டது சொல்லுங் குண்டுணி யென்றுந் தூற்றப்படுவான் ஆகையால் நாக்கையாவது காக்க எ-று. 3

**124. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு.**

எ-து தீயினாற் சுட்டபுண் உள் ஆறி மேனியுடனே சேர்ந்திருக்கும். என்றைக்கும் ஆறாத புண் ஏதென்றால் அகங்கார நிமித்தம் தாரதம்மியந் தெரியாமல் கொடூரமமான வசனங்களைப் பேசினால் அது கேட்டவுடனே எண்ணெய்ப் பந்தத்தினாற் பொசுக்கினது போலே சூடுண்டாய் மனம் புண்ணாகும். அதற்கு அநேக சாந்தி பண்ணினாலு மாறாதென்பதால் நாவை அடக்க வேணும். அப்படியில்லாமல் வாய்மிஞ்சி யாரையும் தூஷணம் பேச வேண்டாம் என்றது. 4

**125. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்**
**தாற்றின் அடங்கப் பெறின்.**

எ-து இன்னார் என்னுங் கீர்த்தியுண்டாகச் செல்வம் தரும். புகழ் பெருகும். பகுத்தறிவென்னும் விவேகத் தோடுகூடி யாவரையும் ஆற்றுதலான தன்மை பேசும் பெரியோர்களைச் சகலருந் துதி செய்வார்கள் என்றது. 5

**126. கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.**

எ-து ஆரொருத்தர் என்ன குற்றங்களைச் செய்து இழிவான தூஷணம் சொல்லினும் கோபத்தை விட்டு விட்டு அறிவில்லாமல் பேசினானென்று நல்ல நீதிநூல்களைக் கற்றறிந்த அறிவின் வழியே யடங்கி மனத்தில் சூடில்லாம லிருக்கும் மகத்துக்களிடத்தில் தர்ம தேவதைகள் காத்து நிற்கும் எ-று. 6

**127. நிலையிற் பிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.**

எ-து தானமர்ந்த தரும நெறியும் நீதிநூல்களிற் சொல்லிய ஒப்புரவின் சத்திய வாய்மை தவறுமல் குரு உபதேசம் பண்ணின நிலைமை பிரியாமல் நிற்கும். நல்லோர்கள் பெருமைக்கு மகா மேருவும் சமானமல்ல. மகா மேருவும் அளவுபடும்; ஆகையால் இவன் பெருமை அளவுபடாது எ-று. 7

**128. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை யுயிர்க்கு.**

எ-து காத்திருக்கப்பட்ட ஆத்துமப் பொருளிடத்தில் அடங்கிக் காமாதிகளை நீக்கியிருக்க. உயிராகிய சீவனுக்கு இதைப் போலச் செல்வமும் பெருமையும் அழகும் இல்லை எ-று. 8

**129. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.**

எ-து ஆமையானது மனுசரைக் கண்டவுடனே நாலு காலும் தலையும் அடக்கி அசையாதிருந்தது போல இவனும் பொறிபுலன்களை அடக்கி வாசனைத் திரையத்தின் வழி செல்லாமல் மனமடங்கினால் ஏழு ஜென்மத்திலுண்டாகிய பவவினைத் துன்பங்களும் நீங்கி அறிவு பிரகாசமாய்ச் செனன மரணமான துன்பத்தில் அழுந்தான் எ-று. 9

**130. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.**

எ - து எல்லோருக்கும் வணக்கமாகிய அமிர்த வசனமாய் அகங்காரம் அற்றுத் திரிவித கரணங்களையும் அடக்குவாராகில் இருளாகிய மாயை அற்று அறிவென்னும் அருட் செல்வம் பெருகி அனேகஞ் செல்வமுடைய மகா ராசனைப்போல் இருப்பார்கள் எ - று. 10

அடக்கமுடைமை முற்றும்.

---

## 11. ஒழுக்கமுடைமை

---

தான் பிடித்த ஒழுக்கமான நன்னெறியை மரணாந்த கால மட்டுங் கொண்டு செலுத்தும் ஒழுக்கத்தை அறிவிப்பது.

**131. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்**

எ - து நீதி ஒழுக்கம், ஆசார வணக்கம், வருண ஆசார ஒழுக்கம் இது முதலாகிய ஒழுக்கத்தில் நிற்கப் பெருமைதரும். ஆதலால் அந்த ஒழுக்கத்தைத் தன்னுடைய சீவனைப் போலே பேணி அந்த ஒழுக்கந் தவறாமல் நடப்பது எ - று. 1

**132. பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.**

எ - து தவ ஒழுக்கமான பொருளைத் தவற விடாமல் காத்தால் அது இம்மைக்கும் மறுமைக்கும் உயிர்த் துணையாம் எ - று. 2

**133. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.**

எ - து ஒழுக்கத்தின் மேன்மையாவது தன்னைக் கண்டு எழுந்திருக்கும் பேருக்கு நின்று கொடுத்தும், வணங்கும் பேருக்கு வணங்கியும், அமைந்த வசனஞ் சொல்லும் பேருக்குத் தணிவு சொல்லியும் இப்படிப் பதிவான ஒழுக்கத்தினாலே மேன்மையும் புகழும் எய்துவார். இதுவன்றிக் குலத்திலும் செல்வத்திலும் அதிகமானாலும் நீதி ஒழுங்கை விட்டு அதர்மமான துட்ட வாதனைக் கொடூரனாயிருந்தால் அப கீர்த்தியுண்டாய் மிகவும் சிறுமைப்படுவன், ஆதலால் ஒழுக்கவகை விட வொண்ணாது எ - று. 3

**134. ஒழுக்க முடையான் உறக்கத்தின் தீமை
வழுக்கியும் வாயாற் சொலல்.**

எ - து நீதி யொழுக்கத்துக்குப் பயந்து வணக்க மென்னுந் தவப் பதிவுந் தரும நெறியுமுள்ள கீர்த்தி மானானவன் உறங்கும் போது கனாவிலுங் கெடுதியான தீமையுள்ள வார்த்தை பிறவாது எ - று. 4

**135. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லார் அறிவிலா தார்.**

எ - து உலக ஒப்புர வென்னும் நீதி ஒழுக்கந் தவறினவன் பல சாத்திரங்களைக் கற்றும் கல்லாதவனாம். தான் கற்ற கல்வியின் குறிப்பாயுள்ள வழி நடவாமல் துர்மார்க்கமான புத்தியுடன் இருப்பதால் அறிவில்லாத மூடரிலும் அதிக மூடன் எ - று. 5

**136. மறப்பினும் ஓதிக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.**

எ - து சாதி ஒழுக்கத்திற் பிராமணனாகிலும் வேதமந்திரம் காயத்திரி முதலானதை மறந்தாலும் பின்பு சந்தை விட்டு ஓதிக் கொள்ளலாம். சாதி ஒழுங்கு கெட்டுப் பலருந் தூஷிக்கத் தின்னாத விடத்தில் தின்று ஒழுக்கங் கெட்ட பிராமணனுக்குப் பிராய்ச் சித்தம் பண்ணினாலும் போகாது செய்த தோஷம்; அநுபவிக்க வேணும் எ – று. 6

**137. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.**

எ – து ஒழுக்க மென்னுஞ் சத்திய வாய்மையும் தருமநெறியுந் தவ முயற்சியும் கைவிடார் அறிவோர். அது ஏதெனில் ஒழுக்கங் கெட்ட பிராணச் சேதம் வந்ததற்கு ஒக்கும் எ – று. 7

**138. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்காறில் லான்கண் உயர்வு.**

எ – து கோபமுங் கொடூர வஞ்சகமும் எல்லாரையுங் கெடுத்துத் தான் ஈயாமல் வாழ வெண்ணும் நெட்டூரப் [பாதக அழுக்கு மனம் உடையார்க்குச் செல்வங் கூடாது. அது போல நல்லநெறி தப்பினவனுக்குப் பெருமையில்லை எ – று. 8

**139. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.**

எ - து ஒழுக்கத்தைப் பொருள் போலே பேணி வைக்க வேணும். அப்படிப் பேணாமல் மனத்தின்படி துட்ட நெட்டூரம் பண்ணி, வணக்கந் தப்பினால் அவன் பலரும் இகழும்படியான கடைப்பிறப்பான் ஆவன் எ – று. 9

**140. தன்மம் பெருக்கும் ஒழுக்கம் அதுவிடில்**
**கன்மம் பெருக்குங் கவர்ந்து.**

எ - து ஒழுக்கத்தினாலே தர்ம முண்டாம். அது தப்பினால் கர்மம் வரும் எ – று. 10

[தன்மம் பெருக்கும் என்னும் இக் குறளின் வேறாக, பரிமேலழகர் போன்ற பிற உரையாசிரியர்கள் பின்பற்றிய திருக்குறள் நூலுள் பின்வரும் திருக்குறள் இடம் பெற்றுள்ளது.

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்.]**

ஒழுக்கமுடைமை முற்றும்.

---

## 15. பிறரில்லம் விழையாமை

---

இல்லறத்தின் ஒழுக்க விசேடத்திலும் பிறர் மனையில் வாழும் ஸ்ரீயை நத்திப் பாவம் அடையாம லிருப்பது அதிக ஒழுக்கம் என்று அறிவிப்பது.

**141. அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்**
**பெண்மை நயவாமை நன்று.**

எ – து தர்மம் யாதொன்றுஞ் செய்யாமல் அநேகம் பாவஞ் செய்த துரோகியானலும் பாவத்துக்குத் தக்கது பரிகாரம் பண்ணினால் தோஷம் போகும். தன் மனையாள் இருக்கப் பிறன் மனையாளை விரும்பி நாய் போலே திரியும் பாவிக்குப் பரிகார மில்லை. ஆகையால் தன்தார தாரப் பிறதாரப் புத்திர னான புண்ணிய வானுடைய கீர்த்தியைத் தெய்வ லோகமும் புகழும் எ-று. 1

**142. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
 தறம்பொருள் கண்டார்கண் இல்.**

எ-து பிறன் மனையாளுடைய சவுந்தரியத்தைக் கண்டு அதற்குப் பல விதமான தந்திரஞ் செய்து அவளைச் சேரும் பாவிக்கு ஒரு போதும் தரும நெறியில்லை. பொருளுமில்லாமல் பழியும் பாவமுங் கேடும் வரும். அவனுடனே உறவாடின பேருக்குங் கெடுதல் வரும் ஆதலால் பிற ஸ்ரீ கெவனம் பண்ணாத புண்ணியவான் எண்ணின படியே தர்ம தேவதை நடப்பிக்கும் எ-ங. 2

**143. நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பிற்
 பிறற்குரியாள் தோள்தோயா தார்.**

எ-து உலகத்தில் எல்லோரும் தம் தாரம் தாரப் பிற தாரப் புத்திர னென்றுஞ் சத்திய வானென்றும் புகழும் படியான கீர்த்தி பெறுவார்கள். ஆரென்றால் பிறர் ஸ்ரீகளைக் கலந்து அவள் பேரில் இவன் தோள் சேராதபடி எச்சரிக்கை யாயிருந்து பிறர் தாரங்களைத் தாயென் றெண்ணும் தர்ம புத்திரன் எ-று. 3

**144. அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
 நின்றாரிற் பேதையார் இல்.**

எ-து அறமென்னுந் தர்மத்துக்குக் கடையனாய்ப் பாவத் துக்குள்ளே நிற்கும் சண்டாளனிலுங் கொடூரமான சண்டா ளன் ஆரெனில் பிறன் மனையாளை விரும்பித் திரியும் பேதைப் புத்தியான பாவையைப் போல் இல்லை எ-று. 4

**145. எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
 விளியாது நிற்கும் பழி.**

எ-து பிறன் மனையாளைச் சேரும் இன்பம் எளிதாய் யாதொரு செலவும் வருத்தமும் பயமும் இன்றி வருவதாயி ருந்து கூடினாலும், அதை விரும்புவானுக்கு மரணாந்த கால மட்டுக்கும் பாவமும் பழியும் நீங்காமல், இன்னான் பிற ஸ்ரீ கெமனஞ் செய்தவன் என்னும் அப கீர்த்தியும் நிலை நிற்கும் எ-று. 5

**146. பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்.**

எ-து பிறர் மனையாளை விரும்பித் திரியுங் கொடுமை யாலே குலத்தார் பகையும் அவளை அளிப்பவர்கள் கண்டு கொள்வார்கள் என்ற பயமும் பழியும் விலக்கப்படாத அப கீர்த்தியும் உண்டோம். உலகத்தாரும் இவன் என்ன இன்பங் கண்டு சுவானம் போலே திரிகிறான் என்று ஏசுவார்கள் எ-று.
6

**147. அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.**

எ-து தருமவழியே நடக்குங் குடித்தனக்காரன் ஆரெனில் பிறர் மனையாளைக் கண்ணால் ஏறிட்டும் பாராத புண்ணிய வான் எ-று. 7

**148. விளிந்தாரின் வேறல்லர் மற்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார்.**

எ-து பிறர் ஸ்ரீ கெமனம் பஞ்ச பாதகத்திலுங் கொடூர மாய்ச் சொல்லுவர். அது ஏனென்றால் தன்னை நம்பினவன் ஸ்ரீ யை விரும்பி இச்சிக்கும் பாவி செத்த பிணத்தோடு ஒக்கும் எ-று. 8

**149. எனைத்துணைய ராயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்.**

எ-து குலத்திற் பெரியவனாகிலும் செல்வத்தினால் மிகுந்த கீர்த்திமானாகிலும் அதனாலே பிரயோசனம் இல்லை. தர்ம நெறி விசாரித்து நடவாமல் பிறர் மாதரை விரும்புந் துரோகி பறையனிலுங் கேடு கெட்ட (புதரயிளிகுவன்) பதராகுவன் எ-று. 9

**150. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்**
**கறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு.**

எ-து உயுத்த களத்தில் ஒருத்தனாகச் சென்று அநேகஞ் சதுராதிகளை வெட்டிச் செயம் பண்ணி வருகிறதும் பெரிதல்ல. பிற ஸ்ரீ யைக் கண்டவுடனே தாயென்று எண்ணி, இச்சையாகி மனத்தை நிறுத்தி விழியாற் பாராமல் இருக்கும் அறிவுடையோர் வீராதி ஞான சூரர் எ-று. 10

பிறரில்லம் விழையாமை முற்றும்.

---

## 6. பொறுமை

---

பிறர் செய்த குற்றங்களைப் பொறுத்து மனத் தண்மையா யிருப்பது மெய்யின்பத்திலும் பெரிது என்று அறிவிப்பது.

**151. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வாரைக் காத்தல் தலை.**

எ-து பூமியை வெட்டிக் குத்திப் பலவித உபாதி செய்யினும் அது அவர்களைக் கெடாமல் இச்சித்த பொருளைக் கொடுப்பது போலத் தன்னை யாதாமொருவர் நிந்தித்துத் துஷ்ட உபாதி களைச் செய்து இகழ்ந்தாலும், அவரைக் கெடுக்க வேணுமென்று நினையாமல் அவர்கள் புத்தி யீனத்தாற் செய்தார்கள் என்று அவர்களை இரட்சிப்பதே உயர்ந்த பெருமை யுடையோர் குண மாதலால் சகல தர்மத்திலும் தவத்திலும் பொறுமையே பெரிதான தலைமை எ-று. 1

**152. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்**
**தறனல்ல செய்யாமை நன்று.**

எ-து தனக்குப் பொருளிலுங் குலத்திலும் அறிவிலும் பலத்திலும் சரியான திறமில்லாதவனா யிருந்தாலும் அவன் தனக்கு ஏலாது தப்பிதங்களைச் செய்தாலும் அவனைக் கோபித்துத் தர்ம நீதிக்கு ஏலாத கெடுதலைச் செய்யாமல் அதைப் பொறுத்துக் கொள்வது மகா நன்மையாகையால், அவனுடைய கீர்த்தி உலக மெல்லாந் துதி செய்து வணங்கும் எ-று. 2

**153. பொறுத்தல் இறப்பினை யென்றும் அதனை**
**மறத்தல் அதனினும் நன்று.**

எ-து பிறர் செய்த குற்றங்களை யெல்லாம் பொறுப்பதற்குச் சரியான தர்மம் இல்லை. பின்னும் அவன் செய்த குற்றங்களை மனத்தில் நினையாமல் மறந்து போதற்குச் சரியான புகழ் இல்லை எ-று. 3

**154. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை.**

எ-து நிரம்பவும் தரித்திரமுள்ள இல்லறவாளன் வீட்டில் விருந்து ஆள் வந்தவுடனே என்ன செய்வோம் என்று ஏங்கி வந்தவனை விசாரியாமல் சும்மா இருப்பன். அதுபோல மடவார் முதலிய பேதைப் புத்தியுடையவர்கள் செய்த கொடுமையாகிய நெட்டூரத்துக்குப் பதில் செய்ய மனமில்லாமல், அவர்கள் புத்தியீனத்தால் செய்தார்கள் என்று சும்மா பதையா திருப்பார்கள் எ-று. 4

**155. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை**
**போற்றி யொழுகப் படும்.**

எ-து நிறைவு என்னும் அறிவும் பொருளும் கல்வியுந் தர்மமும் தன்னை விட்டு நீங்காமல் இருக்க வேண்டியதற்கு ஏது என்ன வென்றால், பொறுமையாகிய சாந்தத்தைக் கைவிடாமற் காக்க வேணும் எ-று. 5

**156. துறந்தாரின் தூய்மை யுடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.**

எ - து துறவியான பெரியோராவது தவத்தின் பெரு மையைப் பெற்றோம் என்கிற ஆணவத்தினால் ஒருத்தர் செய்த பிழையைப் பொறுக்காமற் சபிப்பார்கள். இல்லறத்திலிருந்து தனக்கு இரப்பாளி முதலான பேர் செய்த பிழை பொறுக்கிறவன் பெரியவன் எ - று. 6

**157. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரிற் பின்.**

எ - து அன்னபதாதி முதலான பட்சணங்களைப் பொசி யாமல் தன்னுயிரை ஒறுத்துக் காமக் குரோதங்களை யடக்கித் தவசு பண்ணும் பெரியோருக்குத் தீமை செய்தால் உடனே சபிப்பார்கள். இல்லறத்திலிருந்து வேணது பொசித்துக் காமாதிகளை அடக்காம லிருந்தும் ஒருவர் செய்த தீமையான குற்றங்களைப் பொறுப்பது மன்றிப் பலருக்கு உபகாரஞ் செய் வதால் தவத்தின் பெருமையிலும் இல்லறத்தி லிருந்து தன்மை யான பொறுமையுள்ளவன் பெரியவன் எ - று. 7

**158. ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.**

எ - து ஒருத்தர் சொல்லும் குற்ற வசனம் பொறுக்காமல் இனங்கண்டு சீறும் வயிரவன் போலப் பொறுமை யில்லாரை மனுசனென்று உலகத்தார் கைக்கொள்ளாமல் தூஷிப்பார். சகல குற்றங்களையும் பொறுக்கும் சாந்த புருடனைத் தரித் திரன் கண்ட திரவியம் போலச் சகலரும் பூசிப்பார்கள் எ - று. 8

**159. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.**

எ - து ஒருத்தர் தனக்குச் செய்த கெடுதல் முதலான துஷ்டத் தனத்துக்குச் சரியான பதில் செய்தால் அது ஒரு நாளை யின்பம். அதைப் பொறுத்துக் கொண்டால் மரண கால மட்டும் புகழும் பிற்காலத்து நல்லவன் என்ற கீர்த்தியும் உண்டு எ - று. 9

**160. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்.**

எ - து ஆங்காரமான கொடூரத்தை யடக்க அறிவில்லாமற் பிழை செய்யும் சிறியோர்க்குத் தாழ்ந்து கொள்ளும் அறிவுடை யோரைக் கைச் செல்லாமல் இருந்தான் என்று சொல்லார் உலகத்தார் எ - று. 10

பொறுமை முற்றும்.

---

## 17. அழுக்கறாமை

---

பிறர் செல்வங் கண்டு இவனுக்கு இந்தப் பாக்கியம் ஏன் வந்தது என்று பிரதாபிக்கும் அழுக்கை விடுவது உத்தம மென்றறிவிப்பது.

**161. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் னெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு.**

எ - து பிறர் செல்வத்தைக் கண்டு தன் மனத்தில் நோகா மல் இருப்பது தரும ஒழுக்கம் அது அழுக்கற்ற நெஞ்சம். தன் ஞாயம் போலப் பிறர் ஞாயம் பார்ப்பவனுக்கு இழுக்கு வராது எ - று. 1

**162. விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும்**
**அழுக்காற்றின் அன்மை பெறின்.**

எ-து ஒருவனுக்கு வஞ்சகம் செய்து கெடுக்க வேணும் என்கிற அழுக்கு மனத்திலுள்ளவனுக்குக் கல்வி அறிவு முதலான பெருமை வராது. யாருக்கும் கெடுதல் நினையாம லிருக்கும் சத்திய மனமுள்ள வனுக்குச் சமான மில்லை எ-று. 2

**163. அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்**
**வழுக்கியும் கேடீன் பது.**

எ-து மனத்தில் எந்த வேளையும் வஞ்சகமான புலைத் தன்மை பொருந்தும் அழுக்குடையானு (க்குச்) செல்வமும் புகழும் இல்லை. ஒழுக்கமில்லாமல் யாரையும் எதிரி பண்ணுந் துட்டனுக்கு எந்நேரமும் சத்திராதிக்குள்ளே யவதிப் பட்டுத் துன்பத்தை (யடை) வான். அவனுக்கு யாரும் உதவி செய்ய நினையார்கள் எ-று. 3

**164. அரனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்**
**பேணா தழுக்கறுப் பான்.**

எ-து அரனாகிய கர்த்தாவினுடைய பாதப் பெருமை யடைய வேணுமென்கிற நினைப்பில்லாதவன் பிறருடைய செல்வத்தைக் கண்டு பெருமூச் செறிந்து மனத்திற் பொறா மைப்படுவான் எ-று. 4

**165. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதுவும்**
**உண்பதுவு மின்றிக் கெடும்.**

எ-து ஒருவர்க் கொருவர் உதவியாய்க் கொடுக்கும் பொருள்களைக் கண்டு பொறாமை யோடும் ஏங்கிக் கெடுதல் செய்யும் பாவியும் அவனுடைய சுற்றத்தாரும் உடுத்துகிற வஸ்த்திரமும் உண்கிற அன்னமுங் கிடையாமல் அலைந்து கெட்டுப் போவார்கள் எ-று. 5

**166. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமுஞ் செவ்வியான்**
**கேடு நினைக்கப்படும்.**

எ-து பிறருக்குக் கேடு செய்து தான் வாழ வேணுமென் கிற பாவிக்கு வந்த பாக்கியமும், எல்லோரும் வாழ்ந்திருக்க வேணு மென்கிற தரும நெறியுடைய சத்திய வானுக்கு வந்த ஆபத்தான கெடுதலும் இமைப் பொழுதும் நில்லாது (கெடும்) எ-று. 6

**167. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்**
**தீயுழி யுய்த்து விடும்.**

எ-து அழுக் கென்னும் வஞ்சகமும் பொறாமையு முள்ள பாவியைக் கண்ட வுடனே இலக்குமியானவள் பயந்து நில்லா மல் ஓடிப் போவள். சேஷ்ட்டாதேவி அவனிடத்தில் சிநேகிப்பள். அது வன்றி மரணக் காலத்தில் ஊழித் தீயாகி நரகாக்கினியில் கால தேவதைகள் நெடுங்காலம் அழுத்தி விடுவார்கள் எ-று. 7

**168. அவ்வித் தழுக்கா றுடையவனைச் செய்யவள்**
**தவ்வையைக் காட்டி விடும்.**

எ-து எல்லோருங் கெட்டுப் போய்த் தான் வாழ வேணு மென் றெண்ணும் பாவியினுடைய கிரக முதலான சேத்திரங் களுக்கு இலக்குமி செல்லாமல் நீங்கி நின்று மூத்தவளுக்குப் பட்டங் கட்டுவள். ஆதலால் அது பிறர்க்கு உபகார மில்லாத இரண்டு எருக்கிலை யுள்ள காடாம் எ-று. 8

**169. அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்**
**பெருக்கத்திற் றீர்ந்தாரும் இல்.**

எ-து வஞ்சகம் என்னுங் கெடு புத்தியுள்ளவன் செல்வம் பெற்று வாழ்கிறதுமில்லை. மனத்தில் அழுக்கில்லாத சுத்த புருடனை விட்டு இலக்குமி நீங்குகிறதும் இல்லை. எ-று. 9

170. **அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்**
**ஏதம் படுபாக் கறிந்து.**

எ - து அழுக்கான துர்க்குண புத்திகளை விட்டு நல்ல நீதி முறையாய் நடப்பவர்க்கு இகத்திற் கீர்த்தியும் செல்வமும் பரத்தில் மோட்சமும் உண்டாம். அது வறிந்து விவேகவான்கள் பரிசுத்த மனமாயிருப்பார்கள் எ - று. 10

அழுக்காறாமை முற்றும்.

---

## 18. வெஃகாமை

---

பிறர் வாழ்வு கண்டு நமக்கு இந்தப் பாக்கியம் வரவில்லை யென்று எண்ணும் புத்தியை விடுவது என்று அறிவிப்பது.

171 **நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்**
**குற்றமு மாங்கே தரும்.**

எ - து நடுநிலை யென்னும் நல்லறிவின் வழியான சத்தியந் தவறி அநித்தியப் பொருள்களின் பேரில் அவாக் கொண்டு அசாத்தியமான பிரயத்தனஞ் செய்து பொருள் தேட வேணு மென்று நினைப்பானாகில், அவன் குடிகெட்டு அநேக குற்றங் களையுந் துன்பங்களையும் அடைவான் எ - று. 1

172. **இறலீனும் எண்ணாது வெஃகின் விறலீனும்**
**வேண்டாமை யென்னுஞ் செருக்கு**

எ - து அணுமாத்திரமாகிலும் தரும நெறியை நினையாமல் பிறர் பொருளுக்கு இச்சித்தால் அவன் எவ்விதத்திலுங் கெட்டுப் போவான். அப் படிக்கில்லாமல் கர்த்தன் நமக்குக் கொடுத்தது போதும் என்று பிறர் (பொருளு)க்கு இச்சியாமல் இருந்தால் அவனிடத்தில் இலக்குமி குடியிருப்பள் எ - று. 2

**173. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்**
**நடுவன்மை நாடு பவர்.**

எ - து செல்வம் வருகிறது என்று எண்ணித் தீமையான காரியங்களைச் செய்யார், நடுவாகிய சமஷ்டியை யுடைய சத்திய நிலைமையான திருவருளை நாடி யிருக்கும் பெரியோர் கள் எ - று. 3

**174. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே**
**மற்றின்பம் வேண்டு பவர்.**

எ - து கொஞ்ச போகமான அநித்தியப் பொருளவாக் கொண்டு தர்மத்துக்குத் தீங்கான காரியஞ் செய்யார்கள், பேரின்ப மென்னும் மோட்சத்தை இச்சித்து இருக்கும் நல்லோர் கள் எ - று. 4

**175. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற**
**புன்மையில் காட்சி யவர்.**

எ - து இல்லாமை யென்னுந் தரித்திரியம் உள்ளவனா யிருந்தாலும் பிறர்க்குத் துரோகமான காரியஞ் செய்து பொருள் தேடார்கள், முற் செமத்திற் செய்த கன்மத்தால் இப்போது வறுமையானோம் இனிமேல் கர்மஞ் செய்தால் அதன் வினைப் பொசிப்புக்காகப் பின்னுஞ் செனனமுண்டாய்த் தரித்திரத்தை யடைவேம் என்று அதர்மஞ் செய்யார்கள், புலன் பொறிகளை வென்று அறிவின் காட்சி பெற்ற நல்லோர்கள் எ - று. 5

**176. அருள்வெஃகி யாற்றின்கண் நின்றார் பொருள்வெஃகிப்**
**பொல்லாத சூழக் கெடும்.**

எ - து முத்தியை விரும்பித் தரும நெறியிலே நின்று அருட் செல்வ மென்னுஞ் சிவ சிந்தையா (ய்) நிற்போர் அந்த நடு நிலைமை விட்டு மனைவி முதலிய பொருளிச்சை கொண்டு அலைவாராகில் பொல்லாத மாயை சூழ்ந்து கெடுக்கும் எ - று. 6

**177. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறர்கைப் பொருள்.**

எ-து குற்றமற்றுத் தன்னுடைய செல்வம் குறையாம லிருக்கும் வகை ஏதென்னில் அநியாயமாய்ப் பிறர் கைப் பொருளை வாங்காமலிருப்பது எ-று. 7

**178 அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந் தாங்கே திரு**

எ-து பிறர் பொருளுக்கு இச்சைப்படாமலிருக்கும் அறிவுடையோர் நடுநிலையின் திறமறிந்து அவர்களிடத்தில் இலக்குமி சேர்ந்து வாழுவள் எ-று. 8

**179. வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.**

எ-து தனக்கு வேண்டின பொருளிருக்கப் பிறன் பொருளுக்கு இச்சிக்கில் அந்தப் பொருள் பிணத்துக்கு அலங்கரித்த தாகும். அதற்குப் பிறர் பொருளுக்கு இச்சைப்படாம லிருந்தால் தருமமும் பொருளும் சேரும் எ-று. 9

**180. அஃகி யகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.**

எ-து குறையாமல் நிறைந்த அறிவுண்மையாவது பிறர் செல்வம் வளர்ந்திடும்படி நினைந்து அதைத் தான் இச்சியா திருப்பது அதுவன்றிப் பிறர் செல்வத்துக்கு இச்சிப்பானாகில் அவன் என்ன சாத்திரங் கற்றிருந்தாலும் புகழும் கீர்த்தியும் கெட்டு அறிவில்லாத துரோகியாம் எ-று. 10

வெஃகாமை முற்றும்.

## 19. புறங்கூறாமை

ஒருவர் குற்றத்தைப் புறஞ் சொல்லாமை யென்று அறிவிப்பது.

**181. அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்**
**புறங்கூறான் என்றல் இனிது.**

எ-து புண்ணியத்தின் வழியே செல்லாமல் பாவஞ் செய்வானாகிலும் ஒருவன் குற்றத்தைப் புறங்கூறாமல் இருப்பானாகில் அவன் யாதொரு குற்றமு மின்றி யீடேறுவான். ஒருவர் குற்றத்தைப் புறஞ்சொல்லிக் கெடுப்போன் பெரிதான குற்றமுடைய பாவி எ-று. 1

**182. அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே**
**புறனழீஇப் பொய்த்து நகை.**

எ-து அறமென்னும் தருமத்தை யழித்துப் பாவஞ் செய்வதிலும் தீதாம், ஒருவன் குற்றத்தைப் புறங்கூறுவது. ஆதலால் ஒருவர் பேரில் குற்றஞ் சொல்லாமலிருப்பது மிகவும் நன்று எ-று. 2

**183. அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்**
**புன்மையாற் காணப் படும்.**

எ-து தரும நெறியின் வழிச் செல்லுகின்ற மனமுடையவனென்பது, ஒருவர் குற்றத்லைப் புறஞ்சொல்லாம லிருப்பதால் அறியலாம் எ-று. 3

**184. அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்**
**புன்சொல் உரைப்பான் பொறை.**

எ-து மறதியால் தினம் ஒருவன் செய்த குற்றமென்னுந் துன்மார்க்கத்தைப் புறஞ்சொல்லில் அவனுக்கு வரும் கணிசத்தாழ்ச்சி நமக்கு வருமென்றெண்ணிப் புறங்கூறாத தருமவானைப் பூமியிற் பலரும் தரும தேவதையும் தாங்கிப் புகழும் எ-று, 4

**185. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி**
**நட்பாடல் தேற்றா தவர்**

எ - து இரண்டு பேர்கள் ஒருமனமாய்க் கூடியிருக்கும் சிநேகிதத்தைப் புறஞ்சொல்லிப் பிரித்து விடுவோன் ஆரெனில் நற்பொருள்களைச் சொல்லும் நூல்களைத் தெரிந்து ஒருவரை இஷ்டப்படப் பண்ணத் தெரியாத மூடன் எ - று. 5

**186. துன்னியர் குற்றமுந் தூற்றும் மரபினார்**
**என்னைகொல் ஏதிலார் மாட்டு**

எ - து ஒருவர் குற்றங்களை புறஞ்சொல்லித் திரியும் பாவியைப் பலரும் இவன் குண்டணிக்காரன் என்று இகழ்ந்து அவன் முன்னின்று யாதொரு வார்த்தையும் சொல்லாமல் தள்ளுவார்கள் எ - று. 6

**187. ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்**
**தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.**

எ - து தனக்குப் பகையில்லாதிருக்க ஒருவர் குற்றத்தைப் புறஞ்சொல்லி இகழ்ச்சி பண்ணில் அவர்கள் பகையாகிறது மன்றித் தன்குற்றத்தையுஞ் சொல்லி இகழ்ச்சி பண்ணுவார்கள் என்று தன் குற்றம் அறிந்து இருக்கும் விவேகிக்கு யாதொரு பகையும் குற்றமுஞ் சொல்லும் உயிர்கள் இல்லை எ - று. 7

**188. பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்**
**திறன்தெரிந்து கூறப் படும்.**

எ - து ஒருவன் குற்றத்தைப் புறஞ்சொல்லித் தூற்றுகின்றவனை மற்றோரும் இவன் செய்யும் குற்றம் எங்கேயென்று விசாரித்துப் பலரும் இகழும்படிக்குத் தூற்றுவார்கள். ஆதலால் ஒருவர் குற்றம் புறஞ்சொல்லாமல் தன்னில் அடங்கியிருக்கும் அறிவுள்ளோனுக்குச் சரி (ஒப்பு) இல்லை எ - று. 8

189. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்.

எ-து ஒருவன் குற்றத்தை அவனுக்கு வேண்டாதாரிடத்திற் சொல்லி வயிறு வளர்க்கிறதைக் காட்டிலும் சாவது நன்று. ஆதலால் ஒருவரைக் குற்றமின்றி நன்மை சொல்லுபவனுக்குக் கீர்த்தியும் செல்வமும் உண்டாம் எ-று. 9

190. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

எ-து ஒருவன் முன்னின்று கண்டிப்பாய் அவனைக் குற்றஞ்சொல்வது நன்று. அவனைக் காணாத விடத்திற் குற்றஞ் சொல்ல லாகாது எ-று. 10

புறங்கூறாமை முற்றும்.

## 20. பயனில சொல்லாமை

வீண்வார்த்தை சொல்லாமல் பயனுள்ள வார்த்தை சொல்லுக என்று அறிவிப்பது.

191. பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

எ-து பலருங் கோபிக்கும்படி வேண்டாதார் இகழும்படி சபைக்கு ஏறாத பயன் கெட்ட துர்வசனம் பேசுவானை எல்லாரும் இகழ்ந்து தூஷணித்துக் கேவலமாய் நினைப்பார்கள் எ-று. 1

**192. நயனிலன் என்பது சொல்லும் பயனில்**
**பாரித் துரைக்கும் உரை.**

எ-து நயனில்லாத குண ஈனன் என்று உலகத்தார் இகழு வார்கள், பயனுள்ள வசனம் பேசத் தெரியாத மூடனை எ-று. 2

**193. நயன்சாரா நன்மையுள் நீக்கும் பயன்சாராப்**
**பண்பில்சொல் பல்லா ரகத்து.**

எ - து நன்மை யென்னுந் தரும சிந்தனை யில்லாரை இலக்குமி இகழ்ந்து நீங்குவள். அதுபோலப் பயனில்லாத பேச்சுப் பேசுகின்ற மூடனை உலத்கதாரும் ஒப்புக் கொள்ளாமல் இகழுவார்கள் எ - று. 3

**194. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில**
**நீர்மை யுடையார் சொலின்.**

எ-து ஒழுக்கமுஞ் செல்வமுங் கெட்டுப்போம் பொர்யோர்கள் முன்னே பயனில்லாத கொடூர வார்த்தை சொல்லு வானுக்கு எ - று. 4

**195. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்**
**பெரும்பயன் இல்லாத சொல்.**

எ - து அருமையான நன்னூல்களை ஆராய்ந்த பெரியோர் கள் பெருமை தங்கும் அறிவுடைமை யென்னும் பயனைச் சொல்வாரே யல்லது வீணான வார்த்தையைக் கனாவிலும் சொல்லார் எ - று. 5

**196. பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த**
**மாசறு காட்சி யவர்.**

எ - து விளையாட்டிலும் பயனில்லாத வீண் வார்த்தையை வசனியார், மாயையற்றுத் தெளிந்த மனமென்னும் அறி வுடையோர் எ-று.

**197. பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கட் செய்தலிற் றீது.**

எ-து பயனில்லாத கிருத்துருவ வசனத்தைப் பல பேரும் ஏசும்படி நல்லோர்முன் சொல்லுதல் எப்படி என்னில் பெரியோர் களுக்குத் தீமை விளைத்தற்கொக்கும் எ-று. 7

**198. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.**

எ-து எந்த இடங்களிற் பேசினாலும் பயனுள்ள நன்மையே பழுதின்றிப் பேசுக. அதுவன்றிப் பயனில்லாத போலி யென் னும் வீண் வார்த்தை வசனிப்பதைக் காட்டிலும் பேசாதிருப்பது கனமுண்டாகும். பயனில்லாச் சொல் சிறுமை தரும் எ-று. 8

**199. நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று**

எ-து நயத்து இதமான தண்மை பொருந்தும் வசனமின்றிக் கொடூரமாய் இரைச்சலுடனே கேட்டோர் நடுங்கும்படி கொடூரமாய்ப் பேசினாலும் சொற்பயனிருக்க வேணும். அப் படிக் கில்லாமல் பயனில்லாத வீண்வார்த்தை பேசலாகாது எ-று. 9

**200. பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.**

எ-து பயனில்லாத வார்த்தையை நல்லோரிடத்திற் பாராட்டி வீணாட் போக்குவானை நெல்லுடனே பிறந்த பதரைத் தூற்றிக் களைகின்றாற்போலும். இவனை மனிதப்பத ரென்று நல்லோர்கள் தங்களிடத்திற் சேராமற் களைவார்கள் எ-று. 10

பயனில சொல்லாமை முற்றும்.

---

## 21. தீவினையச்சம்

தீவினைக்குப் பயந்து நல்வினை செய்க என்று அறிவிப்பது.

**201. தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்**
**தீவினை யென்னுஞ் செருக்கு.**

எ-து சென்மங்கள் தோறும் கொடுமை செய்து பிறக்கும் பாவிகள் தீவினைக்கு அஞ்சார்கள். சென்ம சஞ்சிதங்களைத் தீர்க்க வேணுமென்ற புண்ணியவான்கள் பயப்படுவார்கள் எ-று. 1

**202. அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய**
**செறுவார்க்குஞ் செய்யா விடல்.**

எ-து அறிவென்னும் விவேகத்துக்கெல்லாந் தலைமையானது எதுவென்றால் தனக்குக் கொடுமையான தீங்கு செய்து இருக்குஞ் சத்துருவுக்குத் தான் ஒரு கெடுதலும் நினையாமலிருப்பது. அவர்கள் இருவினைப் பகுதியுங் கடந்த அறிவைப் பெற்றவர்கள் என்று உலகம் கை குவித்துப் போற்றும் எ-று. 2

**203. அருங்கேடன் என்பதறிக மருங் கோடித்**
**தீவினை செய்யா னெனின்.**

எ-து கெடுதி யென்னும் பாவத்துக்கு உட்படாதவன் என்று அறியப்படும். மனவாக்குக் காயத்தினாலும் ஒருவர்க்குத் தீங்கான கொடுமை செய்யாத புண்ணியவானை எ-று. 3

**204. தீயவை தீய பயத்தலால் தீயவை**
**தீயினும் அஞ்சப் படும்.**

எ-து தீமையானது செயில் இகத்திலும் தன்னைக் கெடுத்துப் பரத்தும் ஆளாக வொட்டாமல் நரகத்தில் ஆழ்த்தி மேன்மேலும் செனன மரணத்தைக் கொடுப்பதால் நெருப்பிலும் அதிகமானது. நெருப்பானாலும் ஒரு வேளையில் தன்னை ரட்சிக்கும் பாவம் தன்னையும் தன் கொடி வழியான குலத்தையும் சுடும் எ-று. 4

**205. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை**
**வீயா தடியுறைந் தற்று.**

எ-து தீமையென்னும் பாவத்தைச் செய்தால் அவர்களைச் சென்ம சஞ்சிதமுள்ளவரையும் தொடர்ந்து வறுமையும் நோயும் துயரமும் படுத்துக் கொல்லுமதெப்படி யென்னில் தன்னிழலானது தன் சரீரமுள்ளவரையும் தன்னை விட்டு நீங்காதது போல் எ-று. 5

**206. எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை**
**வீயாது பின்சென் றடும்.**

எ-து யாருடனே பகை செய்து கொண்டாலும் நல்வசனங்களினாலே உறவு பண்ணிக் கொள்ளலாம். தீவினைப் பகை ஒருக்காலும் இவனை விட்டு நீங்காமல் இகத்திலும் பரத்திலும் பலனில்லாமல் கெடுக்கும் எ-று. 6

**207. தன்னைத்தான் காதலனாயின் எனைத்தொன்றும்**
**துன்னற்க தீவினைப் பால்.**

எ-து தன்னுயிருக்கு மோட்சமும் உடலுக்குச் சவுக்கியமுங் கொடுக்க வேணுமென்னும் பிரியமுள்ளவன் தீவினைகளைச் செய்யான், ஏனென்றால் மனமானது லெகுவாய்ப் பாவங்களைச் செய்யும். அதனாலே உடலுக்கும் உயிருக்கும் செனன மரணமுண்டாய்த் துக்கம் நேரிடுவதால் பாவஞ்செய்யப் பயன்படுவார்கள் எ-று. 7

**208. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால**
**தன்னையடல் வேண்டா தான்.**

எ-து தன் ஆத்துமாவுக்கும் உடலுக்குஞ் சவுக்கியம் அநுபவிக்க வேணுமானால், வேறொரு ஆத்துமாவை வருத்தப் படுத்தித் தீவினை செய்யாமல் இருக்கக் கடவது எ-று. 8

**209. இலனென்று தீயவை செய்யற்க செய்யின்**
**இலனாகும் மற்றும் பெயர்த்து**

எ-து தன்னுடைய வறுமையினாலே பொருள் தேட வேணுமென்று கொலை களவு நெட்டூரமான தீவினைகளைச் செய்யக்கூடாது. அகாடமாய்ப் பிறர் பொருளைப் பறித்துக் கொண்டால், அது நிலை நில்லாமற் போகிறது மன்றிச் சென்மந் தோறும் வறுமையைக் கொடுத்துப் பிறப்பாளியாக்கித் தீராத நோய்களை விட்டுக் கொன்று நரகத்தில் ஆழ்த்தும் எ-று. 9

**210. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்**
**அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.** 8

எ-து மறந்து போயாவது பிறருக்குக் கெடுதி செய்ய லாகாது. அதுவின்றிச் செய்தால் இவனைத் தரும தேவதை கெடுக்கும் எ-று. 10

தீவினையெச்சம் முற்றும்.

## 22. ஒப்புரவறிதல்

ஒருவருக்குச் செய்யும் ஒப்புரவு தெரிய வேணுமென்று அறிவிப்பது

**211. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்**
**டென்னாற்றுங் கொல்லோ வுலகு.**

எ-து ஒருவன் முன்னே செய்த உதவிக்குப் பின்பு செய்யும் உதவி சரியல்ல. அது எப்படி யென்றால், மேகங்கள் உலகத்திற் செந்துகளை ரட்சிக்கும் பொருட்டாய் பெய்யும் மழைக்கு நிகராய்ப் பதிலுதவி செய்வாருண்டோ எ-று. 1

**212 தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு.**

எ-து தான் தேடின பொருளென்னும் சம்பத்தைத் தாமுந் தவமுள்ள நல்லோர்க்கு ஒப்புரவு செய்ய வேணும். அப்படிச் செய்தால் அது வெள்ளாண்மை செய்தவனுக்கு அதிகப் பலன் உண்டான (து) போல ஒன்று பத்தாய்ச் செல்வம் பெருகும் எ-று. 2

**213. ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்**
**பேரறி வாளன் திரு.**

எ-து ஊரிலே தடாகம் நிறைந்து சகலருக்கும் உதவியாய்த் தாகந் தீர்ப்பது போல, அறிவுள்ளவரிடத்தி லிருக்குஞ் செல்வஞ் சகலருக்கும் பிரயோசனமாய்ப் புண்ணிய வழிக்கும் உதவியாம் எ-று. 3

**214. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின்.**

எ - து பயனைக் கொடுக்கும் ரசனை பொருந்திய மாப் பலா முதலாகிய கனி வர்க்கங்கள் உள்ள மரங்கள் சகலரும் இச்சித்துப் பொசிக்கும்படி உதவியாயிருப்பது போலும் நல்லோரிடத்திலிருக்கின்ற செல்வம் துறந்தோர் முதலாகிய ஏழைகளுக்கும் தருமத்துக்கும் பொதுவாயிருக்கும் எ - று. 4

**215. மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.**

எ - து சகல ரோகங்களையுந் தீர்க்குஞ் சஞ்சீவியான மருந்து ஊருக்குள்ளே யிருந்து சுதந்தர மின்றி நின்று பலருக்கும் உபகாரஞ் செய்வது போலப் பரமார்த்தமாய்ச் சகலமான பேர்களையுந் தன்னைப் போல நினைந்திருக்கின்ற பசிப்பிணி புண்ணியவான்களிடத்திலிருக்குஞ் செல்வம் வறுமைப்பிணி இடுக்கண் முதலான துன்பங்கள் நேரிடும்பேர்க்கெல்லாம் பொதுவாயிருந்து ரட்சிக்கும் எ - று. 5

**216 நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயுநீர்மை
செய்யா தமைகலா வாறு**

எ - து ஒப்புரவென்னும் ஈகையுள்ள நல்லோர்களிடத்தில் செல்வமில்லா திருந்தாலும் பசிக்கிற தென்றவர்களுக்கு இல்லையென்னாமல் இருந்த மட்டுங் கொடுத்துத் தாகந் தீர்ப்பான். அது எப்படி யென்றால் பெருக்காறானதிற் செலம் (நீர்) வற்றிப் போன போதிலும், செலம் (நீர்) இல்லையென்னாமல் ஊற்று ஊறினது போல் எ-று. 6

**217 ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்**

எ-து செல்வமிருந்தால் இருந்ததுக்குத் தக்கது ஒப்புர வறிந்து கொடுக்குங் கீர்த்திவானே உயிரோடே வாழ்கின்றவன். ஒப்புரவறிந்த ஈயாத லோபி செத்த பிணத்தோடு ஒப்பாவான். அவன் செல்வம் பிணத்துக்கு அலங்கரித்ததாம் எ-று. 7

**218 இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்**
**கடனறி காட்சி யவர்.**

எ-து ஒப்புரவறிந்து ஈவதனாலே செல்வங் குன்றி வகை யற்ற போதிலும் இயன்ற மாத்திரம் கடன் வாங்கிச் செலவு செய்வார்கள் அறிவுள்ளோர்கள் எ-று. 8

**219. ஒப்புரவி னால்வரிங் கேடெனின் அஃதொருவன்**
**விற்றுக்கோட் டக்க துடைத்து.**

எ-து ஒப்புரவு செய்து தருமந் தேடுங் காலத்தில் வறுமை யுண்டாய்ப் பொருள் கெட்டுப் போன போதிலும், மன மெலிந்து ஒப்புரவு கைவிடாமல் தன்வீடு முதலான (வற்றையும்) தேகத்தையும் விற்றாவது ஒப்புரவு என்னும் புகழை நிலை நிறுத்துவார்கள் புண்ணியவான்கள் எ-று. 9

**220 புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே**
**ஒப்புரவின் நல்ல பிற**

எ-து ஒப்புரவறிந்து கொடுக்குந் தருமத்தைப் போல் இன்பம் தேவ லோகத்திலுங் கிடையாது. இந்த உலகத்திற் செய்த பலனைத் தேவ லோகத்திற்போய் அனுபவிக்கறதே யல்லாமல் தேவ லோகத்திற் செய்ய வேண்டிய தருமமில்லை யாகையால் பூலோகத்திற் செய்யும் பலன் இவ்வுலகத்திற் கீர்த்தியுந் தேவலோகத்திற் பதவியுங் கொடுக்கும் எ-று. 10

ஒப்புரவறிதல் முற்றும்.

---

## 25. ஈகை

ஈகை கொடுப்பது பெரிதாகிய தர்மம் என்று அறிவிப்பது.

**221. வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து.**

எ - து வறிஞரான தரித்திரியப் பட்டிருக்கிற ஏழைகளுக்குக் கொடுப்பதே தர்மம். மற்ற செல்வர்க்கு நிதியுள்ள பேருக்குக் கொடுக்கிறது பிரதி உபகார நிமித்தம். அது எப்படி யென்றால் குறியாகிய மேகங்கள் சமுத்திரத்திற் செலத்தை வாங்கிச் சூல் கொண்டு ஒன்று கோடியாய் வருஷித்தது போலப் பிரதி உபகாரஞ் செய்வார்கள் எ - று. 1

**222. அற்றா ரழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி.**

எ - து இடம் பொருள் ஏவல் இல்லாமல் வறுமைப் பசியுடையவர்களுக்குக் கொடுக்கிறதே கொடை. அப்படிக்கு இல்லாமல் தனக்குச் சமானமான பேர்களுக்குக் கொடுக்கிறது திரவியத்தைத் தேடித் தர்மஞ் செய்யாமல் புதைத்து வைத்ததற்கு ஒக்கும் எ—று. 2

**223. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை**
**மாற்றுவா ராற்றலின் பின்.**

எ - து ஆற்றுகிறது ஏதென்னில் பசியாற்றுகிறதே பெரிது. சருகி பொசித்துத் தவசு பண்ணும் பெரியோரிலும் பசிக்கிறதென்கின்றவர்களுக்குப் பசி ஆற்றல் செய்கிறவன் அதிகத் தவமுள்ளவனாம். அது எப்படி யென்றால் தவசு பண்ணும் பெரியோர்கள் தன் பசியாற்ற வகையில்லாமல் சருகு பொசிக்கிறவர்களிடத்தில் இரப்பாளி போய்ப் பசிக்கிறது என்றால் அவன் பசியை மாற்ற மாட்டார்கள். ஈகையுள்ளவன் தன் பசியும் பிறர் பசியும் மாற்றுதலால் ஈகைத்தவமே பெரிதாம் எ-று. 3

**224.** **பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்**
**தீப்பிணி தீண்ட லரிது**

எ - து பசித்தபேர் உண்டோவென்று விசாரித்து உபசரத்துடனே அன்னங் கொடுக்கும் தர்மம் உடையவனைப் பசியென்னும் வறுமை அணுகாது எ - று 4

**225.** **இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய**
**தாமே தமியர் உணல்.**

எ - து தேகியென்று வருகிறவன், உயிரும் தேகமும் ஒடுங்கிச் செல்வமுள்ளவன் என்று கேட்க, இவன் அவனைக் கோபித்து இல்லையென்பதால் இந்த லோபிக்குச் சரியான இரப்பாளியில்லை. மனக்கஷ்டமே தரித்திரிய மென்றாகாது. இரப்பாளிக்கு அன்லாம் நிரம்பி யிருப்பதால் அவனுக்குக் குறை வில்லை எ - று. 5

**226.** **ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை**
**வைத்திழக்கும் வன்க ணவர்.**

எ - து ஈயானது தேனைச் சேர்த்து வைத்துக் கொண்டு தானும் பொசியாமல் ஆகாசத்தில் வலியவனுக்குக் கொடுத்து விடுவது போலே லோபி சொத்தைக் கொள்ளையிட எல்லோருந் துணிவார்கள் எ – று. 6

**227.** **சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்**
**ஈதல் இயையாக் கடை**

எ – து ஈயாத லோபி யென்று பேருண்டாகிறதை (விட) வீணா இறந்து போகிறது நல்லது. எதனாலேயென்றால் உலகத்தில் இரப்பாளி முதற் சகலரும் இந்தப் பாவிப்பயல் சாகானோவென்று முறையிடுவார்கள். அதைக் கேட்டுத் துக்கமுண்டாகுவதால் இருந்து பயனில்லை யாகையால் இறக்கிற (தே) நன்மை எ – று. 7

**228. இன்னா திரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணு மளவு.**

எ-து வறுமையின் கொடுமையால் தேகியென்று கேட்பது அரிது வறுமையின் கொடுமையாலே கொடுக்கின்ற தாதாயா ரென்று விசாரித்து வருமளவும் விசாரத்துடனே வந்து ஈகையுள்ளவன் முகங் கண்டவுடனே சந்தோஷமாயிருப்பன். ஆகையால் தேகியென்பவனும் இல்லையென்றால் அவன் துயரப் படுவன் அதனாலே லோபமுள்ளவன் கெடுவான் என்றது எதனாலே யென்றால், இரப்பாளி யானவன் தன் வறுமையின் கொடுமையால் இந்தப் பாக்கியவானிடத்திற் போனால் நம் முடைய பசி ஆறும் என்று வெகு நம்புதலாய் மினக்கட்டு (வினைக்கெட்டு) வருவான். இவனிடத்தில் வந்து சேர்ந்து காத் திருந்து குறைகளெல்லாஞ் சொல்லிக் தீரவெகுநேரஞ் செல்லும். அதின் பேரில் இவன் ஒன்றுங் கொடாமல் இல்லை யென்ற வுடனே மனம் நொந்து தன் வறுமைத் துக்கமும் இவனிடத்தில் வந்து அலைந்த துக்கமும் பெறாமல் கர்த்தனே என்னை இப்படி வறுவையாக்கி இந்தப் பாவிக்கு இய்படிச் செல்வம் தந்தாயே யென்று நோவதால் இந்தப் பாவியையும் இவன் செல்வத்தையும் தரும தேவதை கெடுக்கும் எ-று. 8

**229. இலவென்னும் எவ்வம் உரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.**

எ-து அதிக செல்வமிருந்தால் தன்னிடத்திலே யாசகம் ஏற்றவன் புறத்திலே போய்க் கையேந்தாமல் அவனுக்கு யாதொரு தாழ்ச்சியுமில்லாமற் கொடுப்பார்கள் குடிப்பிறந்தார் செய்கை எ-று. 9

**230. நல்லா றெனினுங் கொளல் தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.**

எ-து இவர் நல்லவராய்ப் புண்ணியமுள்ள சொத்து வாங்கிறதினாலே சிலாக்கியமுண்டாம் என்றாலும் ஏற்பது பொல்லாதாம். இவன் மகா பொல்லாத சண்டாளன் இவன்கை யிலே கொடுத்தால் நகரம் என்றாலும் கொடுப்பதே நன்று என்றவாறு.

நல்லாரும் ஏற்பது பொல்லாது. பொல்லாதானாகிலும் கொடுப்பது புகழ் எ-று. 10

ஈகை முற்றும்

## 24. புகழ்

மானிடனாகப் பிறந்தால் புகழென்னும் நற்கீர்த்தியுடனே வாழ வேணுமென்று அறிவிப்பது

**231. தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.**

எ-து பிறந்தால் செல்வம் பொருந்திக் கொடுக்கிற தவத்துடனாவது கல்வியறிவினாலாவது ஞானக்கீர்த்தியினாலாவது சாந்தம் என்னும் பொறுமையினாலாவது எந்தப் புகழுடனேயாவது வாழ வேணும், அந்த நெறியில்லாதார் பிறப்பதிலும் பிறவாம லிருப்பது நன்று எ-று. 1

**232. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல**
**தூதியம் இல்லை யுயிர்க்கு.**

எ-து ஆத்துமாவுக்குப் பயன் பிறந்தபோதே வறியோருக்குக் கொடுத்துப் புகழ்பட வாழ வேணும். அல்லாதார்க்கு வேறு கெதியுள்ள பயனைக் காணோம் எ-று. 2

**233. ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்**
**பொன்றாது நிற்பதொன் றில்.**

எ-து ஈகை யென்னும் புகழுடனே வாழ்ந்தால் பூமியும் இடங் கொடுக்கும். செல்வ மென்னும் புகழ் நில்லாது. சருவ காலமும் இன்னா னென்று கீர்த்தி நடக்கும்படி ஊருணி, தெப்பம் சிறப்போடு பூசனை தரும் பலனைச் செலுத்த வேணும். அது புகழாகும். மற்றொன்றும் நிலை நில்லாது எ-று. 3

**234. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்**
**போற்றாது புத்தேள் உலகு.**

எ-து பூமியின் கண்ணே சருவ சீவனையும் தன்னுயிர்போற் காத்து, அடைந்தோர் இடுக்கணுந் தீர்த்து எல்லோரும் நல்லவர் என்று புகழும்படி பிறந்தால் தெய்வலோகமும் பூலோகமும் வாழ்த்தும். தேவர்களை மேலோகம் புகழாது, இவனைப் புகழும் எ-று 4

**235. உரைப்பார் உரைப்பவை யெல்லாம் இரப்பபார்க்கொன்**
**றீவார்மேல் நிற்கும் புகழ்.**

எ-து சொல்லுவார் சொல்லுவதெல்லாம் தேகியென்பார்க் குக் கொடுப்பார் மேலதே. அந்தக் கீர்த்திமானுக்கே புகழன்றி உடைமைப் புகழில் பெரிய செல்வக்காரனென்றாலும், கொடுத்து ஈயாப் பாவிக்கு அவகீர்த்தியல்லது புகழில்லை எ-று 5

**236. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை**
**இகழ்வாரை நோவ தெவன்.**

எ-து முற்செனனத்திற் புகழுண்டாக வாழவேணுமென்று விரதங்களை நேராமல் இரப்போர்க்கும் ஈயாமல் தன் செல்வம் தனக்கு என்றிருந்த பதரே இந்தச் செனனத்தில் நெடுஞ் செல்வம் பெற்ற பேர் இகழ, நீ நோவது ஏனோ? ஆதலால் கொடுக்கும்போது நிந்தனையாக ஒருவன் சொன்னாலும் அதை மனத்திற் குறியாமல் கொடுப்பதே புகழ் எ-று. 6

**237. வசையென்ப வையகத்தார்க் கெல்லாம் இசையென்னும்**
**எச்சம் பெறாஅ விடின்**

எ-து செல்வம் பெற்றுங் கீர்த்தியுடனே வாழாத பேரை வசையாக உலகத்தார் சொல்லுவார். ஏனெனில் இந்தச் செல்வம் இவனுக்குச் சொந்தமானால் அல்லவோ கீர்த்தி பெறக் கொடுத்து இன்பம் பெற்று வாழ்வான். எவனோ இந்த முதலுக்குப் பிறந்திருக்கிறான் என்னும் புகழ் வசையாய்த் தொனிக்கும். எ-று. 7

**238.** **வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்**

எ-து ஈயாத லுத்தன் என்னும் வசை கொண்டவனுங் குன்றி விடுவான். நற்கீர்த்தியை வேண்டாத அவன் பதியும் கெடும் எ-று.

**239.** **நத்தம்போற் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.**

எ-து சங்காயிரஞ் சூழ வாழ்ந்து கொண்டு கேடில்லா திருக்குஞ் சமுத்திரத்து வலம்புரி போலே, சாக்காடு வருவதற் குள்ளாகத் தன்கிளைகள் முதலான அரதேசிகளும் தன்னைச் சூழ வாழும்படி உபகாரஞ் செய்து புகழ் பெருகும் வாழ்வுடை யோன் ஆரெனில் அக் கீர்த்திமானுக்குக் கைமுறையும் மனச் செயலும் வரும் எ-று. 9

**240.** **வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.**

எ-து யாவரும் எதற்கும் வசை சொல்லாமல் வாழ்கிற வாழ்வே குடித்தன லட்சணம். அதுவன்றியும் வித்தையும் புத்தியும் அறிவும் குலவொழுக்கமும் சந்தோஷ வார்த்தையும் ஈவும் தர்மப் பெருமையுடனே வாழ்வது நிரம்பவும் பெரிதான புகழ். இதுவிட்டுப் பொருட் செல்வம் வேண்டிய இசையுடனே யிருந்தாலும் கீர்த்தி யில்லான் வாழ்வறிய மாட்டாத பிணம் எ-று. 10

புகழ் முற்றும்.

## 25. அருளுடைமை

**241. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.**

எ-து சர்வத்திரானிடத்திலுங் கிருபையுண்டாய் ரட்சிக்குங் குணம் பொருந்தும் நெஞ்சினோர்க்கு இருளைப் பொருந்திய பாவஞ் சேரும் படியுள்ள நரக லோகம் இல்லை எ-று. 1

**242. மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை**

எ-து தன்னுயிர் போலே சத்துரு மித்துருவையுஞ் சகல வுயிரையும் பரிந்து பார்த்து நடப்பாற்கு ஐம்புலனாலே விளையும் பாவமும் தீவினைப் பகையும் பயமும் இல்லை எ-று. 2

**243. நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றான்
தேரினும் அஃதே துணை.**

எ-து பாவத்துக்குப் பயந்து நல்லநெறி ஏது என்று எல்லோருக்குங் கிருபை வைத்து விசாரிப்பதே உயிருக்குத் துணை, லோகத்துக்கும் அருளுடைமையாம் எ-று. 3

**244. அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.**

எ-து பரப்பிரம சொரூபத்தின் அருளுந் தரும அருளும் விரும்பும் புண்ணியரிடத்தில் கிலேசமென்னுந் துன்பம் வராது பூமியும் ராசாவும் சகல வுயிரும் அவர்கள் நினைவின் படி விழுந்து நமஸ்காரம் பண்ணுவார்கள் எ-று. 4

**245.** **பொருள்நீங்கிப் பொய்ச்சார்ந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.**

எ-து சத்தியமென்னும் நிசத்தைச் சேராமல் பொய்நெறி யென்னும் பாவத்தை விளைப்பவன் ஆரெனின், பரம அருளும் தருமச் செயலுங் கிருபையுமில்லாத துட்ட நெட்டூரன் என்னுந் துரோகி. அருளன்றி இருளுள்ள பாவத்தைச் செய்வான் எ-று. 5

**246.** **பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாத லரிது.**

எ-து பொருளில்லார் ஒருகாலத்திலாவது செல்வராய் விளங்கிக் கொண்டிருப்பார். அருளென்னும் கிருபையற்ற பாவி ஒரு காலமுங் கடைத்தேறாமல் நரகத்துக்கு ஆளாவார் எ-று. 6

**247.** **அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.**

எ-து மெய் வாய் கண் மூக்குச் செவி குறைவுபாடின்றி யிருப்பது தேகரூபச் செல்வம். அதிற் பெரிய செல்வம் அருளுள்ள செல்வம். பொருட் செல்வம் அறிவில்லாதவனிடத்திலும் உண்டு. நிலையற்றது. ஆகையாலே யாவருக்குங் கிருபையுடைய மனம் பொருந்தியிருக்கிற அருட் செல்வம் இக பரம் இரண்டுக்கும் அருமையான செல்வம் இகத்திலுள்ளார் சம்பாதிக்குந் திரவியம் ஈய்வில்லாமலிருக்கும் சண்டாளரிடத்திலும் இருக்கும். நல்லோர்கள் பொருள் அசேதனம் என்று (அதனை) விரும்பாமல் அருட்செல்வத்தை விரும்புவார்கள் எ-று. 7

**248. வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.**

எ-து தான் ஏழைகள் பேரில் மூர்க்கமாய் விழுந்து கோபிக்குங் கோபத்தைத் தன்னைத் தெண்டிக்கும் ராசனிடத்திலாவது வலிமையுண்டானவனிடத்திலாவது கோபித்தால் அறிந்து கொள்ளலாமே. அதுபோல, இப்போது கிருபையை விட்டுக் கொடுமை செய்து அருளில்லாமல் வன்கண்மையாய் வைராக்கியஞ் செலுத்தும் அருமை எமனிடத்தில் அறியலாம். ஏழைபேரிற் கொடுமை தவிர்த்துக் கிருபை வைக்க வேண்டியது எ-று. 8

**249. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.**

எ-து குழந்தை கையில் மாணிக்கம் போல அறிவில்லான் செய்யுந் தருமம். அது எப்படியென்றால் செல்வம் அறியாதான் திரவியங் கண்டெடுத்தால் தன்னையறியாமல் சந்தோஷம் வந்து ஆரையும் பொருளாய்ப் பாரான். அதுபோலக் கிருமை அருளன்றித் தருமம் செய்யாதவன் அபூருபமா ஒரு தருமஞ் செய்தால் அதுவே பிரபலமாய் அதிசெயப்படுவானாம். அறிவுள்ளோன் கிருபையும், அறிவற்றோன் பெருத்த தருமமுஞ் சரியாகும் எ-று. 9

**250. அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு.**

எ-து அருளில்லார்க்குத் தெய்வ லோகத்தில் உதவியில்லை நரகர் துணையாகும். பொருளில்லாத பேர்க்குச் சுற்றம் பூலோகம் துணையில்லை. ஒண்டியாய் வறுமை துணையாயிற்று. ஆகையாலே அருளிருந்தாற் பொருளுண்டாம் எ-று. 10

அருளுடைமை முற்றும்.

## 26. புலான் மறுத்தல்

மாமிசந் தள்ளல். சருவ சீவன்களிடத்திலும் கிருபை யுண்டாகில் புலால் மறுக்க வேணும்.

**251. அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர்செகுத் துண்ணாமை நன்று.**

எ - து எக்கியங்களில் நெய்க்குடமான சமுதை நவதானியங்கள் இறைத்து ஆயிரம் யாகங்கள் செய்த பலனிலும் பெரிது, ஓர் உயிரை வதை செய்து புலாலைத் தின்னாமல் இரக்கம் வைத்திருப்பது அதிக நன்மை எ - று. 1

**252. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா வுயிருந் தொழும்.**

எ - து தன்னுயிரைச் சாகப் பார்த்தல்லவோ ஒரு உயிரைக் கொல்லவேணும் என்று இரக்கம் வைக்கும் புண்ணியனையும் புலாலை மறுத்தானையும் இந்த உண்மையுள்ளவனைச் சகல வுயிரும் இவனாலே நமக்கு வாதனை இல்லையென்று கையெடுத்துக் கும்பிடும். இவனுங் கிருபை பெற்று வாழ்வான் எ - று. 2

**253. அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்**
**பொருளல்ல தவ்வூன் தினல்.**

எ - து அருளாவது ஏதெனில் சிவபூசை சிந்தனை, பகவ வணக்கம். உபதேச நெறியில்லாமல் திரிவதே மருளாம். பின்னும் பிற வுயிர்கள் மருளும்படி துடிக்கத் துடிக்க வதை செய்யுங் கொலை ஆகாதாம். அதே கொல்லாமை யென்னும் விரதம் உபதேச நெறி புலால் மறுத்தலாம். உபதேச நெறி யில்லான் உண்ப தெல்லாம் புலாலாம். ஆகையால், அருள் என்னும் உபதேசம் பெறுதல் கொலையில்லான் எ - று 3

**254. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி**
**யாங்கில்லை ஊன்தின் பவர்க்கு.**

எ-து பொருளைப் போற்றாமல் தருமமல்லாமல் துர்த்த னாய் வேசைக்குஞ் சூதுக்கும் பெறுதலுமன்றி (யாபகாசம்) ஆபாசம் பண்ணுகிற பேரிடத்திலே திரவியஞ் சேர்ந்திராது எ-று. 4

**255. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூ னுண்பானேல்**
**எங்ஙனம் ஆளும் அருள்.**

எ-து தன்னுடம்பு வழுவாய்ப் பெருத்தும் பிடிக்கப் பாவ மென்று எண்ணாமல், பிறவுயிரென்னும் ஆடு மாடு கோழி மிருகம் பக்ஷி மச்சம் முதலான உயிரை அருளில்லாமற் கொன்று, சந்தோஷப்பட்டு மாமிசத்துக்குப் பிறவுடலைத் தின்னும் அறி வில்லானுக்குத் தேவதா அனுக்கிரகமும் கிருபையும் எப்படி யுண்டாம்? பிற வுயிருக்கு இடுக்கண் பண்ண இவனுக்கு வரும் இடுக்கண் எப்படித் தீரும்? எ-று. 5

**256. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்**
**புண்ண துணர்வார்ப் பெறின்.**

எ-து புலாலைத் தின்னாமல் இருப்பது சுகிர்தம். அது எப்படி யென்றால் தன்னுடம்பிலே வருஞ் சிலந்திப் புண்ணை யறுத்துத் தின்பானோ. அதுபோலே, பிறவுடலும் புண்ணென்று நினைந்து இறைச்சி விரும்பித் தின்னார்கள் எவ்வுயிருந் தன்னைப் போல் எண்ணும் புண்ணியர்கள் எ-று. 6

**257. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரிற் றலைப்பிரிந்த வூன்.**

எ-து சமயங்களுக் கெல்லாந் தலைமையாகிய சுத்தமென்னுஞ் சைவ சமயத்தின் நெறியறிந்து அசுத்த மென்னுங் காட்சியுடைய பெரியோர் உண்ணார் புலாலை. அது எப்படியென்னில், அறுசுவைப் பதார்த்தங்களைப் பொசித்த பஞ்ச அறிவுள்ள உடலை உயிர் பிரிந்த வுடனே சவமென்று தள்ளி மயானத்திற் சேர்க்கும் புல்லரே, அதுபோல மற்ற உயிர் பிரிந்த உடல்களையும் நினையாமல் எப்படி நாய் நரி போலப் பொசிப்பீர் என்று நிந்தித்துத் தள்ளுவார்கள் புலாலைச் சவமென்றெண்ணி நல்லோர்கள் எ-று. 7

**258. உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.**

எ-து பிறவுயிரைக் கொன்று புலால் தின்னாத புண்ணியர்க்கு உயிர் நிலைபெற்றுப் பரமசாதகமாய்ச் சொர்க்கத்தில் வாழும். புலாலை விரும்பிப் பிற வுயிரைக் கொன்றால் அவர்கள் உயிர் நிலை கெட்டுப் பிரிந்து நரகத்தில் தள்ளிக் கரையேற வொட்டாமல் அளறில் ஆழ்த்தும் எ-று.

**259 படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்
உடல்சுவை யுண்டார் மனம்.**

எ-து படையென்னுஞ் சத்துராதிகள் போர்க்களத்திற் சென்று செயம் பண்ணி வருகின்ற சுத்த வீரனுடைய மனம் எப்படி மகிழ்ச்சியாய் ஆனந்தத்தை யடையுமோ, அப்படிப் போலப் புலால் தின்னும் ருசியினால் சீவ செந்துக்களை வதை செய்து தன் வசப்பட்டவுடனே இன்றை நன்றாய்த் தின்போம் என்று மகிழ்ச்சியடைந்து மேன்மேலுங் கொலை செய்யத் துணிவான் பாவி எ-று. 9

**260. தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்**
**வினைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.**

எ-து தான் புலால் தின்னும் பொருட்டால் ஓர் உயிரை வதை செய்து போசிக்கலாகாது வினைப்பொருட்டென்று பிராரத்துவப் போசிப்பாய் உலகத்தில் யாரேனும் மாமிசங்களைச் சமையல் பண்ணிக் கொடுத்தால் போசிக்கலாமென்றிருந்தாலும் தான் புலால் போசிக்கும் நிமித்தம் ஒருவர் ஓர் உயிரைக் கொல்லத் தான் சம்மதித்து இருக்க வேண்டியதாய் அவனும் அந்தத் தோஷம் விடாது. ஆகையால் சைவ நெறியுடனே நின்று புலாலென்னும் இச்சையைத் தள்ளிச் சுத்தமாயிருக்கின்றதே நன்மை எ-று. 10

புலான் மறுத்தல் முற்றும்.

---

## 27. தவம்

---

தவஞ்செய்யும் நெறியை அறிவிப்பது.

**261 தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லார்**
**அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு.**

எ-து உடல் தனக்கு நிலையல்ல அநித்தியம் என்று அறிந்த பெரியோர்கள் தனக்கு ஆத்தும லாபமான தவம் நிஷ்டை தேவபூசை தான தர்மம் சிவத் தியான முதலான தெய்வ (நெறி) பற்றியே செய்வார்கள். மற்ற அநித்திய வஸ்துக்களில் இச்சை வையார்கள் மற்ற மண் பெண் பொன் என்னும் ஆசையைப் பொருந்தினவர்கள் ஆசையென்னும் பாசத்தினாற் கட்டுண்டு தன்னிச்சையின் வழியே நடந்து செனன மரணமென்னும் பூமிக்கு வித்தாவார்கள் எ-று. 1

**262. தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை**
**அஃதிலார் மேற்கொள் வது.**

எ-து தவஞ்செய்வோ மென்றாலும் முன்னந் தவஞ்செய்து விட்டகுறை யுண்டானால் தவமே பெரிதாய் முயலப்பண்ணி முற்றவமுங் கைகூடும். அதுவன்றி முன் பாவ நெட்டூரங்களைச் செய்து இம்மையில் தவஞ்செய்ய வேணுமென்றால் அதற்கு விகாதமுண்டாய் மனமும் பற்றாமல் தவமு மேற்கொள்ளாமல் பந்த பாசத் துக்கமே மேற்கொள்ளும் எ-று. 2

**263. தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய**
**மன்னுயி ரெல்லாந் தொழும்**

எ-து தன்னுயிரென்னும் சீவாத்துமாவைப் பந்த பாச மென்னும் இச்சையின் வழியே நடத்தாமல் தானென்னும் பிரமத்தினிடத்திற் சேரும்படி மோட்ச வழியே நடத்திப் பிராரத் துவமென்னும் ஈசுரச் செயலால் வருகிற கர்ம பலன்களை அநுபவித் திருக்கும் பெரியோர்களை உலகத்திலுள்ள உயிர் களெல்லாம் இவன் நம் தேவனென்று வணங்கிப் பூசிப்பார்கள். மோட்ச இச்சையுள்ளவர்களும் இவனது கிருபா கடாட்ச வீட்சணத்தினாலே பிறவி சாகரத்தை நீந்திக் கரையேறலா மென்று இவனுடைய பாதத்தில் தொழுது விழுந் தெழுந்து தோத்திரஞ் செய்வார்கள் எ-று. 3

**264. ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்**
**எண்ணின் தவத்தான் வரும்.**

எ-து தவமுயற்சி யில்லாமல் பந்தபாசத்திலுழன்று திரியும்பாவிகள் கூட்டத்திற் சேராமல் தவமுடைய நல்லோர்கள் இருக்குமிடந் தேடிப்போய் அவர்களிடத்திற் சேர்ந்து தொண்டு செய்து மோட்ச சாதனங்களைப் பெறுகிறது எளிதல்ல. முன் சென்மந்தோறுஞ் செய்து வந்த எண்ணிறந்த தவமகிமை யினாலே இந்தக் குணமுண்டாகும் எ-று. 4

**265. கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.**

எ-து கூற்றம் என்னும் எமன் கோபித்துத் தன்னுயிரைப் பிடிக்க வரும்போது தவபலத்தினால் அந்தக் காலனையுஞ் செயித்துத் தன்னுயிரைக் கைவசப் படுத்தலாம் அது எப்படியென்றால் பந்த பாசமென்னும் ஆணவ காமியங்களையும் சரீரத்திரையங்களையும் துறந்து அப்பாற் சேடித்திருக்கிற பரவடிவைக் கண்டு அந்த அருட்பிரகாசத்தில் அடங்கியிருக்குஞ் சீவனை எமன் இருள் பாசமாகிய மாயையால் பிடிக்கத்தக்கதல்ல. ஆகையால் தவநோக்கு என்னுந் திருவருட்பார்வையால் கூற்றனையும் வென்று தன்னுயிரையும் தந்நிலையில் நிறுத்துவார்கள் எ-று. 5

**266. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.**

எ-து குற்றமுள்ள மாற்றுத் தணிந்த பொன்னைக் காய்ச்சிச் சுடச்சுட அதிலுள்ள களிம்பு நீங்கி மாற்றுயர்ந்து சொர்ணப் பிரகாசமாவது போலத் தவசு பண்ணும் பேர்களைக் காமக் குரோத முதலாகிய இக வாசனைத் துன்பங்கள் வந்துவாதித்துச் சுடும்போது அதற்குப் பயந்து சுத்த சாந்தம் என்னுந் திருவருளை இடையறாதே பார்க்கும் போது ஞானக்கினியென்னும் பிரகாசத்தினால் தன்னைப் பற்றியிருந்த பந்த பாசமென்னும் இருள் நீங்கித் தாமும் அவ்வருள்வடிவமாய்ப் பிரகாசித்திருப்பார்கள் எ-று. 6

**267. உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.**

எ-து தன்னைப் பற்றியிருக்கின்ற காமக் குரோத மத மாற்சரியமென்னும் கருவிக் கூட்டரவின் நோய்களை நீக்கித் தள்ளியும் தன்னியிர்க்குச் செனன மரணம் விளையாமலிருக்கின்ற வழியை எண்ணியும் பிறவுயிர்க்குத் தீயது நினையாமலிருக்கின்றவனே தவமுடையவன் எ-று. 7

**268. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்.**

எ-து சகல பற்றுக்களையும் நீக்கத் தவஞ்செய்வாரிலும் அதிகத் தவம் எது வென்றால் மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை மூன்றுந் துறந்த துறவோ ரென்னும் தவத்தாரை ஆசாரம் பண்ணி உபசரிப்பதே இல்வாழ்க்கையில் அமர்ந்தான் விசாரிக்க வேண்டிய தவமானதினாலே இடம் வைத்துத் தவம் பண்ணுவோனும். துறவோரே விசாரிக்க அதிகத் தவமாம். இடத்திலிருந்தும் பிற துறவோரை விசாரிப்பு இல்லாதார் தவம் இழந்தவர் எ-று. 8

**269. இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்**

எ-து பல நோன்பு என்னுந் தியானங்களை நேர்ந்து பொறி புலாதிகளை நிக்கிரகம் பண்ணித் தவஞ்செய்யும் பெரியோர்க்கு இலவென்று சொல்லாமற் கொடுக்கும் அறிவோர் மிடியராயிருக்கினும் பாக்கியவான்களாய்க் காரணமுடையவரானார். யாக்கியவான்கள் சிறுமையாய் மிடி பெருத்தார். எதனாலே யாகில் தவம் பண்ணுவோர்க்கு அற்பமாகிலும் பொசிப்பீயாதார் பலர் கிலேசப்படத் தரித்திரிய ரானார்கள். இதுவறிந்து தவஞ் செய்வது பெரிது. அதிலும் பெரிது தவத்தோர்க்கீவது. அல்லாதவர் பூமியில் கன்மங்களைச் செய்து நரகத்துக்கு ஏது வானார் எ-று. 9

**270. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.**

எ-து தான் வேண்டின காரியந் தவந் தருகையினாலே மென்மேலுந் தவத்தில் அதிகப் பாடுபட வேணுமென்று நல்லோர்களும் பொறி புலாதிகளையடக்கித் தியானஞ் செய்து பகவான் ஸ்ரீ பாதம் வேண்டியிருப்பார். அதனாலே மற்றுமுள்ள இன்பம் மனத்திற் கருத எதிர் வந்து நிற்கும். தவம் பண்ண அறியாத புல்லர் பூமியிற் செய்த வினைத் தொழிலால் இடைந்து செனன மரணத்துக்கு இடமாவார் எ-று. 10

தவம் முற்றும்.

---

## 28. கூடா வொழுக்கம்

தவஞ் செய்கையிலே மனத்தில் வரும் வஞ்சக அவநெறிச் செய்கையை விடுவது,

**271. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.**

எ-து தவநெறியென்னும் பேரிட்டு வெளியே நல்வசனமாகவும் உள்ளே வஞ்சகமான மனத்தை வைத்துக் கொண்டு அவநெறி செய்வானை அவனுள்ளேயிருக்கிற பஞ்ச பூதங்களும் பரிகாசமாய்ச் சிரிக்கும். அது ஏதெனில், இவன் அவநெறி செய்ய நாம் நரகத்திலே விழ ஏதுவானோம் என்று இது தெரியாமல் வஞ்சகங்கொண்டான் என்று சிரிக்கும் எ-று. 1

**272. வானுயர் தோற்றம் எவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.**

எ-து தன்னெஞ்சத்தைத் தான் அறிந்து தவஞ்செய்வாருக்கு ஆகாச முதல் பல உயர் தோற்றங்களையும் சகல அண்டங்களையும் அளவறுத்துப் பார்த்தோர்க்கும் அந்தத் தவநெறியை வஞ்சகம் என்னும் அவநெறி கெடுக்கும் எ-று. 2

**273. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரில் வன்கணார் இல்.**

எ-து மனத்தில் மூன்றாசையுங் குடிகொண்டு நெஞ்சின் அழுக்காகிய காமக் குரோதலோப மோக மத மாற்சரிய மென்னப்பட்டதும் இருக்க அதை மறைத்துப் பொறிபுலாதிகளையும் அடக்கித் தெளிந்த துறவிகளைப் போலே ஆசையை விட்டோமென்று கோலங்கொண்ட வஞ்சக மனத்தைப் படைத்த பாவி வஞ்சகத்திற்குள் வஞ்சகனாய் வாழ்கிற படியினாலே செனனந் தோறுந் துன்பந் தலைப்பட்டு நரகப் பிராப்தியாம் எ-று. 3

**274. தவமறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து**
**வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.**

எ-து வேட்டுவன் எழுத்த புறா தன் பாவனையானது போலத் தவநிலையுள் மறைந்து (அல்லவை செய்தல்) பறவை மிருகங்களை மறைப்பானுக்கு ஒக்கும் தவவேடத்தால் மறைப்பேன் எ-று. 4

**275 வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்**
**புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.**

எ-து தவத்தில் உறுதியில்லாத வஞ்சகன் உலகத்தில் வலுவாகக் கொண்ட ஈசுரவேடம் விஷ்ணுவேடம் அழுக்குமன முடையார்கள் சுமந்து கொண்டு பிழைப்பது எப்படி யென்னில் எருதானது ஒருவர் பயிரிலே களவாண்டு தின்று பிழைக்கிறதற் காகப் புலித்தோலைப் போர்த்துக் கொண்டு மேய்ந்தது போல இந்த வேடத்துடனே உலகத்திலே மேய்ந்தான் எ-று. 5

**276. பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்**
**றேதம் பலவுந் தரும்**

எ-து மூன்று வகை ஆசை குடிகொண்டிருக்கவும் பற்றற்றோமென்று வார்த்தையிலே சொல்லிப் பாவகாரியமான மனத்தனாய் இன்ப துன்பம் அற்றது போலே நடப்பதெல்லாம் அக்கிரமமே. சரி இந்த வொழுக்கத்தை லோகந்தானே யறிந்து கொள்ளும் அவர்களுக்குப்பின் குற்றம் வெகுவிதமாய் வரும் 6
எ-று.

**277. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி**
**மூக்கிற் கரியா ருடைத்து.**

எ - து புறத்தே கண்ட காட்சியைத் தன் உள்ளேயுந் தெளிந்து, தன்னைச் சார்ந்தோர் இடுக்கண் தீர்ப்பது பெரியோர் செய்கையாய் இருக்க, வேடதாரியராய் மனத்திலே வெகுவாசை யுள்ளாருங் குன்றிமணியும் சரி. மேலே காவி வஸ்த்திரச் செவப்பு, மனத்தில் ஆசைக் கருப்பு ஆதலால் குன்றிமணி எ - று. 7

**278 கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன**
**வினைபடு பாலாற் கொளல்.**

எ - து அம்பு செவ்வையாக இருந்தும் கொலை விளைத்தது. அதுபோலே, தவவேடஞ் செம்மையாயிருந்ததினாலே என்ன வாயிற்று? யாழ் கோணிச் சாய்ந்ததால் உயிர் பிழைத்து இன்ப மானான். அதுபோலே, பார்ப்பதற்கு வேடமில்லாமல் ஆன்மிக மாய்த் திருவுளச் செயலைப் பற்றியிருப்பார் துப்புரவில்லாமற் கரி கெட்டு இருந்தாலும் பழுதில்லை. ஆனதால் தண்மை பொருந்தும் ஆளாகிலும் உள்ளும் புறம்பும் வடுவற்று, அகமும் புறமுங் கசடறத் தெளிவதே நன்று எ - று. 8

**279. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்த தொழித்து விடின்.**

எ - து முண்டிதமும் சடையும் வேண்டாம். உலகம் பழித்த மூன்று வகை ஆசையும் விட்டோர்க்கு. அப்பேர்ப்பட்ட பெரியோர்களைப் பார்த்து நகைத்து ஈங்கிசை (பழி) சொல்வது தனக்குக் கேடு தேடிக் கொள்வது எ - று. 9

**280· மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.**

எ - து மனத்திலிருக்கிற கசடென்னும் மாசுள்ள தீவினைக் குற்றத்தை அறிவினாலே சுத்திபண்ண யறியாத மானிடர் நல்ல நதி தேடி மாசித்தானமாடுவார், மேலழுக்குத் தீரவல்லது ஒழுங்குள்ள நல்லவரல்ல. நல்லோரும் பொல்லோரும் அறிந்து சேர வேண்டியது எ - று. 10

கூடா வொழுக்கம் முற்றும்.

---

## 29. கள்ளாமை

---

இறந்து போவதாய் வந்தாலும் களவுக்குள்ளகப்பட லென்னுங் கெட்ட புத்தி விடுக.

**281. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.**

எ - து உலகத்திலே ஒருவர் பொருளைக் களவினாலே கொள் வோமென்று மனத்திலே நினைத்தார்க்குத் தன்னுயிர் தனக்கும் அந்தக் கபடனுக்கும் அற்பமாம் ஆயுசு. அந்த ஆயுசு விர்த்திக்கப் போவதும் இல்லை. களவில்லா'தார்க்குத் தீர்க்காயிசும் உண் டாம். கபடத்தாற் பிறர் பொருளை இச்சியாத பேருக்குத் தேவர் களும் தேவசபையில் இருத்தி வைப்பாரல்லது தள்ளமாட்டார். 1
மறுமைக்குச் சுவர்க்கம் உண்டாம் எ - று.

**282. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.**

எ - து களவென்னுங் குரூர பாவமாகியது அவன் குடி கோத்திரம் அடங்கலும் மாளாத பொல்லாங்கை விளைக்கு மல்லால் இந்தக் கபட புத்தியுள்ளவன் தர்ம தானஞ் செய் தாலும் உவர் நிலத்திலே இட்ட பயிராம் எ - று.

**283. களவினா லாகிய ஆக்கம் அளவிறந்**
**தாவது போலக் கெடும்.**

எ-து பிறர் பொருளைக் களவினால் எடுத்துச் சிறிது நாள் வாழ்வோமென்று கபடத்தினாற் பெற்ற செல்வம் ஆவது போலேயிருந்து நாழியிலே கெடுதலாய் அழிந்து போம் எ-று. 3

**284. களவென்னுங் காரறி வாண்மை அளவென்னும்**
**ஆற்றல் புரிந்தார்கண் இல்.**

எ-து களவென்றதை வலுவாய்த் திரம் பண்ணிக் கொண்டு வரும் அஞ்ஞானம், விசாரித்த காலங்களில் அளவாகிய ஆக்கை நிலையாமை என்று கண்டோரிடத்து இல்லை எ-று. 4

**285. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்**
**களவறிந்தார் நெஞ்சிற் கரவு.**

எ-து ஆக்கை நிலையாமை என்று கண்ட மனத்தின் பெரியோர்கள் தருமங்களைச் செல்வ மென்றெண்ணி நிலை பெற வைக்கும் உறுதி போலே, களவு செய்வோனுடைய மனமுங் குரூர மென்னுங் கபடமாய்ப் பிறர் உடைமைகளைக் களவு செய்வதே நிலையென்று உறுதி பண்ணுவான் எ-று. 5

**286. அளவின்கண் நின்றொழுக லாற்றார் களவின்கட்**
**கன்றிய காத லவர்.**

எ-து அளவுக்களவாயிருந்து ஆற்றும் லாபத்தை விரும்பி மோட்சமென்னும் தவநெறில் நியிற்கமாட்டார், களவாகிய கர்மந் தேடி நரகத்தினைப் படும் அபயீனர் என்னுங் கபடபுத்தி மிகுந்தவர் எ-று. 6

**287. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.**

எ-து ஞானவழி யறியாத கள்ளப் புத்திக்காரன் தவத்துக் கேலாத காரியஞ் செய்து போடுவான். என்ன பாவஞ்செய் தாலுங் கரையேறலாம். களவே ஆக்கமென்று நம்பித் திருடும் பாவிகள் ஒருகாலத்திலேயுங் கரையேற மாட்டார்கள் எ-று. 7

**288. அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொய்ச்சார்புப் பார்ப்பார்கண் இல்.**

எ-து பிறவாநெறி வேண்டி அன்புபெறுந் தருமமுங் கருதார், ஒருகாலத்தும் மூன்றுவகை ஆசையினாலே பொய் நெறியே மிகுத்துப் பிறர்பொருளைக் களவினாலே கொண்டு போக வேண்டி வாழ்வோனைக் கெடுக்க நினைக்கும் பாவிகள் கிருபை பெறார் எ-று. 8

**289. உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.**

எ-து உலகத்திலே கொடுமையான பாவம் எது என்று விசாரிப்பின், பிறர் பொருளைக் களவினாலே கொள்வோம் என்னும் நினைப்பு மனத்திலே தோன்றினுங் கொடிய பாவம். அதுபோலே தவஞ் செய்வோர்க்கு அன்பன் இரங்கிக் கொடுக் கும் பொருளன்றியிலே புரட்டால் ஒரு திருப்பணி என்னும் வேறே தருமம் போலே காட்டி வாங்குதல் கனாவிலும் நினைப் பதல்ல. என்றது களவிலும் அதிகமாம் எ-று. 9

**290. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றுங்**
**கள்ளாமை காக்கதன் நெஞ்சு.**

எ-து பரசமையத்தார் தந்த வசை கேளாமை வேண்டுமாகில் கடுமையான கபடு விடவேணும். ஆதலால் பிறர்பொருளைக் களவினாற் செய்து ஒருகாலமும் உலகத்திலே எள்ளலாகிய இகழ்ச்சி பெறாமற் பெருமை வேண்டியும் சொர்க்கத்தில் தேவரோடிருக்க வேண்டியும் ஆசையுள்ளவன் பிறர்பொருளைக் கனாவிலுங்களவு நினையான் எ-று 10

கள்ளாமை முற்றும்.

---

## 30. வாய்மை

---

சத்தியம் எனும் நிசம் சொல்க.

**291. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்**
**தீமை யிலாத சொலல்.**

எ-து உண்மையைச் சொல்லப்பட்ட நிசவான் ஆரெனில் சருவத்திராளுக்கும் தோஷ காரியமான வார்த்தையைச் சொல்லாமலிருப்பதே நன்று எ-று. 1

**292 பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கு மெனின்.**

எ-து பொய்யும் மெய்சொல்வதற்கு ஒக்கும். அதனாலே ஒருத்தரை இரட்சிக்கும் படியாய் நன்மையைக் கொண்டு தருமாகில். அந்தப் பொய்த் தோஷத்தை நன்மை பரிகரித்தது எ-று. 2

**293. உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்.**

எ-து பொய்யை நஞ்சுபோல் எண்ணி, மனம் பொருந்த மெய் சொல்லுவானாகில் அவன் சுவாமி சருவேசுரனுக்கு நிகராம். சுவாமியும எல்லாருள்ளக் கமலத்திலுமிருக்கிறார். இவன் நிசவானென்று சகலருள்ளக் கமலத்திலும், இருப்பன். உலகத்தார் அதிசயிக்கும்படி யுயிர்நிலை வெகுநாள் பெறுவன்
எ-று. 3

**294. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு**
**தானஞ்செய் வாரிற் றலை.**

எ-து மனத்தினாலும் வாக்கினாலுங் கூடிச் சத்தியமென்னும் நிசவசனம் ஆருக்குஞ் சொல்வானாகில் அவன் பூலோகத்தின் கண்ணில் லெட்சதானம் பண்ணும் பெரியோரிலுந்
தலைமையானவன் எ-று. 4

**295. பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை**
**எல்லா அறமுந் தரும்.**

எ-து நிசவசனஞ் சொல்லுஞ் சத்திய கீர்த்தியைப் போலே புகழில்லை. மெய்சொல்ல வேணுமென்று விரதங் கொண்ட நிலைமையானுக்குச் சிவபுண்ணியந் தவப்புண்ணியமு முண்டு.
பொய்யில்லா நிசஞ் சகல வரமுங் கொடுக்கும் எ-று. 5

**296 எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு.**

எ-து விளக்குப் போலே பிரகாசம் பொருந்திய எல்லா விளக்காவது தான தருமம் கல்வி சிவபூசை ஞானம். இந்தப் பலனுள்ள தீபத்திலும் சான்றோர் என்னப்பட்ட பேருக்குப்
பொய்சொல்லாதேயிருக்கும் விளக்கே அதிகச்சுடர் எ-று. 6

**297.** **பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று.**

எ-து பொய்மை யென்னும் நாசமான தீயை விட்டு நிச மென்னுஞ் சத்தியத்தை மறவாமல் மெய் சொல்லும் புண்ணிய புருடன் தானதருமஞ் செய்யாமலிருந்தாலும் நல்லது எ-று. 7

**298.** **புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை**
**வாய்மையாற் காணப் படும்.**

எ-து தேகத்திலுள்ள அழுக்கை நீரிற் குளிக்கச் சுத்தம் பண்ணும். அதுபோலே மன அழுக்கை நிசவசனத்தாற் சுத்தம் பண்ணித் தருமம் பெருக்கி வைக்கும், சத்திய வாசகக் சுத்தம் எ-று. 8

**299.** **தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்னெஞ்சே தன்னைச் சுடும்.**

எ-து பொய் சொல்லச் சாக்கிரதையாய் மூடி வரும் நெஞ்ச மென்னும் மனமறிந்த பொய்யைச் சொல்ல வேண்டாம். மனம் பொய் சொல்ல ஆத்துமா விதனப்படும். வாக்கு என்கிற புலன் பொய்சொல்ல மற்றைப் புலன்களுங் கூடவே வாக்குத் தோஷி யாலே எல்லாருந் தோஷியாய் நரகமானோம் என்று விதனப் படும் எ-று. 9

**300.** **யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்**
**வாய்மையின் நல்ல பிற.**

எ-து நிசத்தைப் போலேயுள்ள பலன் எதிலுங் கண்ட தில்லை ஆம். ஆத்துமாவைச் செனனத்தில் தள்ளாமல் சகல இஷ்டமுங் கொடுத்துப் பகவான் திருவடியிலே சேர்ப்பது சத்திய வாக்கியமல்லாமல் வேறொரு தர்மத்திலுங் கண்டி லோம். ஒரு பொய் சொன்ன தருமர் நரகங் கண்டார். என்ன அவதிப்பட்டும் பொய்சொல்லாமல் சத்தியஞ் சொன்ன அரிச்சந்திரன் சொர்க்கமுங் கீர்த்தியும் பெற்றான். நிசவசனஞ் சொல்வது அதிக சுக புண்ணியம் எ-று. 10

வாய்மை முற்றும்.

## 31. வெகுளாமை

கோபம் விடுவது.

**301. இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்**
**துறந்தார் துறந்தார் துணை.**

எ-து மாண்டு போகிற பேர்க்கு வருகிற துயரம் போலு முள்ள சினமென்னுங் கோபத்தைத் துறந்து தள்ளுகின்ற நல்லோருக்கு நிகராவதுந் துணையாவதும் ஆரெனில், பொறிபுலாதி யென்னும் ஆணவ மாயை சிறந்த தொண்ணூற்றாறு தத்துவமும் உடலோடு இருக்கப் புளியம் பழமுந் தோடும் போலே துறந்து தவசு பண்ணும் ரிஷிகளுக்குச் சரியாவார் எ-று. 1

**302. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்**
**இல்லதனிற் றீய பிற.**

எ-து தன்னுடைய கோபஞ் செல்லாத விடத்திலும் சினம் வரும். அதனாலே வலுத்தவன் செய்யும் அவமரியாதித் துயரும் படுவான். தனக்குச் செல்லுகிற விடத்திலுங் கோபம் வந்து பழிசெய்வான். இருவகைக்குஞ் சினம் பொல்லாது எ-று 2

**302. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்**
**காக்கிலென் காவாக்க லென்.**

எ-து தன்னுடைய கோபம் தனக்கு எளியவன் பேரில் செல்லத் தடையில்லை. ஆதலால் எளியவன் செய்த குற்றத்தையும் பொறுத்துக் கோபத்தைக் காட்டா தொழிக. அது சினமடங்கின லட்சணம். வலியுள்ளவன் பேரிற் கோபம் செல்லில் தெண்டனை வரும். அந்த இடத்திற் காக்கினும் காவாவிடினும் பிரயோசனமில்லை எ-று. 3

**304. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்**
**தன்னையே கொல்லுஞ் சினம்.**

எ - து தன் ஆத்துமாவை ரட்சித்துத் தன்னுடலுக்குத் துன்பம் வாராமற் காப்பது, கோபங் வருமாகினுங் கடிந்து பொறுப்பது. சினமே பிரதானமாய்ப் பிடித்துக் கோபத்தைக் காக்கப் பொறுமையில்லாவிட்டால் உயிருக்கு அழிவு வரும்படி உடலைக் கொல்லும் எ - று. 4

**305. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு**
**நிலத்தறைந்தான் கைபிழையா தற்று**

எ - து சினமென்னுங் கோபத்தைக் கொண்டவனுக்குக் கேடு வருவது தப்பாது. பூமியில் தன்னுடைய கையை அறைந்தால் கைக்கு விதனமேயல்லாமல் பூமிக்கு விதனமில்லை. அது போல அறிவு கெட்ட கோபம் எ - று. 5

**306. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்**
**ஏமப் புணையைச் சுடும்.**

எ - து சினமென்னுஞ் சண்டாளக் கோபம் வரில் உறவென்றும் பாராமல் சேர்ந்த பேரையுங் கொல்லும், கிளை உறவின் முறை தம்பி தமையன் அடுத்த கோத்திரத்தையுங் கொல்லும் நெருப்பிலும் கோபம் அதிகமாகும் நெருப்பு அடுத்த விறகைச் சுடும். கோபம் எல்லாரையுஞ் சுடும் எ - று 6

**307. நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்திற்**
**பகையும் உளவோ பிற.**

எ - து கோபத்தை விடுவது பெருமையென்றறியாத மூகன் சினத்தைக் கொண்டபோது முகத்துக்கு அழகான நகைப்பையும், மனத்துக்குப் பொறுமை யென்னுஞ் சந்தோஷத்தையும் சினம் கொன்று போட்டுச் சாந்தத்தை விரட்டிவிடும் கோபத்தைப் போலே பகை தனக்கு வேறும் உண்டோ? ஆதலால் சினத்தை அமைய வேணும் எ - று. 7

**308. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய**
**பிறத்த லதனால் வரும்.**

எ-து ஆர்மாட்டும் கோபத்தைச் செலுத்தாமல் காக்க வேணும். விடாமல் சினக்குதிரையேறினால் பொல்லாங்குந் துன்பமும் நரக வாதனையும் வருவது கோபத்தால் தப்பாது எ-று. 8

**309 இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்**
**புணரின் வெகுளாமை நன்று.**

எ-து பூங்கொத்தை அக்கினியில் இட்டாற் போலே ஒருவன் பொல்லாங்கு செய்த நிமித்தம் தான் அக்கினியில் விழுவது போலத் துன்பம் வந்தாலும் தண்மையினாலே கோபத்தை விடுவது நன்று எ-று. 9

**310. உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்**
**உள்ளான் வெகுளி யெனின்.**

எ-து நினைத்த காரிய மெல்லாங் கைகூடும் தன்மனத்திலே எள்ளளவாகிலுங் கோபம் வையாத சாந்த குணத்தானுக்கு எ-று. 10

வெகுளாமை முற்றும்.

## 32. இன்னா செய்யாமை

முனிவர்களாகிலும் கோபத்தாற் சபிக்கவும் பிறவுயிருக்குத் துன்பம் வரும்படி எண்ணலாகாது.

**311 இன்னா வெனத்தான் உணர்ந்தவை துன்னாமை**
**வேண்டும் பிறன்கட் செயல்.**

எ-து தன்மனத்துக்கும் பிறருக்கும் பொருந்தாத பொல்லாங்கு தன் சத்துருவுக்குஞ் செய்யக் கூடாது. அதுவன்றி ஒருத்தருக்கு இடுக்கண் செய்தால் தனக்கு வரும் பொருட்சேதமும் துயரும் வருவது தப்பாது எ-று. 1

**312. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.**

எ-து யாதாம் ஒருவனைப் பொல்லாங்காய் முற்பகை செய்து மோசம் பண்ணினால் தனக்கும் அது அவனாலேயாவது வலுத்தோரைக் கொண்டாவது அந்தப் பகை பின்னாலே தனக்குச் சத்துருவாய் முடியும். ஆதலால் ஒருத்தருக்கும் பொல்லாங்கு செய்ய வொண்ணாது எ-று. 2

**313. தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.**

எ-து தன்னுடைய சீவனுக்கு வேறே பொல்லாங்கு வந்தால் விசனப்படுவானே அப்படி யென்றறிந்து வேறொரு சீவனுக்கும் பொல்லாங்கு செயவேண்டாம். அந்த உயிருக்குப் பகை நினையா விட்டால் அது தனக்கும் பகையில்லை எ-று. 3

**314 நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.**

எ-து ஒருவன் செய்த துன்பப் பகைக்கு வதில் நினைப்பான் கொடிய பாவி. நல்லோர்கள் துன்பஞ் செய்கிறவனுக்கும் நன்மை செய்ய நினைப்பார்கள். ஆதலால் ஒருத்தருக்குத் துன்பஞ் சிறிதாய் நினைப்பினுந் தனக்கு அதிகத் துன்பம் வரும் எ-று. 4

**315. செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும்.**

எ-து தான் ஒருத்தருக்குப் பொல்லாங்கு செய்யாதிருக்கவும் இடரே செய்து கொண்டிருக்கிற தன்னுடைய சத்துருவுக்கும் அவகடம் நினையாமல் இருக்கும் நல்லோர்களுக்குப் பொறுமை யென்னுந் தயவினாலே பகை செய்தோன் தன்னாலே கெட்டு ஒருகாலுங் கரையேறாத நரகத்தைக் கொடுக்கும் எ-று. 5

**316. கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.**

அவாயீன்றானபோது தன்னுடைய மனங் கன்றும்படி வேண்டிய பொல்லாங்கு செய்யினும், குற்றந் தீர்ந்த பெரியோர் பதில் பொல்லாங்கு செய்ய நினையார் எ-று. 6

**317. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.**

எ-து சிறப்பென்னும் எட்டு வகைப் போகம் பொருந்திய மகாசெல்வம் பெற்றாலும் பிறருக்கு விதனஞ் செய்து பகை கொள்ள நினையார் கனாவிலுங் குற்றமற்ற நல்லோர்கள் எ-று. 7

**318. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை.**

எ-து ஆருக்காகினும் எவ்வளவாகிலும் எப்போதும் இடருள்ள பகை நினையாமல் மனத்திலும் வஞ்சம் நினையாமல் இருப்பது மோட்சத்துக்குத் தலைமை எ-று. 8

**319. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.**

எ-து தனக்குப் பகைக்காரனுக்கும் நன்மை செய்வது மோட்சத்துக்குத் தலைமை எ-று. 9

**320. அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக் கடை.**

எ-து வேறொரு சீவனுக்கு வந்த அவதி தனக்கு வந்தது போலே பாராதவன் எத்தனை நூல்களைக் கற்றும் நல்லோர் சொன்ன அறிவைக் கேட்டும் பலனில்லை. ஆதலால் அறிவென்னும் பொருளைக் கொண்டிருக்க வல்லவன் பிறர் துயரந் தன்துயரென்றஞ்சுவானாகில் கேடில்லாத கெதியினை அடைவான் எ-று. 10

இன்னா செய்யாமை முற்றும்.

## 33. கொல்லாமை

ஒருவருக்குப் பொல்லாங்கு செய்யாதது சொல எந்த உயிரையுங் கொல்லாமை.

**321. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.**

எ - து தரும நெறியென்பது எந்த வுயிரையும் வதை செய் யாமலிருப்பது. யெயம் பண்ணுங் கொலை பூமியில் தனக்குச் சருவ வினையும் ஆத்துமாவுக்கு விதனமும் வரும். எ - று. 1

**322. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.**

எ - து தரும நெறியெல்லாம் ஒன்றாகத் திரட்டிய தவம் ஏதெனில் யாதொரு சீவனையுங் கொல்லாம லிருப்பது. அதிலும் பெரிது எப்போதும் கொல்லான் எவ்விதப் பொய்யும் வராமற் காப்பது எ - று. 2

**323. பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.**

எ - து தான் பெற்ற செல்வமெனும் பொசிப்பைத் தேகி என்பார்க்குப் பகுத்துக் கொடுத்து ஒரு உயிரையுஞ் சேதப்படுத் தாமல் தன்னுயிர் போலச் சகல உயிரையும் பாதுகாத்தும் நிலை நிற்பது சகல நூல்களும் ஆராய்ந்த பெரியோர் சொல்லுந் தரும வழிக்குத் தலையானது எ - று. 3

**324 நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழும் நெறி.**

எ - து நல்லோர் என்னும் பேர் கொண்டு புண்ணியம் புரிவது ஆர் என்று விசாரிக்குமிடத்தில் யாதொரு சீவனையுங் கொல்லாமல் தயவு பொருந்துவதே ஒழுக்கநெறி எ று 4

**325. நிலையஞ்சி நீத்தாருள் எல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.**

எ - து ஆக்கையை நிலையாமையென்று எண்ணி மூன்றாசை துறந்து பஞ்சப்பொறிகளையும் வென்று ஆறாதாரமும் அறிந்து குரு நிலையை விடாத உறுதி யெண்ணும் நல்லோரினும் கொல்லா விரதங் கொண்டவன் பெரியவன் எ - று. 5

**326. நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை.**

எ - து ஓர் உயிரைக் கொன்று போட்டு இதனாலே அனேகம் செல்வம் பெற்று நிலைக்குமென்று நம்பி வதை பண்ணினால் ஈடேற்றமு மில்லை. அந்தச் செல்வமும் சடுதியிற் கெடும் எ - று. 6

**327. கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.**

எ - து நல்லகுலத்திற் பிறந்த பெரியோரானாலும் கொலை நினைப்பானாகில் அவனே புலையனாகும். பாவத்தின் சொரூப மாவது புலைத்தன்மையாதலால் கொலை நினைக்கா தொழிக்க எ - று. 7

**328. உயிருடம்பு நீக்கியா ரென்பர் செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.**

எ - து எமனானவன் உயிரை மாத்திரங் கொண்டு போவான் ...திலுங் கொடிதாய் உயிரையுங் கொன்று உடலையும் விடாத ...காலைகாரப்பாவி யென்று முற்செனனத்திற் செய்த வினை ...ப்போது அறியும்படி திட்டாந்திரம் எந்நேரமும் வியாதி ...ளனாய்ச் சரீரங்குறைவனாயிருந்து நீசம் பொருந்தி எவ் வளையும் துயரப்படுந் தரித்திரியக்காரனாம் கொலை செய்யும் ...ரவி அப்படி வருமென்று அறிந்து கொலை விடுக்க எ - று. 8

**329 கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்**
**[ நாள்மேற்**
**செல்லா துயிருண்ணுங் கூற்று.**

எ-து யாதொரு சீவனையும் கொலை செய்யப்படாது என்று நிலையான விரதங் கொண்ட சற்புத்திரன்மேல் எமன் வரப் பயப்படுவான் இவனாலே ஒரு உயிருக்குஞ் சேதமில்லை. இவனு யிரை எப்படி அழிப்பம் என்று எண்ணி அஞ்சுவான் எ-று. 9

**330. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி**
**தின்னுயிா நீக்கும் வினை.**

எ-து தன்னுயிர் துறக்குங் காலமும் இது பிழைக்கும் என்று ஆடு கோழி பன்றியினைப் பலி கொடுக்கப் பிரார்த்தனை செய்யான். அது ஏதெனில் இந்த உயிரினாலே தன் பிராணன் பிழையாதென்றுந் தனக்குள்ள வாணாள் தப்பாது வீண்பாவம் ஏன் கைக் கொள்கிறோமென்றும் கொலைக்குப் பொருந்தார் நல்லோர். சகல வுயிரையுங் காப்பாற்றுவாரே பெரியோர் எ-று. 10

கொல்லாமை முற்றும்.

## 34. நிலையாமை

நில்லாதென்று ஆக்கை இளமை செல்வத்தைக் குறித்துக் காட்டுதல் பயன்.

**331. நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை.**

எ-து நீர்க்குமிழ் போன்ற தேகமும் செல்வமும் நிலைமை யல்ல வென்று அறியாமல் நிற்குமென்று சந்தோஷப்படும் புல்லறி வாளனே கடையானவன். அவன் புத்தியும் ஈனப்படும் எ-று. 1

**332. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல.**

எ-து ஒருபோதாவது ஆக்கை நிலை நின்று வாழுவோம் என்று அறியாத புத்தியீனர் கருதி நினைப்பது இந்தச் சீவனுக்கு வேண்டின ஈறன்றாசையிற் பிறந்த எண்ணிக்கைகள் கோடியும் அல்ல பலவாயுள்ளது. கற்பாந்தரத்துக்கு மேல் இருப்பம் என்னும் சிரஞ்சீவி நினைவெல்லாம் நினைத்துச் செய்வர். கண மாகினும் நிலையாத வாழ்வை நம்பி எ-று. 2

**333. நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்**
**பெருமை யுடைத்திவ் வுலகு.**

எ-து நேற்று இருந்து சகல வல்லமையும் பேசித் தன் செல்வமே திரமென்கிற ஆணவத்தோடும் இருந்த பலவான் இன்றைக்கு ஒன்றுமறியாமல் இறந்துபோனான் என்று பேசுங் கேள்வியான பெருமை இந்த உலகின் கண்ணே உண்டா யிருந்தும் தனக்கும் அப்படியென்று அறியான் புல்லன் எ-று. 3

**334. நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்**
**வாள துணர்வார்ப் பெறின்.**

எ-து ஒருநாள் இருநாள் வாரம் மாசம் வருஷங்களை ஒரு நாள்போற் காட்டி வருவது உயிரைக் குறைக்கும் வாளே சூரிய உதயமும் அஸ்தமனமும் இதுவறிந்து அறிவானபேர் ஆக்கையை நிலைப்படுத்தாமல் மோட்சக் காரணந் தேடுவார். அது அறி யாமல் கொடுமை செய்யும் செல்வப் புல்லர் நிலைப்போமென்று வாழ்வார். கொடுமைச் செல்வம் நிலையாது ஒருநாட்போலி ராதே தன்கை ஆயுதம் ஒருவேளை தனக்குப் பகையாகும் செல்வக் கொடுமையும் தன்னை வயப்படுத்தும் எ-று. 4

**335. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளிந் தற்று.**

எ-து கூத்தாடுமிடத்திற் பல கூட்டங்களுங் கூடி அனேக விநோதஞ் செய்யும். (அது) போலே செல்வமும் தவச தானியம் பொருள் நகை ஆடு மாடுடன் அனுபவ விநோதப் பெருமையாய்ச் சேரும்போலிருக்கும். அழிகிற காலத்தில் கூத்தொழிந்து குலைந்து போன சபை நிகராய் இந்தச் செல்வமும் பலவிதத் தோங்கிடமாயப் போனவிடந் தெரியாமற் போய் விடும். ஆதலாற் செல்வமுள்ளபோது தருமந்தேடுவான் அறிவன் எ-று 5

**336. அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்**
**அற்குப ஆங்கே செயல்.**

எ-து முன் செய்த தவத்தினாலே அளவில்லாத இயல் பொருந்திய செல்வப்பேறாம். அது பெற்றால் அந்தச் செல்வம் நீடிக்கும் படிக்குத் தானதர்மம் பல உபகாரஞ் செய்ய வேணும். அது இல்லையாகில் மறுசெனனம்; இல்லாத பிறவியாவான் எ-று. 6

**337. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யப் படும்.**

எ-து செல்வமான நாளெல்லாம் நல்ல புத்தி வந்து தருமம் செய்யும். பின்னுக்குச் செல்வம் வேண்டி முன் செய்த வினை வருகிற காலத்தில் அவகுணங்களைக் கொடுத்துத் தருமத்தைக் கெடுதலைப்பண்ணித் தன்னையுங் கெடுத்துப் போடும் எ-று. 7

**338. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே**
**உடம்போ டுயிரிடை நட்பு.**

எ-து பட்சியானது கூட்டிலேயிருந்து அப்பாற் பறந்தது போலும்; முட்டையிலிருந்து குஞ்சு வெளியேறினது போலும் உடம்போடு சீவனென்னும் உயிரிடை நட்பு எ-று. 8

**339. உறங்கு வதுபோலுஞ் சாக்கா டுறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு.**

எ-து பூமியிலே பிறப்பதும் இறப்பதும் எப்படி யென்றால் விழிப்பது போலே பிறப்பு, உறங்குவது போலே மரணம். இது அறியாமல் வெகு நாளைக்கு இருப்பதாய் எண்ணிச் சஞ்சலப் பட்டு வெகு ஆசை நினைப்பார் அறிவீனர். நீண்ட உறக்கம் 9
நீண்ட விழிப்பாஞ்சகம் எ-று.

**340. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சில் இருந்த உயிர்க்கு.**

எ-து பிச்சை யெடுத்தாலும் செல்வம் பெற்றாலும் உயிருக்குப் பொசிப்புந் தருமமுந் துணையன்றி வேறில்லை. அய்யமெடுத்தாலும் தன்னிடத்திலே யிருந்து தன்னாலியன்ற மரியாதி பிற உபகாரஞ் செய்யுந் தர்மந் தன்னுயிர் கெதி பெறும். அது சிவன்றிச் செல்வக்காட்சி பெறுவது பின் துணையில்லை எ-று 10

நிலையாமை முற்றும்.

## 35. துறவு

ஆசா பாசந் தள்ளி உபதேச நெறி நிற்பது துறவு என்று அறிவிக்கப்படுவது.

**341. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்.**

எ-து துறவு ஏதெனில் அவாவென்னப்பட்ட ஆசாபாசத்தையும் நீங்கி, யாதொன்றிலும் பற்றில்லாமல் தன்னையறிந்த காரணகுரு உபதேசப்படி நின்று, காமக் குரோத லோப மத மாற் சரியமென்னு மார்க்கத்து வேஷங்களையுங் கடிந்து நிற்பது துறவு. இதுவன்றிப் பாச வழியால் துறவு என்பது பிழைக்கும் 1
பொருட்டு எ-று.

**342 பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்**
**பற்றி விடாஅ தவர்க்கு.**

எ-து நல்ல காரண உபதேச நிலையைப் பற்றி விடாமற் கொண்டு இடும்பை யென்னும் மனத்துயரம் வராமல் நினைப்பை மாற்றுவானே துறவி. அப்படியல்லாமற் சகமாயையிற் சிக்கிக் கோப மதமாச்சரியம் பற்றுவான் துறவி என்பது கன்ம அநுபவம் எ-று. 2

**343. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க**
**லுற்றார்க் குடம்பு மிகை.**

எ-து அறிவன் நால் முறை தெளிந்து, விட்ட குறைப்படியே உபதேச நெறி தெளிந்து சென்ம வினையறுக்க வல்லார்க்கு எப் பொருளினும் உடுக்கும் ஆடையினும் உண்ணும் அன்னத் தினும் பிராந்தியில்லாமல், தன்னுடைய சடலமுந் தனக்குக் கனமாயிருந்து, இந்தச் சுமையை எப்போது விட்டு விடுவோ மென்றிருப்பார் எ-று. 3

**344. இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை உடைமை**
**மயலாகு மற்றும் பெயர்த்து.**

எ-து ஆரேனும் துறவாகிய விரதங் கொள்ளுமிடத்து எவ் வுயிருங் கொன்று தீமைசெய்யவும் படாது. செல்வத்தின் மயலு மாகாது. இந்தப் பகை வந்து நேரிடில் தான் பிடித்த விரதந் தனக்கு இன்பங் கொடாது எ-று. 4

**345. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்**
**குயர்ந்த வுலகம் புகும்.**

எ-து நான் நான் என்று அகங்கரிக்கும் போலான ஆணவ மாயை யறுத்து அவாவை அறுக்க வல்ல துறவியென்னும் பெரி யோரைத் தேவலோகத்துக்கு அதிகமாகிய மேலுலகங்க ளெல்லாங் கொண்டாடிக் கீர்த்தி பெருகும் எ-று. 5

**346. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி**
**வலைப்பட்டார் மற்றை யவர்**

எ-து துறவென்னும் நல்ல நெறியிலே தலைப்பட்டுப் பொறிபுலன்களைக் களைந்து ஆத்துமாவை மோட்சம் பெற வைக்க வேணுமென்று துணிந்த தீரர் தவசினாலே சொர்க்கத் துக்குந் தலைமையாவர். இரண்டு நாட் சந்தையென்னுங் கொஞ்ச இன்பத்துக்கு ஆசைப்பட்டுப் பிறவி வலையில் உழன்று திரிவார் பாசத்தார் எ-று. 6

**347. வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின்**
**ஈண்டியற் பால பல.**

எ-து ஆத்துமாவை ரட்சித்துச் சுவாமி கிருபை வேண்டி யிருந்தால் நல்ல நெறியிலே துறக்க. மூன்றாசையுஞ் செயித்த நிராசையானது துறவு. அந்தத் துறவிக்கு மனத்தில் நினைத்த இஷ்டங்களெல்லாம் வேண்டியபடியே வலிய எதிர் வரும் எ-று. 7

**348. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்**
**வேண்டிய எல்லாம் ஒருங்கு.**

எ-து அடருகிற ஐம்புலனென்னும் மனப்பாச்சலை ஆசான் நூல் தியானம் செலுத்தும் அறிவு இதனாலே அடுதல் வேண் டும் எவ்விதமும் விடல் வேண்டும். மனத்தின் வேகம் நின்ற வுடனே பிறவிப்பகையும் சூரிய கிரகணம் பட்ட பணிபோலாகி வேண்டிய ஒழுங்கும் தவநெறியும் நிலைக்கும் எ-று. 8

**349. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று**
**நிலையாமை காணப் படும்.**

எ-து அறுசுவையினும் பற்றற்று நிற்கின்ற ஞானக் கண் ணுடையனாய் ஒருமனப்படுபவனே சென்மப் பிணியென்னும் பரவைச் சமுத்திரங் கடப்பன். அல்லாதவன் நிலையாமை வாழ்க்கையில் தோன்றும் இச்சையிற் கட்டுப்படுவான் எ-று. 9

**350. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு.**

எ - து சகல சீவனுக்கும் அண்ட பிண்ட சராசரத்துக்குந் தானவையும் அல்லவுமாயிருந்தும் பற்றற்ற பகவான் ஸ்ரீ பாதத்தை ஒருமனதாய்ப் பற்றுக வேண்டி, அறிவு நூல் முறையே பற்றி அவா வினையென்னும் ஆசையைப் பற்றறுத்துச் சகல செந்துந்தானென்றும் பற்றாய் விகற்பமற்றுத் தேகப் பற்று விடல் துறவாயிற்று. துறவு மேலான மோட்ச வீடு. ஆத்துமாவைச் சுகத்திலிருந்துந் துறவு எ - று.

துறவு முற்றும்.

---

## 36. மெய்யுணர்தல்

---

இருளென்னும் மனப்பொய்யை வென்று அருளென்னும் மெய்யறிவை அறிவது.

**351. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே**
**மெய்யுணர் வில்லா தவர்க்கு.**

எ - து மெய்யுணர்வாகத் தன்னை அறிவென்று அறியாத மூகன் ஒரு காரியம் எடுத்துச் செய்யத் தவறினாலும் கூடினாலும் தெய்வச் செயலென்று பயப்பட்டு அறியான் மூர்க்கமே பெரிதாய்ச் செலுத்திக் கெடுவான். அவன் மெய்யை அறிந்தவனல்லன் எ - று.

**352. இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி**
**மாசறு காட்சி யவர்க்கு.**

எ - து மனந் துயரப்படும் ஆசையென்னும் மருள் நீக்கிக் குற்றமில்லாத அறிவானந்தக் காட்சி கண்ட பெரியோரிடத்தில் இருளாகிய கர்ம வினையுடன் மதி மருட்சி யென்னும் விவேகத் தாழ்ச்சி வராது நல்லின்பமே விளைவாயிருக்கும் எ - று. 2

**353. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்**
**வானம் நணிய துடைத்து.**

எ - து ஐய வுணர்வாகிய சந்தேகம் ஒருக்காலும் இல்லாமல் பிரம சிந்தனையே தவமாய்த் தெளியுஞ் சுத்தபுருடன் பூமியிலே சிறிதுகாலமிருந்து சகல இஷ்ட காமியமும் அனுபவித்துப் பின்பு வானோர் புகழும்படி சொர்க்கத்திலும் இருப்பான் எ - று 3

**54 ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்**
**பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.**

எ - து ஒருமனங்கொண்டு பஞ்ச பூதங்களை வேறுபடுத்தி உள்ளத்து உணர்வென்னும் அறிவை அறிந்து ஒருமைப்பாடாக இருந்து தவஞ் சாதிக்கும் மெய்யறிவோர்க்குச் செனன மரணம் வேண்டா; கடைசிப்பிறப்பு எ - று. 4

**355. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு.**

எ - து பூலோகத்திலே கல்விப்பொருள் செல்வப்பொருள் தருமப்பொருள் சகலமும் ஆராய்ந்து கரை கண்ட செல்வமுடைய பெரியோராயினும் அப்பொருளுக்கும் அதிகமான உள்ளுணர்வாகிய பிரமப் பொருளைத் தெளிந்து காண்பதே அறிவுடைமை எ - று. 5

**356. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி.**

எ-து வேதாந்த சித்தாந்த ஞான நூல்களைக்கற்று உணர உணர்ந்து அடக்கமாய் அதின்வழி தேறி, அழிவில்லா மெய்ப் பொருளென்னும் நித்தியானந்தத்தில் தலைப்பட்டு வெளியிற் கலந்த சீவன்முத்தர்கள் மறுகாப் (மீண்டும்) பூமியின்கண் உற்பவியார் எ-று. 6

**357. பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்**
**மருளானாம் மாணாப் பிறப்பு.**

எ-து பொருளாகிய மோட்சமென்னும் பிரமசொரூப மெய் யுணர்வு என்னும் இந்தப் பொருளை விட்டுப் போட்டுப் பத்தியில் லாதார் அல்லாத அவற்றைப் பொருளென்னும் நிலையாத, அவ கீர்த்திக்குட்பட்ட, தன் ஆக்கையும் சம்பத்து(ம்) என்னும் வாழ் வுக்குட்பட்டு மருண்டு, நிதசரி (நாள்தோறும்) மனத்துயர் ஆயாசை வளர்ந்து பிற விசாரத்து உழலுவார் எ-று. 7

**358. சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்**
**சார்தரா சார்தரு நோய்.**

எ-து ஆத்துமாவுக்குச் சார்பாகிய மெய்ம்மையைக் குரு முகாந்திரத்திலே யறிந்திருந்தும் அதை அனுசரியாமல், உயிர்த் துணைக்காக வேண்டிய நிசங்களை விட்டுப்போட்டுப் பஞ்சபாதக மென்னும் பொய்யான அதன்ம காரியங்களைச் செய்யப்பட்ட வன் இந்த சென்மத்திலே நோயுந் தரித்திரியமு மிகுந்து பரத் துக்கு ஆளாகாமல் நரகத்தில் அழுந்துவான் எ-று. 8

**359. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்**
**நாமம் கெடக்கெடும் நோய்.**

எ-து ஆசை கோபஞ் சந்தேகம் இந்த மூன்றினாலே வரப் பட்ட துயரத்தை வேரோடறுத்து நிக்கிரகம் பண்ணி மெய்யை அறிந்து சதாகாலமும் அறிவு பொருந்தியிருக்கப்பட்ட பெரியோர் களிடத்தில் முற்பாவகமான தீவினையும் அதைச் சார்ந்திருந்த நோயும் நாளிலே கெட்டு அதிகத் தெளிவுடையராவர் எ-று. 9

**360. பிறப்பென்னும் பேதைமை நீக்கிச் சிறப்பென்னும்**
**செம்பொருள் காண்ப தறிவு.**

எ-து பிறவி சாகரமென்னும் பேதைமையைத் தவிர்த்து நிசத்தை அறிவது எதனாலே என்றால், சிறப்பாகிய ஞான யோகங்களைக் குருமுகாந்தரத்தில் அடுத்துக் கற்று, அவை அறிந்து அப்பியாசம் பண்ணி ஆறாதாரங்களையுங் கண்டு மும்மண்டமுங்கடந்து செம்பொருளென்னும் அழிவில்லாத சுட ரொளித் தெரிசனம் பெற்று, முத்தி பெறும்படியுள்ள பொருள் களையும் அறிவதே மெய்யென்னும் அறிவுக்குள் அறிவென்றும் 10
அறிந்து கொள்க. எ-று.

மெய்யுணர்தல் முற்றும்.

---

## 37. அவா வறுத்தல

---

**361. அவாவென்ப எல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றும்**
**தவாஅப் பிறப்பீனும் வித்து.**

எ-து எல்லாவுயிர்க்கும் ஒரு காலத்தில் கெடாது பிறப்பினை விளைக்கும் வித்து அவாவென்னும் ஆசையைச் சொல்லுவர் நூலோர். உடம்பு நீங்கி உயிர் போங்காலம் தான் செய்த இரு வினைப்படியே மெய்ஞ்ஞானமென்னும் அறிவை மோக மறைப்ப அவ்வுயிரை அவாவென்னும் ஆசை பற்ற இதனாற் பிறப்புண்டா யிற்று எ-று.

**362. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.**

எ-து முடிவிலாத் துன்பம் தரும் பிணி மூப்பு மரண துயர மென்னும் பிறப்புக்கு அஞ்சுவான் பிறவாமையை வேண்டுவன். பிறவாமை யென்னும் நெறியாவது யாதொரு பொருளையும் வேண்டாமை யிருப்பது அவாவினால் இப்போது சற்று இன்பப் பட ஒருபொருளை வேண்டின் தானேயுண்டாம் பிறப்பு எ-று. 2

**363 வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்.**

எ-து ஒரு பொருளையும் வேண்டி அவாவு கொள்ளாம லிருப்பது மேலான செல்வம் அதற்கொப்பான செல்வம் இவ் வுலகில் இல்லை. அதுதவிர மக்கள் செல்வம் தேவர் செல்வம் மேன்மேல் நோக்கியது. கீழ்மையான இச்சை அவாவு வேண் டாமை துறவின் கண் எ-று. 3

**364. அற்றவர் என்பார் அவாவற்றார் மற்றையார்
அற்றாக அற்ற திலர்.**

எ-து சென்னம் அற்றார் என்பது அவா அற்றாரை; ஆசை விடாதவரைச் சென்னம் விடாது எ-று. 4

**365. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.**

எ-து உயிர் இச்சைப்படும் குற்றம் நீங்குதல் முத்தி வீடென்று சொல்லப்படும். இச்சையறாத யோக ஞானம் சில துன்பங்கள் அற்றதல்லது அவரைப் போலப் பிறவி யற்றிலர் எ-து. 5

**366. அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை**
**வஞ்சிப்ப தோரும் அவா.**

எ-து மெய்யுணர்தற் பொருட்டு முத்தி பெற வேண்டிக் குருவழியிற் புகுந்து அதனை இடைவிடாமல் வேண்டலையாகின் பிறப்பின் கண்ணே வீழும்படி கெடுப்பதாகும். அவாவென்னும் இச்சைக்கு அஞ்சிக் காப்பது துறவறமாம். அதுவன்றி அநாதி யாய் வரும் ஆசை ஒருவழிப்படாமல் திடமாக அவனறியாமற் புகுந்து பழைய பிறப்பை யுண்டாக்கும். அதனை வஞ்சித்து உயிர்க்காம் எ-று. 6

**367. அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை**
**தான்வேண்டும் ஆற்றான் வரும்.**

எ-து அவாவென்னும் ஆசை வராமற் கெடுக்க வல்லவன் விரும்பு நெறி தானே யுண்டாம். கேடான பிறவித் துன்பத்தில் ஆழ்த்தும் அவாவை வஞ்சித்து முற்ற அறுத்தானுக்கு வேறே தருமமான மெய்-வருத்தமும் படவேண்டாம் எ-று. 7

**368. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம்அஃ துண்டேல்**
**தவாஅது மேன்மேல் வரும்.**

எ-து இச்சைப்படாதார்க்கு வரக்கடவ தொரு துன்ப மில்லை. புறத்தே ஒரு பொருளன்றி மனத்துள்ளே அவாமுகந் தோன்றில் எல்லாத் துன்பங்களும் இடைவிடாமல் வரும். ஆசையே துன்பத்துக்கும் பிறவிக்கும் காரணமாம் எ-று. 8

**369. இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னுந்**
**துன்பத்துள் துன்பங் கெடின்.**

எ-து அவாவென்று சொல்லும் மிக்க இச்சைத் துன்பம் வராமல் கெடுமாகில் முத்தி வீட்டின்பம் உடலோடும் பெறுவன். துன்பங்களெல்லாம் இன்பமாக வரும். துன்பம் விளைந்த இடமே அவாவின் தோற்றம். அது கெட்டாற்கு மனந்தடு மாறாது எ-று. 9

**370. ஆரா வியற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா வியற்கை தரும்.**

எ-து ஒருகாலும் நிரம்பாத அவாவு தாமேயன்றித் தம்பய மில்லாமல் வேண்டாத பொருள்களை வேண்டி மேன்மேலும் நில்லாமை வளரும். அப்படி வளரும் அவாவை நீக்கின காலம் பிறப்புப் பிணி மூப்பு மரண முதலான துன்ப மேவாத அழி வில்லா இன்ப வீட்டைப் பெறுவான் எ-று 10

அவாவறுத்தல் முற்றும்.

---

## 38. ஊழ்

---

**371. ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி.**

எ-து இருவினைப்படி அறிவும் பொருளும், இன்பமும், துன்பமும் இம்மையும் மறுமையும் வீடும் முற்பிறப்பிற் செய்த நியதியைத் தெய்வ நீதிப்படுத்தி ஊழ் விதிப்படி வருதலால், ஒரு பொருளைப் பெறுங் காரணம் முயற்சியுண்டாம். அது கெடும்படி அழிவுள்ள புத்தியுண்டாம். இது ஊழ் விதிப்படி எ-று. 1

**372. பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை.**

எ-து எல்லா அறிவும் உள்ளவனுக்குக்கைப் பொருள் இழக்கும்படி விதிவந்த இடத்தில் அவனைப் பேதைமையாக்கி விடும். அறிவு சுருங்கி மூடனாயிருப்பினும் பொருள் வளர விதி வந்த இடத்தில் அவனை மேன்மைப் படுத்திச் செல்வம் விரிக்கும் எ-று